Acc
No 25364

கழக வெளியீடு




# சைவ ஆகமங்கள்

## ஓர் அறிமுகம்

டாக்டர் எஸ்.பி.சபாரத்தினம்,
எம். ஏ.,பி.எச்.டி.

# சைவ ஆகமங்கள்

## ஓர் அறிமுகம்



டாக்டர் எஸ். பி. சபாரத்தினம், எம்.ஏ., பி.எச்.டி.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 25364

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட்.,
154, டி.டி.கே. சாலை, சென்னை-600 018.

(C) சாளவேடு பட்டுசாமி சபாரத்தினம் (1942)

THE SOUTH INDIA SAIVA SIDDHANTHA
WORKS PUBLISHING SOCIETY TLY. LTD.

கழக வெளியீடு 1922

கிளைகள் :

திருநெல்வேலி-6, மதுரை-1, கோயமுத்தூர்-1
கும்பகோணம்-1' திருச்சி-2, சேலம்-1.

*பதிப்பு 1 : ஆகஸ்டு 1982*
*(நாதமெனும் கோயிலிலே)*
*பதிப்பு 2 : திசம்பர் 1992*

Q 23
N 92

**SAIVA AGAMANGAL**

ORE ARIMUGAM

அழகு அச்சகம், சென்னை-4,

73-3

# பதிப்புரை

தமிழகத்தின் பழம்பெரும் சமயமான சைவத்தின் பெருமையையும் பழைமையையும் எடுத்துக்கூறுவன சைவ ஆகமங்கள். இந்து சமயத்திற்கு அடிப்படையாக அமைந்தவை வேதங்கள். சைவத்திற்கு அடிப்படை ஆகமங்கள் காமிகம் முதல் வாதுளம் ஈறாக இருபத்தெட்டு ஆகமங்கள் இருந்தன என அறிகிறோம். ஆனால் இவை இன்று கிடைப்பதில்லை.

ஆகமங்களை நேரடியாகக் கற்கும் பேறு எல்லார்க்கும் கிட்டுதல் அரிது. இந்நிலையில் ஆகமங்கள் என்ன கூறுகின்றன என்பதையாவது ஒவ்வொரு சைவனும் அறிந்திருக்க வேண்டும். 'வேதம், ஆகமம் எனப்படும் இரண்டும் முதல்வனால் அருளப் பெற்ற மூல இலக்கியங்கள்' என்று கூறப்பெறினும் வேதங்களைப் பாதுகாத்த அளவிற்கு ஆகமங்களைப் பாதுகாக்கச் சைவர்கள் தவறிவிட்டனர்.

எளிமையான உபாயங்களால் ஆன்மாக்களுக்கு முத்தியைக் கொடுக்கின்றமையால் சைவசாத்திரங்களான ஆகமங்களே கைக் கொள்ளத்தக்கன என்பது சத்தியோ ஜோதி சிவாசாரியாரின் கூற்று. வேத சாத்திரங்கள் பிருதிவி தத்துவம் முதலான இருபத்து நான்கு தத்துவங்களைப் பற்றியே கூறா நிற்க பூமி முதல் நாதம் வரையான முப்பத்தாறு தத்துவங்களைச் சிவாகமங்கள் மட்டுமே விவரித்துக் கூறுகின்றன.

இத்தகு சிறப்புமிகு ஆகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு பகுதிகளை உடையன. நாம் செய்த தவக் குறைவால் நான்கு பாகங்களையும் கொண்ட முழுமையான ஆகமங்கள் பெருமளவில் கிடைக்காமல் போயின.

சிவாகமங்களைப் பயின்று சிறந்து விளங்கும் ஒருவரைக் கொண்டு ஆகம அறிமுக நூல் வெளியிட வேண்டுமென்ற எண்ணம் இந்நூல் வழி நிறைவேறியுள்ளது.

இதனைச் சிறப்பாகச் செய்துள்ளவர் சென்னைப் பல்கலைக் கழக சைவசித்தாந்தத் துறையில் துணைப்பேராசிரியராய்த் திகழ்ந்த டாக்டர் எஸ்.பி. சபாரத்தினம் ஆவர். தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நல்ல புலமையுடையவர் இவர். இறையருள் கூட்டுவித்தால் இவர் ஒவ்வொரு ஆகமத்தைப் பற்றியும் தனித்தனியாக அறிமுக நூல் எழுதித் தரச் சித்தமாக உள்ளார். இறையருள் கூட்டு விக்கும் என்று உறுதியாக நம்புவோம்.

சைவப் பெருமக்கள் இதனைப் படித்துப் பயன் பெற வேண்டுமெனப் பெரிதும் விரும்புகிறோம்.

— சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# முன்னுரை

வேதங்கள் எத்தனை, அவை எவற்றைப் பற்றிக் கூறுகின்றன என்பன போன்ற கேள்விகளுக்குப் பலரால் விடையளிக்க முடியும். ஆனால் ஆகமங்கள் என்பவை யாவை, அவை எவற்றைப் பற்றிக் கூறுகின்றன என எழுப்பப்படும் வினாக்களுக்கு விடையளிப்பது அவ்வளவு எளிதன்று. வேதப் பயிற்சி மிகுந்துள்ள அளவிற்கு ஆகமப் பயிற்சி இல்லாமையே இதற்கு முக்கிய காரணம் எனக் கூறலாம். வேதத்தோடு ஒத்த பெருமையும் பழமையும் உடைய சிவாகமங்கள் எவ்வாறு தோன்றின, அவற்றில் விளக்கிக் கூறப்பட்டிருக்கும் கருத்துக்கள் யாவை என்பனவற்றைக் குறித்துப் பொதுவான முறையில் விளக்க வேண்டும் என எழுந்த முயற்சியின் விளைவே இச் சிறு நூல். சிவாகமங்களைக் குறித்துப் பொதுவாக அறிந்து கொள்வதற்கு இந்நூல் துணை செய்யும்.

'நாதமெனும் கோயிலிலே' என்ற தலைப்பில் முதன் முதலாகச் சிவாகமங்களைப் பற்றித் தமிழில் எழுதப்பட்ட நூலைத் தமிழுலகம் விரும்பி வரவேற்று ஏற்றுக் கொண்டது. சைவ ஆகமங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்ற உணர்வு இப்பொழுது மக்களிடையே எழுந்துள்ள நிலையையே இது புலப்படுத்துகின்றது.

இந்நூலை இரண்டாவது பதிப்பாக வெளிக்கொணர மிகவும் ஆர்வம் காட்டி ஆவன செய்தருளிய சைவத்திருவாளர்

இரா. முத்துக்குமாரசாமி (ஆட்சியாளர், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.) அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியையும் கடப்பாட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன். 'சைவ ஆகமங்கள்—ஓர் அறிமுகம்' என்ற தலைப்பில் இந்நூல் இப்பொழுது வெளியிடப்படுகிறது.

சிவாகமங்களின் ஞானபாதத் தொடர்பான கருத்துக்கள் இந்த இரண்டாம் பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

சென்னை-40
10-12-92

அன்பன்
சபாரத்தினம்.

# உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| *1*. | மரமும் கனியும் | *1* |
| 2. | சிவாகமங்களின் தோற்றம் | 7 |
| 3. | மூல ஆகமங்கள்-உபாகமங்கள் சார்பு நூல்கள் | 24 |
| 4. | சிவாகமச் செய்திகள் | 31 |
| 5. | ஆகம உரையாசிரியர்கள் | 83 |
| 6. | பொதுவும் சிறப்பும் | 93 |
| 7. | சிவாகமங்களின் ஞானபாதமும் சைவ சித்தாந்தமும் | 102 |



# சைவ ஆகமங்கள்

## ஓர் அறிமுகம்

## 1. மரமும் கனியும்

முனிவர் ஒருவர் தம் சீடர்களுடன் காட்டுவழியே சென்று கொண்டிருந்தார். வழியின் ஓரத்தில் இரண்டு பொற்காசுகள் இருப்பதைக் கண்டான் சீடர்களுள் ஒருவன். அவற்றை எடுத்து முனிவரிடம் கொடுத்தான். முனிவர் அவற்றை வாங்கிக்கொண்டு சீடனைக் கேட்டார் :

''இவை இரண்டும் என்ன?''

''பொற்காசுகள், ஐயா!''

''தவறு. இவற்றுள் ஒன்றுதான் இயற்கையிலேயே பொற்காசு. மற்றொன்று முதலில் செம்பாக இருந்து பிறகு ரசகுளிகையின் சம்பந்தத்தால் பொன்னாக மாறியது. இயற்கையிலேயே பொன்னாக இருப்பது இறைவனைப் போன்றது. முதலில் செம்பாக இருந்து பிறகு பொன்னாக மாறியது ஆன்மாவைப் போன்றது.''

இவ்வாறு கூறிய முனிவர் தமது மடியிலிருந்து செப்புக் காசு ஒன்றை எடுத்துக் காண்பித்தார். ''இந்தச் செப்புக்காசு களிம்போடு கூடியிருக்கிறது. புளிபோட்டுத் தேய்த்தால் களிம்பு நீங்கி விட்டது போல் தோன்றும். ஆனால் மறுநாளே களிம்பு மீண்டும் படிந்து விடும். நிரந்தரமாகக் களிம்பினை நீக்கிவிட்டால் செப்புக்காசு பொற்காசாக மாறிவிடும். களிம்பினை நிரந்தரமாக நீக்கவேண்டுமானால் ரசகுளிகையைப் பயன்படுத்த வேண்டும். செம்பிலே களிம்பு இருப்பதுபோன்று உயிரிலேயும் ஆணவம் எனும் அழுக்கு கலந்துள்ளது. அந்த அழுக்கினைத் தற்காலிகமாக ஓரளவு நீக்க வல்லவை மற்றைய சமயங்கள். அந்த அழுக்கினை நிரந்தரமாக நீக்கும் ரசகுளிகையே

சித்தாந்த சைவம் என்பது. சித்தாந்த நெறியில் செல்கிறோம் என்ற தெளிவு காரணமாகத்தான் 'செம்பாயினும் நல் தங்கமாவேன்' என்று பாம்பன் சுவாமிகளும் பாடினார். சித்தாந்த நெறியை உணர்ந்துகொள்.'

செப்புக்காசையும் பொற்காசையும் வைத்துக் கொண்டு முனிவர் கூறிய விளக்கம் சீடனின் உள்ளத்தில் நன்றாகப் பதிந்தது. சித்தாந்த சைவம் என்பதற்கும் மற்றைய சமயங்களுக்கும் உள்ள வேறுபாட்டை அவன் சிந்திக்கத் தொடங்கினான்.

உலகில் எத்தனையோ சமயங்கள் இருந்தாலும் சில சமயங்கள் மட்டுமே மக்களை இறைநிலைக்கு உயர்த்த வல்லனவாகத் திகழ்கின்றன. பிறவி எனும் பெருங் கடலை நீந்தி முத்தி எனப்படும் கரையை அடைவதே மனித வாழ்க்கையின் முடிந்த குறிக்கோள் என்பதை எல்லாச் சமயங்களும் உடன்படுகின்றன. முக்திநிலை இப்படிப்பட்டது என்று விளக்கிக் கூறுவதில்தான் சமயங்களுக்குள்ளே பேதங்கள் காணப்படுகின்றன. சில சமயங்கள் விவரித்துக் கூறும் முக்திநிலை ஆன்மாவின் பக்குவ முதிர்ச்சி எனக் கூற முடியுமே தவிர மேலான கடவுட் பேறு என்று கூறமுடியாது. கடலை நீந்திக் கரை சேரும் போது அந்தக் கரை உறுதியாக இருந்தால்தான் பாதுகாப்பாக இருக்கலாம். கரை இடிந்து, சரிந்து போகக் கூடியதாக இருந்தால் மீண்டும் கடலிலேயே விழவேண்டியதுதான். உறுதியில்லாத முக்திநிலை இப்படிப்பட்ட கரையைப் போன்றதே.

சிவப்பிரகாசம் எனும் சித்தாந்த சாத்திரம் உறுதியில்லாத முக்தி நிலைகள் இவை இவை என்றும், உயர்ந்த முக்தி நிலை இதுவென்றும் நமக்கு வேறுபடுத்திக் காட்டுகிறது:

''அரிவையரின் புறுமுத்தி; கந்த மைந்தும்
அறுமுத்தி; திரிகுணமும் அடங்கும் முத்தி;
விரிவுவினை கெடுமுத்தி; மலம்போம் முத்தி;
விக்கிரக நித்தமுத்தி; விவேக முத்தி;
பரவுமுயிர் கெடுமுத்தி; சித்தி முத்தி;
பாடாண முத்தியிவை பழிசேர் முத்தி''

என்று பல சமயங்களும் நிலைநாட்டிக் கூறும் முத்தி நிலைகளைக் கூறும் அந்நூல், அடுத்து

''திரிமலமும் அகல உயிர் அருள்சேர் முத்தி
திகழ்முத்தி இதுமுத்தித் திறத்த தாமே''

என்று சைவசித்தாந்தம் கூறும் முத்திநிலையின் உயர்வையும் உறுதிப்படுத்துகிறது. மற்றச் சமயங்கள் கூறும் முத்திநிலைக்கும் சைவ சித்தாந்தம் கூறும் முத்தி நிலைக்கும் உள்ள வேறுபாடுகளை மிருகேந்திராகமத்தின் 'பரமோட்ச நிராசப் பிரகரணம்' எனும் படலத்திலும், சத்தியோசோதி சிவாசாரியார் எனபவரால் இயற்றப்பெற்ற பரமோட்ச நிராச காரிகை எனும் நூலிலும் விளக்கமாகக் காணலாம்.

மிகவும் எளிமையான முயற்சிகளால் உன்னதமான முத்திப்பேற்றை அடைய வழிவகுத்துக் கொடுப்பதே சைவ சித்தாந்தம் என்று பட்டராமகண்டர் மோட்ச காரிகை எனும் நூலின் உரையில் விளக்கிக் கூறுகிறார். எளிய முயற்சியால் மிகவும் உயர்ந்த முத்திப்பேற்றைச் சைவசமயம் வழங்குகிறது என்பதற்கு இரண்டு எடுத்துக் காட்டுகள் காட்டலாம்.

''பதிகப் பெருவழி காட்டப்பருப்பதக் கோன் பயந்த நிதி'' என்று புகழப்பெறும் திருஞான சம்பந்த சுவாமிகள் மேற்கொண்ட நெறி எளிய நெறியே. 'பாடல் நெறி' நின்றவர் அவர். இதைத்தான் நம்பியாண்டார் நம்பிகள் பதிகப் பெருவழி என்று பாராட்டுகின்றார். இறைவனின் புகழை இன்னிசைத் தமிழால் பாடுவதையே பெரும் பணியாகக் கொண்டஅவர் தமது திருமணத்தைக்

காண வந்தார். அனைவர்க்கும் முத்திப் பேற்றை எளிதில் ஈந்தருளிய அற்புத நிகழ்ச்சியை யாரால் மறக்க முடியும்?

"ஆறுவகைச் சமயத்தில் அருந்தவரும் அடியவரும்
கூறுமறை முனிவர்களும் கும்பிடவந் தணைந்தாரும்
வேறுதிரு வருளினால் வீடுபெற வந்தாரும்
ஈறில்பெருஞ் சோதியினுள் எல்லாரும் புக்கதற்பின்"
— பெரியபுராணம் : 3155

திருஞான சம்பந்த சுவாமிகளும் காதலியைக் கைப்பிடித்து வலம் வந்து சோதியில் கலந்து அருள்முத்தி பெற்றனர் என்பதைச் சேக்கிழார் பெருமான் பாடுகின்றார்.

கங்கைக் கரையில் காசிப்பதியில் எண்ணற்ற முனிவர்கள் பாசுபதவிரதம் என்பதை அனுட்டித்து வந்தனர். பாசுபத விரதம் என்பது விபூதியும் ருத்திராக்கமும் அணிந்துகொண்டு இறைவனைவழிபடும் எளிய விரதமே. இந்த விரதத்தை அனுட்டித்த முனிவர்கள் ஒரு நாள் மணிகர்ணிகையில் மூழ்கிப் பிறகு அவிமுத்தேசுரப் பெருமானைப் பூசனை புரிந்து தோத்திரம் செய்த அளவில் ஆயிரங்கோடி சூரியர்கள் ஒன்றாக உதித்ததைப் போன்று பேராளி தோன்ற, அப்பேரொளியில் முனிவர் அனைவரும் சென்று ஒடுங்கி விட்டனர். பிறகு பேரொளி மறைந்துவிட்டது.

"நின்ற காலையில் ஆயிர கோடி நிழலுமிழ்
இரவியை யொத்தாங்
கொன்றியோர் சோதி விசும்பிடை யெழுந்த
துற்றொளிர் சோதியின் இடையே
யன்றுயர் பாசு பதவிர தஞ்செய் தமர்ந்திடு
முனிவர்கள் அனேகர்
மன்றவே யடைந்தார் அடைதலும் அந்த வயங்கிய
வொளிமறைந் ததுவே".
—வாயுசங்கிதை : 774

மேற்கூறப்பட்ட இரண்டு நிகழ்ச்சிகளையும் எடுத்துக் காட்டிய பாம்பன் சுவாமிகள் தமது திருப்பா என்னும் நூலில் "இது நேரச் சமயம் யாதினும் நிகழ்ந்ததுண்டோ எம் சைவ சமய சித்தாந்த முதலே" என முருகப் பெருமானை முன்னிலைப் படுத்தி வியந்து பாடுகிறார்.

சித்தாந்த சைவம் இவ்வாறு உயர்ந்த பெருநெறியாகத் திகழ்வதால் ஓர் உயிர் பல பிறவிகளையும் எடுத்து எடுத்துப் பக்குவமுற்ற பிறகே இந்நெறியைப் பின்பற்றத் தகுதியுடையதாகின்றது.

"அக்கதிக்குட் பக்குவந்தான் உற்றவுயிர் ஆகமத்தின்
மிக்கசித் தாந்தநெறிமேவுமெனும் தேர்ந்தேனே"

என்பது பாம்பன் சுவாமிகள் திருவாக்கு.

செந்நெறி என்றும் மெய்ந்நெறி என்றும் சிறப்பித்துக் கூறப்படும் சித்தாந்த சைவத்தை விளக்கிக் கூறும் சித்தாந்த சாத்திரங்களே சிவாகமங்கள் எனப்படும்.

இறைவன் தந்த மூல இலக்கியங்கள் இரண்டு வேதம் என்பது ஒன்று. ஆகமம் என்பது மற்றொன்று. இந்த இரண்டும் இருவேறுபட்ட கருத்துக்களைக் கூறுவனபோல் தோன்றினும் ஒன்றின் சாரமாக உள்ளதே மற்றொன்று எனப் பெரியோர்கள்கூறியுள்ளனர். வேதம் என்பதை மரம்எனக்கொண்டால்ஆகமம்என்பது கனி. குமரகுருபரர் கூறும் கருத்து ஒன்றை இங்கே நினைவுகூறலாம். இறைவனை முன்னிலைப்படுத்தி அவர் கூறுகின்றார்: "சுவாமி! ஓங்காரம் எனப்படும் அகன்ற வயலில் அருள் என்னும் விதையை விதைத்துக் கருணை என்னும் நீரைப் பாய்ச்சி வேதம் என்னும் மரத்தை வளர்த்தீர். அம்மரத்தினால் உண்டாகும் பயன்கள் பல. சிலர் மரத்தின் இலையைப் பறித்துக் கொண்டு அதுவே நன்றெனக் கருதி அமைதி அடைந்தனர். வேறு சிலர் தளிர்களையே நன்றெனக் கொண்டு மகிழ்ந்தனர்; இன்

னும் சிலர் அரும்புகளையும் சிலர் மலர்களையும் வேறு பலர் பிஞ்சுகளையும் வேறு பலர் காய்களையும் பறித்துச் சென்றனர். இலை முதலான ஆறு பொருள்களையே அவர்கள் உயர்வெனக் கருதினர். ஆனால் வேதாந்தம் எனப்படும் மரத்து உச்சியில், நன்றாகக் கனிந்த கனியொன்று இருந்தது. தெவிட்டாத சுவையுடைய அந்தப் பழத்தைப் பிழிந்து சாரமாகக் கொண்ட சைவசித்தாந்தம் என்னும் தேனமுதை ஒரு சிலரே பருகினர்.''

வேதத்திற்கும் சைவசித்தாந்தத்திற்கும் உள்ள தொடர்பு எத்தகையது என்பதைக் குமரகுருபரரின் திருவாக்கால் உணர்ந்து கொள்ளலாம். வேதத்தருவின் இலை தார்க்கிக மதத்தையும் தளிர் மீமாம்சக மதத்தையும் அரும்பு சாங்கிய மதத்தையும் மலர் யோகமதத்தையும் பிஞ்சு பாஞ்சராத்திர மதத்தையும் காய் ஏகான்மவாத மதத்தையும் குறிக்கும். இந்த அறுவகைச் சமயங்களுக்கும் அப்பாற்பட்டது சித்தாந்த சைவம். சித்தாந்த சைவத்தை விளக்கிச் கூறுபவையே சிவாகம சாத்திரங்கள். வேதமாகிய மரம் இல்லையேல் சித்தாந்த சாத்திரமாகிய சிவாகமக் கனியும் இல்லை.

# 2. சிவாகமங்களின் தோற்றம்

"சிவபரம்பொருளால் உருவாக்கப்பட்டதாகவும் சிவபரம் பொருளை உணர்த்துவதாகவும் விளங்குவது சைவசமயம்' என்று காரணாகமம் தெளிவுறுத்திக் கூறுகிறது. தனிப்பட்ட தொரு ஞானப் பெரியவரால் உண்டாக்கப்பட்ட சமயம் போலல்லாமல் காலத்திற்கும் இடத்திற்கும் இவ்விரண்டின் சார்பில் தோன்றும் சமயங்களுக்கும் அப்பாற்பட்டு முழுமுதற் பரம் பொருள் போன்றே முதன்மை பெற்று விளங்குவது சைவ சமயம். சைவம் என்பது சிவத்தோடு தொடர்புடையது எனும் பொருளைத்தரும். எங்கும் நிறைந்திருக்கும் சிவத்தோடு தொடர்புடைய காரணத்தால் சைவசமயம் எனப்படும் பேரமைப்பில் சிவசமவாதம், துவிதவாதம், ஐக்கிய வாதம் முதலான பல பேதங்களையும் காணமுடிகிறது. உலகில் விளங்கும் எல்லாச் சமயங்களின் கோட்பாடுகளும்சைவ சமயத்துத் தத்துவங்களுள்ஏதாவதொன்றில் அடங்கிவிடுவதால் சைவசமயத்தின் எல்லைக்கு அப்பால் விளங்கக் கூடிய சமயம் எதுவும் இல்லை எனமெய்கண்ட சாத்திரங்கள் அறுதியிட்டுக் கூறுகின்றன. வீரசைவம், காசுமீர சைவம், பாசுபத சைவம் எனச் சைவசமயத்தில் பல்வகைப் பிரிவுகள் விளங்குகின்றன. தத்துவ விளக்கம், வழிபாட்டுச் செயல் முறைகள் முதலானவற்றில் இவை வேறுபட்டவை போலத் தோன்றினாலும் பதி, பசு, பாசம் எனப்படும் முப்பொருள் உண்மையைப்பொறுத்த வரையில் கருத்துவேறுபாடு கொள்ளவில்லை.

சைவ சமயத்தைத் தாயுமான சுவாமிகள் வைதிக சைவம் என்றே குறிக்கின்றார். "யாது சமயமும் வணங்கும் இயல்பதாகி...ராஜாங்கத்தில் அமர்ந்தது வைதிக சைவம் அழகி தந்தோ" என்பது அவரது திருவாக்கு சிவாகமங்களிலும் வைதிகசைவம் என்னும்சொல்வழக்கு காணப்படுகிறது. வைதிக சைவம் என்பது வேதத்தோடு

தொடர்புடையது எனப் பொருள்படுவதால் வேதவழிப் பட்ட சமயமே சைவம் என்பது நன்கு விளங்கும். இவ்வாறு வேதவழிப்பட்டு விளங்கினாலும் சைவசமயத்திற்குஅடிப்படைப் பிரமாண நூல்களாக விளங்குபவை சிவாகமங்களே.

சிவாகமங்கள் எனப்படும் சாத்திரங்களின் பெருந்தொகுப்பு சைவம், பாசுபதம், ஸோமம் லாகுளம் என் நான்கு வகைப்படும் என்று காரணாகமம் கூறுகிறது (பூர்வகாரணம் : 26 : 58—64). சுப்பிர பேதாகமம் என்பது மிசிரசைவம் என மேலும் ஒருவகையைச் சேர்த்துக் கூறுகிறது. இவற்றுள் முதலாவதாக விளங்கும் சைவம் என்பது வாமம், தக்ஷிணம், சித்தாந்தம் என மூன்று வகைப்படும். காபாலிகம், காளாமுகம், அகோரம் முதலான ஆகமங்கள் வாமம் எனும் வகையுள் அடங்கும். மாலினீ விஜயம், சுவச்சந்த பைரவம் முதலாக உள்ள நூற்றெண்பது ஆகமங்களும் தக்ஷிணம் என்பதில் அடங்கும். இடதுசாரி என்றும் வலதுசாரி என்றும் இக்கால வழக்கில் உள்ளதைப் போன்றே வாமம் இடது என்பதையும் தக்ஷிணம்வலது என்பதையும்குறிக்கும். தக்ஷிணம் என்பதற்கு இவ்விடத்தில் தெற்கு எனப் பொருள் கொள்ளக் கூடாது. காமிகம் முதல் வாதுளம் ஈறாக உள்ள இருபத்தெட்டு சிவாகமங்களும் இவற்றின் வழித்தோன்றிய உபாகமங்களும் சித்தாந்தம் என்பதில் அடங்கும். சிவாகமங்கள் என்ற பெருந்தொகுப்பினுள் ஒரு பகுதியாக அடங்கி விளங்குபவையே சித்தாந்த சாத்திரங்கள் எனப்படும் ஆகமங்கள்.

சித்தாந்த சைவத்தின் பிறப்பிடம் தென்னாடே என்பது தத்துவ நூல் அறிஞர்கள் பலரின் ஒருமித்த கோட்பாடு. இக்கோட்பாட்டிற்கு அடிப்படை ஆதாரம் ஆகமத்திலேயே காணப்படுகிறது. "விந்தியமலைக்குத் தெற்குப் பகுதியில் உள்ள நாட்டிலேயே சைவம் தோன்றியது என உறுதியாகக் கூறப்படுகிறது" எனக் காரணாகமம் கூறுவது (30 : 28) கவனிக்கத் தக்கது.

சைவசித்தாந்தம் என்ற சொற்றொடரை முதன் முதலில் திருமூலரே கையாளுகின்றார் எனச் சித்தாந்த அறிஞர் பலரும் கூறுகின்றனர். எனினும் திருமூலருக்கும் முற்பட்ட காலத்தைச் சார்ந்த சிவாகமங்களிலேயே இச் சொல்லாட்சி இடம் பெற்றிருப்பதைக் காணலாம் (காமிகாகமம்: 119, 120). காமிகம் முதலாக உள்ள இருபத்தெட்டு சிவாகமங்களும் சைவ சித்தாந்த சாத்திரங்கள் எனச் சிவாகமங்கள் பலவற்றிலும் குறிக்கப்படுகின்றன.

சித்தாந்தம் என்பது 'முடிந்த முடிவு' என்றும் 'நன்கு நிறுவப்பட்ட முடிவு' என்றும் பொருள்தரும். கௌதம நியாய சூத்திரம் என்னும் நூல் "பல கோணங்களிலிருந்தும் ஆராய்ச்சி செய்யப்பட்டுத் தருக்க ரீதியாக எது நிறுவப்படுகிறதோ அதுவே சித்தாந்தம் என்பது" எனக் கூறுகின்றது (1 : 26). இவ்விளக்கம் காமிகம் முதலாக உள்ள இருபத்தெட்டு சிவாகமங்களுக்கும் நன்கு பொருந்தியிருப்பதைக் காணலாம். "காருடம், பூத தந்திரம், வைரவம் முதலானவை பரமசிவனால் பூருவ பட்சமாகச் சொல்லப்பட்டன. சைவசித்தாந்தம் சாத்திரங்களாக உள்ள ஆகமங்களே தள்ள வேண்டியவற்றைத் தள்ளிக் கொள்ள வேண்டியவற்றைக் கொண்டு தீர்மானமாகவும் உறுதியாகவும் சொல்லப்பட்டன" எனக் காமிக ஆகமத்தில் கூறப்பெற்றுள்ளது (1 : 119, 120). சிவாகமத்தின் சார்பு நூலாகக் கருதப் பெறும் இரத்தினத்திரயம் எனும் நூலும் "தருக்க முறையாலும் ஆராய்ச்சி முறையாலும் முடிந்த பொருளை முறையாக உணர்த்துவதால் காமிகம் முதலானவையே சித்தாந்த சாத்திரங்கள். மற்றவையெல்லாம் பூருவபட்ச நூல்கள்" எனக் கூறுகின்றது.

சித்தாந்த சாத்திரங்கள் ஆகமம் என்ற பெயரால் மட்டுமன்றித் தந்திரம், மகாதந்திரம், ஸம்மிதை, சிவஞானம் முதலான வேறுபல பெயர்களாலும் குறிக்கப்

பெறுகின்றன. இப்பெயர்களைப் பற்றி இனி ஆராய்வோம்.

## ஆகமம் :

ஆகமம் எனும் பெயருக்குப் பல்வேறு விளக்கங்கள் சைவ நெறியின் அடிப்படையிலும் சாக்த நெறியின் அடிப்படையிலும் கூறப்படுகின்றன. ஒவ்வொரு விளக்கமும் ஆகம சாத்திரத்தின் ஒவ்வொரு பகுதியைக் கருத்தில் கொண்டு கூறப்பட்டுள்ளதால் எல்லா விளக்கங்களும் ஏற்றுக் கொள்ளத் தக்கவையே. பிங்களமதம் எனும் நூல் ஆகதம், கதம், மதம் என்ற மூன்று சொற்களிலுமுள்ள முதலெழுத்துக்களின் சேர்க்கையால் ஆகமம் என்ற பெயர் தோன்றியது எனக்கூறுகிறது. ஆகதம் என்பது சிவபெருமானிடமிருந்து வெளிவருதலையும் (சிவபெருமானால் உபதேசிக்கப்படுவதையும்) கதம் என்பது உமையம்மையால் அது கேட்கப்படுதலையும் மதம் என்பது சிவபக்தர்களின் மதமாக (சமயமாக) உலகில் பரவுதலையும் குறிக்கும் என அந்நூல் விளக்கம் கூறுகின்றது. ''ஆகமம் எனும் வடமொழி, தென்மொழியில் 'வந்தது' எனப்பொருளாம். எங்கிருந்து வந்தது எனின் பரம ஆப்தரது (ஆப்தர்—உள்ளது கூறுவோர்) திருநாவில் இருந்து என்றாம். அவ்வாப்தர் சருவ புவன கருத்தாவாகிய பரமசிவனாவார்'' என்று பாம்பன் சுவாமிகள் தமது 'வேதத்தைக் குறித்த வியாசம்' எனும் நூலில் கூறுகின்றார். ஆகமம் என்பது மற்றொரு வழியில் ஆ—பாசம், க—பசு, ம—பதி எனப் பொருள்படும். பதி, பசு, பாசம் என்ற மூன்றினைப் பற்றியும் சிறப்பாக விளக்கிக் கூறுவதால் ஆகமம் என்ற பெயர் ஏற்பட்டது. மேலும் ஆ என்பது ஞானத்தையும் க என்பது மோட்சத்தையும் ம என்பது ஆணவ மலத்தின் அழிவினையும் குறிப்பதால் ஞானத்தால் மலத்தை நீக்கி வீடுபேறு அளிக்கும் நூல் எதுவோ அதுவே ஆகமம் எனவும் சில நூல்களில் விளக்கம் கூறப்பட்டுள்ளது. இவ்விரு வேறு

வகைப்பட்ட விளக்கங்களின் பொருத்தத்தைப் பாம்பன் சுவாமிகள் மேற்குறிப்பிட்ட நூலில் (வேதத்தைக்குறித்த வியாசம், பக். 59) நனகு ஆராய்ந்து கூறுகிறார்.

## தந்திரம் :

பெரும்பாலான சிவாகமங்கள் 'தந்திராவதார படலம்' எனும் பகுதியில் தந்திரம் என்பதன் பொருளை எடுத்துரைக்கின்றன. "தத்துவங்களிலும் மந்திரங்களிலும் அடங்கியுள்ள பொருள்களை விளக்கிக் கூறுவதாலும் (தன்—தனோதி) தன்னை அடைந்தோரைக் காப்பாற்றுவதாலும் (த்ரம்-த்ராணம்) இந்நூல் தந்திரம் எனப்படுகிறது" என்பது காமிகாகமத்திலும் மகுடாகமத்திலும் கூறப்படும் விளக்கமாகும். இதனால் சிவாகமங்களின் இயல்புகளை இப்பெயர் புலப்படுத்துகின்றது என்பதை உணரலாம்.

## மகா தந்திரம் :

ஆகமங்களின் எல்லைகண்ட அகோரசிவாசாரியார் சிவாகமச் சார்புநூலான தத்துவப்பிரகாசிகை எனும் நூலுக்கு எழுதிய விளக்கவுரையில் கீழ்க்கண்டவாறு கூறுகிறார் :

> "மகா தந்திரம் என்பது சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு பாதங்களுடன் பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களையும் அறிவிக்கக் கூடியது"

தந்திர லட்சணம் எனும் நூலின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு அகோரசிவாசாரியார் கூறும் விளக்கப்படி சிவாகமங்களின் அமைப்பு இப்படிப்பட்டது என்பதை உணரலாம். எனவே மகா தந்திரம் என்ற பெயர் சிவாகமத்தின் அமைப்பு முறையைக் குறித்து நிற்பது எனக் கூறலாம்.

## சம்மிதை :

சிவாகமங்கள் சில சம்ஹிதை என்ற பெயராலும் குறிக்கப் பெறுகின்றன. பாரமேசுவர ஆகமத்தின் உபாகமமாகக் கருதப் பெறும் பௌஷ்கராகமம், 'பௌஷ்கர சம்ஹிதை' என்ற பெயரால் குறிப்பிடப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. "பன்னிரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட சுலோகங்களால் (பாடல்களால்) அமைந்து சமயம், வழிபாட்டுச் செயல்முறை, நித்திய அனுட்டான விதிகள் மருத்துவம், சோதிடம் முதலான பல கருத்துக்களையும் கூறும் நூல் ஸம்ஹிதை எனப்படும்' என ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு ஆகமம் தந்திரம் சம்மிதை முதலான பல பெயர்களாலும் பொருத்தமுறக் குறிக்கப்பெறும் சித்தாந்த சாத்திரங்களான காமிகம் முதலானவை இறைவனிடமிருந்து எவ்வாறு வெளிப்பட்டன என்பதை இனிக் காண்போம்.

சிவஞானம் என்பது அவபோத வடிவம் என்றும் நாத வடிவம் என்றும் இரண்டு வகைப்படும். இவற்றுள் இயல்பாகவே மலமற்றவராகவும் தத்துவங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவராகவும் விளங்கும் சிவபெருமானின் ஞானமானது அவபோத வடிவமாகும். இந்த ஞானத்தை வரிவடிவில் கொண்டுள்ள சாத்திரங்களே நாதவடிவ ஞானமாகும். ஆன்மாக்களுக்கு நல்லனவற்றை உபதேசித்து பிறவிப் பெருங்கடலினின்று விடு நாதவடிவ ஞானமாகும். ஆன்மாக்களுக்கு நல்லனவற்றை உபதேசித்து பிறவிப் பெருங்கடலினின்று விடுவித்துக் காப்பாற்றுவதால் நாதவடிவ ஞானம் சாத்திரம் எனப் பெயர் பெற்றது.(சதரத்தின சங்கிரகம்- உரை பக். 28).

எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டு வடிவமற்றவராக (நிஷ்களமாக) விளங்கும் சிவபெருமானிடத்திலிருந்து

அவபோத ரூபமான ஞானம் முதலில் நாதரூபமாக வெளிவந்தது. பிறகு அருவுருவ வடிவினரான (ஸகல் நிஷ்களரான) சதாசிவப்பெருமானிடத்திலிருந்து நாத ரூபம் சாத்திர ரூபங்களாக வெளிவந்தது.

சிவபெருமானால் நிகழ்த்தப்பெறும் படைப்பு இரண்டு வகையானது. ஒன்று நேரே செய்யும் படைப்பு; மற்றொன்று அனந்த தேவர் வாயிலாகச் செய்யும் படைப்பு. சிவபெருமானின் நேர்முகப் படைப்புக்கு உட் பட்டவையே வேதங்களும் சிவாகமங்களும்.

வாக்கு முதலான இந்திரியங்களற்ற அதாவது வடிவ மற்றவரான சிவபெருமான் நாதரூபமான ஞானத்தை எவ்வாறு தோற்றுவிக்கக்கூடும் எனும் ஐயம் எழலாம். (கிரணாகமம் : 9 ஆம் படலம்; பௌஷ்கராக மம் : 8 ஆம் படலம்). இந்திரியங்களைப் பெறாத காந்தக்கல்லுக்கு இரும்பைக் கவர்ந்திழுக்கும் ஆற்றல் உள் ளது போலச் சிவபெருமானுக்கும் நாதரூப ஞானத்தை வெளியிடும் ஆற்றல் உண்டு எனக் கிரணாகமம் தெளிவுபடுத்துகின்றது. வாக்கு முதலிய இந்திரியங் களின் துணை வேண்டாத சிவபெருமானின் சக்தி எங் கும் பரவியுள்ளது. ''அவர் மலமற்ற தன்மை உடைய வராக இருப்பதால் தமது சக்தியால் ஞான சாத்திரங் களை அருளியுள்ளார்' என்று பௌட்கராகம் விளக்கு கின்றது (8 : 71).

சுத்தமாயை எனப்படும் முதல் தத்துவமான விந்து என்பது சிவபெருமானின் திருவருட் சக்தியால் அசைக் கப்படும்பொழுது நாதம் தோன்றுகின்றது. அந்த நாதமே ஓங்காரம் என்றும் குடிலை என்றும் கூறப்பெறும். காரத்தினின்று அகரம் முதலான ஐம்பது எழுத்துக்களும் தோன்றும். ஒன்பது பிரிவுகளாக அமைந்துள்ள எழுத்து துக்களால் சொற்களும் சொற்களால் சாத்திரங்களும் தோன்றும் (கிரணாகமம் : 11 ஆம் படலம்).

சாத்திரங்களின் இத்தகைய தோற்றமுறை பொதுவாகக் கூறப்படுவது. சிறப்புவகையால் நோக்கும் பொழுது சிவபெருமான் சதாசிவ வடிவம் தாங்கி வேதங்களையும் ஆகமங்களையும் வெளிப்படுத்துகின்றார் என்பது நன்கு விளங்கும். சதாசிவ வடிவம் என்பது ஞானமயமான திருமேனியையே குறிக்கும். நினைப்பாற்றல் (சங்கல்பம்) ஒன்றினாலேயே இறைவன் காரியங்களை நிகழ்த்துகின்றார். என்பது உண்மையே. எனினும் அவ்வாறு நினைப்பதற்கும் பரம்பொருள் ஒரு வடிவம் தாங்கியே ஆகவேண்டும். அந்த வடிவம் நம்முடைய தேகம் போன்று அசுத்தமாயையின் தொடர்பில்லாமல் மந்திரங்களால் உருவான தூய திருமேனியாக இருக்கும். இந்தத் திருமேனியையே வித்யா தேகம் என்று காமிகாகமும் (3 : 426) சப்தப்பிரம்ம ரூபம் என்று அஜிதாகமும் (1 : 13–26) கூறுகின்றன. மிகவும் ஒளி பொருந்திய மந்திரமயமான சதாசிவம் எனப்படும் பெருமலையினின்று நாதமயமான சாத்திரங்கள் எனப்படும் பேரருவிகள் தோன்றிப் பெருக்கெடுக்கின்றன.

சதாசிவப் பரம்பொருளின் வடிவம் கீழ்க்கண்டவாறு வருணிக்கப்பட்டுள்ளது :

> "சதாசிவர் ஐந்து திருமுகங்களும் பத்துத் திருக்கரங்களும் உடையவர்; ஒவ்வொரு முகத்திலும் மூன்று திருக்கண்கள்; வலக்கரங்களில் சூலம் வச்சிரம், சத்தி, பரசு அபய முத்திரை எனபனவற்றையும் இடக்கரங்களில் நாகம், பாசம், மணி, அக்கினி, அங்குசம் என்பனவற்றையும் தாங்கியிருப்பவர்; பாம்பினைப் பூணூலாக அணிந்திருப்பவர்; மூன்றாம்பிறைச் சந்திரனால் அலங்கரிக்கப்பட்ட ஜடாமகுடம் உடையவர்: சாந்தமான தோற்றத்தினர்"
>
> காமிகம் : 3:327 334.

சதாசிவப் பெருமானுக்குரிய ஐந்து திருமுகங்களுள் மேல் நோக்கிய திருமுகம் ஈசானம் எனப்படும். இம்முகம் அழ

னாகவும் தெளிவாகவும் படிகம் போன்று நிர்மலமான ஒளியுடையதாகவும் குழந்தைத் தன்மை உடையதாக வும் விளங்கும். ஐந்தொழில்களுள் இம்முகம் அருளல் எனும் செயலைப் புரியும். கிழக்கு நோக்கிய திருமுகம் தத்புருஷம் எனப்படும். இது உருக்கிய தங்கத்தின் நிறம் உடையதாகவும் கம்பீரமாகவும் சாந்தமாகவும் காளைப் பருவத்துடன் கூடினதாகவும் விளங்கும். ஐந்தொழில் களுள் இம்முகம் மறைத்தல் என்பதைச் செய்யும். தெற்கு நோக்கிய திருமுகம் அகோரம் எனப்படும். இது கருமை வண்ணம் உடையது; நெரிக்கும் புருவங்களை உடையது; பயங்கரமான தோற்றமும் கோரைப் பற்களும் கொண் டிருப்பது; துடிக்கும் உதடுகளையுடைய இம்முகம் மிக வும் பரிபூரணமான காளைப்பருவத்துடன் கூடியிருக்கும். ஐந்தொழில்களுள் இது அழித்தல் எனும் தொழிலைப் புரியும். வடக்கு நோக்கிய திருமுகம் வாமம் எனப்படும். இது புதிய பவழத்தின் ஒளியை உடையதாகவும் கரிய வண்டுக் கூட்டம் போன்ற சுருண்ட கூந்தல்களால் பிர காசிப்பதாகவும் யாவரையும் கவரக் கூடியதாகவும், பார்வதியின் முகம் போன்று தோன்றுவதாகவும், கொடி போன்ற புருவங்கள் உடையதாகவும் காட்சியளிக்கும். ஐந்தொழில்களுள் இம்முகம் காத்தல் என னும் தொழி லைச் செய்யும். மேற்கு நோக்கிய திருமுகம் சத்தியோ ஜாதம் எனப்படும். இது சந்திர ஒளி பொருந்தியதாக வும் ராஜலட்சணங்களுடன் கூடியதாகவும், சந்திரா பரணம் உடையதாகவும், அசைவற்ற கண்களை உடைய தாகவும் காட்சியளிக்கும். ஐந்தொழில்களுள் இம்முகம் படைத்தல் எனும் தொழிலைப் புரியும்.

ஐந்து திருமுகங்களும் ஈசானம் முதலான திருப் பெயர்களைப் பெற்றிருந்தாலும் உண்மையில் ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமம், சத்தியோஜாதம் எனப் படும் ஐந்தும் சிவாகமங்களில் பஞ்சப்பிரம்ம மந்திரம் எனவே குறிக்கப்பெறும். ஈசான மந்திரம் ஐந்து கலை களையும் தத்புருஷ மந்திரம் நாலு கலைகளையும்

அகோர மந்திரம் எட்டுக் கலைகளையும் வாமதேவ மந்திரம் பதின்மூன்று கலைகளையும் சத்தியோஜாத மந்திரம் எட்டுக்கலைகளையும் பெற்றிருக்கும்.

ஈசான மந்திரத்தின் ஐந்துகலைகளே சதாசிவ மூர்த்தியின் ஐந்து சிரசுகள்; தத்புருஷ மந்திரத்தின் நான்கு கலைகளே முகங்கள்; அகோர மந்திரத்தின் எட்டுக் கலைகளே அவரது இருதயம், கழுத்து, தோள்கள், நாபி, வயிறு, பின்புறம், மார்பு எனும் அங்கங்கள்; வாமதேவ மந்திரத்தின் பதின்மூன்று கலைகளே குய்யம், தொடைகள், முழங்கால்கள், கணைக்கால்கள், இடுப்பின் மேற்பாகங்கள்; இடுப்புகள், இரண்டு பக்கங்கள் எனும் அங்கங்கள்; சத்தியோஜாத மந்திரத்தின் எட்டுக்கலைகளே கால்கள், கைகள், மூக்கு, சிரசின் உச்சி, புயங்கள் எனப்படும் அங்கங்கள்.

இவ்வாறு ஈசானம் முதலான ஐந்து மந்திரங்களாலும் சதாசிவப் பெருமானின் சரீரமானது பரிபூரணமாக அமைந்திருக்கும். இந்தச் சரீரம் நம்முடைய சரீரம் போன்றது எனக்கருதக் கூடாது. ''கண்ணாடியில் பிரதிபிம்பம் போன்றும் ஆகாயத்தில் இந்திரவில் போன்றும் ஈசுவர சரீரம் உள்ளது'' என அப்பைய தீக்ஷிதர் அவர்கள் சிவார்ச்சனா சந்திரிகை எனும் நூலில் கூறுவது கவனிக்கத் தக்கது. திருக்கோயில்களில் மூலத்தானங்களில் அன்பர்களால் வணங்கப் பெறும் சிவலிங்க வடிவம் சதாசிவ வடிவமே. சிவலிங்க வடிவத்தில் மேலே விவரித்துக் கூறப்பட்ட சதாசிவ வடிவத்தைப் பாவித்து வணங்க வேண்டும்.

இவ்வாறு மந்திரமயமான சரீரம் தாங்கி இறைவன் அருளாவிட்டால் தியானம், பூசை முதலானவை நடைபெற வழியில்லை. நாதங்களின் உற்பத்திக்குக் காரணமாக இருக்கும் கழுத்து முதலான தானங்களுக்கும் இடமில்லாமற் போகும். உயிர்க் கூட்டங்களுக்கு அருள் புரிவதற்காகவே வடிவில்லாப் பரம்பொருள் வடிவுகொள்ள முந்துகின்றது எனக் கிரணாகமம் கூறுகிறது.

உயிர்க் கூட்டங்கள் முக்தியுடைய வேண்டும் என்ற காரணத்திற்காகவே இறைவன் சாத்திரங்களைப் படைக்கத் திருவுளம் கொள்கிறான். சாத்திரங்களின் மூலம் சாதனைகளுக்குரிய வழிகளைக் காண்பித்து அவற்றால் முக்தியருள்வதே இறைவனின் நோக்கம். கிரணாகமம் கூறும் இக்கருத்தை யொட்டியே பாம்பன் சுவாமிகளும்,

''ஆணவ மலத்தினில் அமிழ்ந்திய பசுக்களை
அனாரதம் தன்னகத்தே
ஐக்கியங் கோடற்(கு) அருந்தொழில்கள் ஐந்துநனி
யாற்றுமைம் முகனாகிநீ
மாணுடன் நவின்றநல் லாகமம்''

எனப் பாடுகின்றார்.

உயிர்க்கூட்டங்களைத் தன்னோடு ஐக்கியப்படுத்திக் கொள்வதற்காகச் சாத்திரங்களைப் படைக்கத் திருவுளம் கொண்ட பரமன் மேற்கூறியவாறு சதாசிவ வடிவம் தாங்கிக் கிழக்கு நோக்கிய முகத்தினின்று 21 சாகைகளையுடைய* இருக்கு வேதத்தைத் தோற்றுவித்தார். தெற்கு நோக்கிய முகத்தினின்று 101 சாகைகளையுடைய யசுர் வேதத்தைப் படைத்தார்; மேற்கு நோக்கிய முகத்தினின்று 1000 சாகைகளையுடைய சாம வேதத்தைத் தோற்றுவித்தார்; வடக்கு நோக்கிய முகத்தினின்று 9 சாகைகளையுடைய அதர்வண வேதத்தை வெளிப்படுத்தினார்.

வேதவெளிப்பாடு இவ்வாறு நிகழ்ந்த பின்னர் சதாசிவமூர்த்தியின் ஐந்து திருமுகங்களிலிருந்தும் சிவாகமங்கள் வெளிப்பட்டன.

சத்தியோஜாதம் எனப்படும் முகத்தினின்று காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம் எனும் ஐந்து ஆகமங்களும் வெளிப்பட்டன.

---

*சாகைகள்—கிளைகள்; பகுதிகள்; பிரிவுகள்.

வாமதேவம் எனப்படும் முகத்தினின்று தீப்தம், சூக்ஷ்மம், ஸஹஸ்ரம், அம்சுமான், சுப்பிரபேதம் எனும் ஐந்து ஆகமங்களும் தோன்றின.

அகோரம் எனப்படும் முகத்தினின்று விஜயம், நிசுவாசம், சுவாயம்புவம், அனலம், வீரம் எனும் ஐந்து ஆகமங்களும் தோன்றின.

தத்புருஷம் எனப்படும் முகத்தினின்று ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், பிம்பம் எனும் ஐந்து ஆகமங்களும் வெளிப்பட்டன.

ஈசானம் எனப்படும் முகத்தினின்று புரோத்கீதம், லலிதம், ஸித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுவரம், கிரணம், வாதுளம் எனப்படும் எட்டு ஆகமங்களும் தோன்றின.

சிவாகமங்களின் தோற்றமுறை அஜிதம் முதலான சில ஆகமங்களில் வேறுவகையாகக் கூறப்பட்டுள்ளது. காமிகம் முதலானவை ஈசான முகத்திலிருந்து வெளிப்பட்டவையாகக் கூறப்படும் கருத்துக்களெல்லாம் யுக பேதங்களில் ஏற்பட்ட மாற்றங்களாகக் கொள்ளவேண்டுமே தவிர சிவாகமங்களுக்குள் ஏற்பட்டுவிட்ட முரண்பாடாகக் கருதக்கூடாது.

இங்கே மேலும் ஒரு கருத்து தெளிவாக்கப்படவேண்டியுள்ளது. வேதங்கள் நான்கும் தத்புருஷம் முதலான நான்கு முகங்களிலிருந்து தோன்றினமையால் ஆகமங்கள் மேல் நோக்கியுள்ள ஈசான முகத்திலிருந்து தோன்றின என்று காமிகாகமம் கூறுகிறது. மேற்போக்காகப் பார்த்தால் இதுவும் முரண்பட்ட கருத்துப்போல் தோன்றும். ஆழ்ந்து நோக்கினால் முரண்பாடு நீங்கும். ஈசானம் முதலிய ஒவ்வொரு முகமும் ஐந்து ஐந்து முகங்களாக விளங்கலின் அவற்றிலுள்ள ஐந்து ஈசான முகங்களிலிருந்தும் ஆகமங்கள் வெளிப்பட்டன என உணர்ந்து கொள்ளவேண்டும். எடுத்துக்காட்டாகத் தத்புருஷ முகத்

திலிருந்து ஆகமங்கள் தோன்றின எனக் கூறின் தத்புருஷ முகத்துக்குரிய ஈசான முகத்திலிருந்து தோன்றின என்று தான் பொருள். இவ்வாறே காமிகாகமத்திலும். சித்தாந்த சாராவளி என்னும் நூலிலும் கூறப்பட்டுள்ளது.

எந்தச் சாத்திரமும் உபதேசக் கிரமமாக வந்தால் தான் சிறப்படையும் எனத் திருவுளம் கொண்ட சதாசிவப் பெருமான் தமது நினைவுமாத்திரத்தாலேயே பத்துச் சிவர்களைப் படைத்து அவர்களுக்குக் காமிகம் முதல் சுப்பிரபேதம் ஈறாக உள்ள பத்துச் சிவாகமங்களையும் சத்தியோஜாத முகத்தாலும் உபதேசித்து அருளினார். பின்னர் ஈசுவர தத்துவத்தில் உள்ள அனாதிருத்திரர் முதலான பதினெட்டு ருத்திரர்களையும் ஞானவான்களாகச் செய்து அவர்களுக்கு விஜயம் முதல் வாதுளம் ஈறாக உள்ள பதினெட்டு ஆகமங்களையும் அகோர முகத்தாலும் தத்புருஷ முகத்தாலும் ஈசான முகத்தாலும் உபதேசித்தருளினார்.

உபதேசம் பெற்றவர்கள் சிவர்கள் என்றும் ருத்திரர்கள் என்றும் இருவகைப்பட்டவர்கள். எனவே முதல் பத்து ஆகமங்களும் (காமிகம் முதல் சுப்பிரபேதம் வரை) சிவபேதம் என்றும் எஞ்சியுள்ள பதினெட்டு ஆகமங்களும் (விஜயம் முதல் வாதுளம் வரை) ருத்திரபேதம் என்றும் கூறப்பெறுகின்றன. சிவபேத ஆகமங்கள் என்றும் ருத்திரபேத ஆகமங்கள் என்றும் இருவேறுவகையாகப் பிரித்துக் கூறப்பட்டாலும் ஆகமங்களுக்குள் உயர்வுக்கோ தாழ்வுக்கோ இடமில்லை.

பிரணவர் முதலான பத்துச் சிவர்களுக்கும் அனாதிருத்திரர் முதலான பதினெட்டு ருத்திரர்களுக்கும் சதாசிவப்பெருமான் தனித்தனியே ஒவ்வோராகமத்தை உபதேசித்தருளியதால் இந்த உபதேச முறை பிரதிசம்ஹிதாக்கிரமம் எனப் பெயர் பெறும்.

சிவதத்துவம் ஐந்தனுள் ஒன்றான ஈசுவரதத்துவத்தில் உள்ளவர்கள் அனந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சிகண்டி எனப்படும் எண்மராவர். இவர்களை 'அஷ்ட வித்தியேசுவரர்கள்' என ஆகமங்கள் குறிக்கும். ''இவர்கள் மலம் நீங்கியவர்கள்; படைத்தல் முதலான ஐந்தொழில் உடையவர்கள்; அதிகார மலம் மாத்திரம் இவர்களுக்கு உண்டு. சிவசூரியனின் ஒளிச் சேர்க்கையால் மலர்ந்த ஆன்ம சக்தியை உடையவர்கள்'' என இரத்தினத்திரயம் எனும் நூல் (சூ:26,27) அனந்தர் முதலான எண்மரைப் பற்றிக் கூறுகின்றது. இவர்கள் ஒருவருக்கொருவர் பக்குவத்தாலும் குணத்தாலும் சிறந்தவர்கள் அதாவது சிகண்டியைக் காட்டிலும் ஸ்ரீகண்டர் மேலானவர். ஸ்ரீகண்டரைக் காட்டிலும் திரிமூர்த்தி உயர்ந்தவர். இவ்வாறே நோக்கினால் அஷ்ட வித்தியேசுவரர்களுள் மிகவும் சிறப்பானவர் அனந்தர் என்பவர். இந்த அனந்தேசுவரர் வாயிலாகவே சிவபெருமான் அசுத்த மாயா சம்பந்தமான தொழிலைச் செய்கின்றார்.

பிரதிசம்மிதாக்கிரமம் எனும் முறையில் சதாசிவப் பெருமான் தனித்தனியே ஒவ்வோராகமத்தை உபதேசித்த பிறகு இருபத்தெட்டு சிவாகமங்களையும் அனந்தேசுவரர் என்பவர்க்கு ஒருங்கே உபதேசித்து அருளினார். ஒருவருக்கே ஆகமங்கள் அனைத்தையும் உபதேசித்த காரணத்தால் இந்த உபதேச முறை மஹௌகக்கிரமம் எனக் கூறப் பெறுகின்றது.

சிவஞான முனிவரும் சிவாக்கிர யோகிகளும் தத்தம் சிவஞான போதப் பேருரைகளில் இவ்விரண்டு முறைகளைப் பற்றியும் குறித்திருக்கின்றனர்.

சிவஞான சாத்திரங்கள் எனப்பெறும் சிவாகமங்கள் உபதேசக்கிரமத்தில் வழிவழியாய் வரும்பொழுது ஆறு விதமான சம்பந்தங்கள் ஏற்படுகின்றன.

சதாசிவப்பெருமான் அனந்தேசுவரருக்கு ஆகமங்களை உபதேசிக்கும் போது ஏற்பட்ட சம்பந்தம் பரசம்பந்தம் எனப்படும். அனந்தேசுவரர் ஸ்ரீகண்ட ருத்திரர்க்கு ஆகமங்களை உபதேசிக்க அதனால் ஏற்பட்ட சம்பந்தம் மஹாசம்பந்தம் எனப்படும். ஸ்ரீகண்டர் நந்திபகவானுக்கு ஆகமங்களை உபதேசிக்க அதனால் ஏற்பட்ட சம்பந்தம் அந்தரான சம்பந்தம் எனப்படும். நந்திதேவர் தேவ இருடிக்கு உபதேசிக்க அதனால் ஏற்பட்ட சம்பந்தம் திவ்விய சம்பந்தம் எனப்படும். தேவ இருடி மானுட இருடிக்கு உபதேசிக்க அதனால் ஏற்பட்ட சம்பந்தம் திவ்யா திவ்விய சம்பந்தம் எனப்படும். மானுட இருடி மனிதரில் பக்குவமானவர்க்கு உபதேசிக்க அதனால் ஏற்பட்ட சம்பந்தம் அதிவ்விய சம்பந்தம் எனப்படும். இவற்றைப் பற்றிய விளக்கங்களைச் சித்தாந்த சாராவளி, சைவசித்தாந்த பரிபாஷை, மோக்ஷ காரிகை முதலான நூல்களில் காணலாம்.

இவ்வாறு ஆகமநூல்கள் ஆறுவித சம்பந்தங்களாலும் காலந்தோறும் விடைவிடாது பாரம்பரியமாக வந்து கொண்டிருக்கின்றன.

## சிவாகமங்களின் காலம் :

வேதங்களும் சிவாகமங்களும் நித்தியமானவை என்பது சைவசித்தாந்தத்தின் கோட்பாடு, படைப்புக் காலத்தில் நுண்மையான நாதத்துவத்திலிருந்து தோன்றிய வேதாகமங்கள் மகாப்பிரளய காலத்தில், தோன்றிய இடத்திலேயே சூக்குமமாக ஒடுங்குகின்றன. பின்னர் மீண்டும் படைப்புக் காலத்தில் தோன்றுகின்றன. வேத சிவாகமங்களுக்குத் தோற்றமும் ஒடுக்கமும் உண்டே தவிர அழிவு என்பது கிடையாது. எனவேதான் வேதசிவாகமங்கள் அனாதி நித்தியமானவை என

சிவதத்துவம் ஐந்தனுள் ஒன்றான ஈசுவரதத்துவத்தில் உள்ளவர்கள் அனந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சிகண்டி எனப்படும் எண்மராவர். இவர்களை 'அஷ்ட வித்தியேசுவரர்கள்' என ஆகமங்கள் குறிக்கும். ''இவர்கள் மலம் நீங்கியவர்கள்; படைத்தல் முதலான ஐந்தொழில் உடையவர்கள்; அதிகார மலம் மாத்திரம் இவர்களுக்கு உண்டு. சிவசூரியனின் ஒளிச் சேர்க்கையால் மலர்ந்த ஆன்ம சக்தியை உடையவர்கள்'' என இரத்தினத்திரயம் எனும் நூல் (சூ:26,27) அனந்தர் முதலான எண்மரைப் பற்றிக் கூறுகின்றது. இவர்கள் ஒருவருக்கொருவர் பக்குவத்தாலும் குணத்தாலும் சிறந்தவர்கள் அதாவது சிகண்டியைக் காட்டிலும் ஸ்ரீகண்டர் மேலானவர். ஸ்ரீகண்டரைக் காட்டிலும் திரிமூர்த்தி உயர்ந்தவர். இவ்வாறே நோக்கினால் அஷ்ட வித்தியேசுவரர்களுள் மிகவும் சிறப்பானவர் அனந்தர் என்பவர். இந்த அனந்தேசுவரர் வாயிலாகவே சிவபெருமான் அசுத்த மாயா சம்பந்தமான தொழிலைச் செய்கின்றார்.

பிரதிசம்பிராக்கிரமம் எனும் முறையில் சதாசிவப் பெருமான் தனித்தனியே ஒவ்வோராகமத்தை உபதேசித்த பிறகு இருபத்தெட்டு சிவாகமங்களையும் அனந்தேசுவரர் என்பவர்க்கு ஒருங்கே உபதேசித்து அருளினார். ஒருவருக்கே ஆகமங்கள் அனைத்தையும் உபதேசித்த காரணத்தால் இந்த உபதேச முறை மஹௌக்கிரமம் எனக் கூறப் பெறுகின்றது.

சிவஞான முனிவரும் சிவாக்கிர யோகிகளும் தத்தம் சிவஞான போதப் பேருரைகளில் இவ்விரண்டு முறைகளைப் பற்றியும் குறித்திருக்கின்றனர்.

சிவஞான சாத்திரங்கள் எனப்பெறும் சிவாகமங்கள் உபதேசிக்கிரமத்தில் வழிவழியாய் வரும்பொழுது ஆறுவிதமான சம்பந்தங்கள் ஏற்படுகின்றன.

சதாசிவப்பெருமான் அனந்தேசுவரருக்கு ஆகமங்களை உபதேசிக்கும் போது ஏற்பட்ட சம்பந்தம் பரசம்பந்தம் எனப்படும். அனந்தேசுவரர் ஸ்ரீகண்ட ருத்திரர்க்கு ஆகமங்களை உபதேசிக்க அதனால் ஏற்பட்ட சம்பந்தம் மஹாசம்பந்தம் எனப்படும். ஸ்ரீகண்டர் நந்திபகவானுக்கு ஆகமங்களை உபதேசிக்க அதனால் ஏற்பட்ட சம்பந்தம் அந்தராள சம்பந்தம் எனப்படும். நந்திதேவர் தேவ இருடிக்கு உபதேசிக்க அதனால் ஏற்பட்ட சம்பந்தம் திவ்விய சம்பந்தம் எனப்படும். தேவ இருடி மானுட இருடிக்கு உபதேசிக்க அதனால் ஏற்பட்ட சம்பந்தம் திவ்யா திவ்விய சம்பந்தம் எனப்படும். மானுட இருடி மனிதரில் பக்குவமானவர்க்கு உபதேசிக்க அதனால் ஏற்பட்ட சம்பந்தம் அதிவ்விய சம்பந்தம் எனப்படும். இவற்றைப் பற்றிய விளக்கங்களைச் சித்தாந்த சாராவளி, சைவசித்தாந்த பரிபாஷை, மோக்ஷ காரிகை முதலான நூல்களில் காணலாம்.

இவ்வாறு ஆகமநூல்கள் ஆறுவித சம்பந்தங்களாலும் காலந்தோறும் இடைவிடாது பாரம்பரியமாக வந்து கொண்டிருக்கின்றன.

## சிவாகமங்களின் காலம் :

வேதங்களும் சிவாகமங்களும் நித்தியமானவை என்பது சைவசித்தாந்தத்தின் கோட்பாடு, படைப்புக் காலத்தில் நுண்மையான நாதத்துவத்திலிருந்து தோன்றிய வேதாகமங்கள் மகாப்பிரளய காலத்தில், தோன்றிய இடத்திலேயே சூக்குமமாக ஒடுங்குகின்றன. பின்னர் மீண்டும் படைப்புக் காலத்தில் தோன்றுகின்றன. வேத சிவாகமங்களுக்குத் தோற்றமும் ஒடுக்கமும் உண்டே தவிர அழிவு என்பது கிடையாது. எனவேதான் வேதசிவாகமங்கள் அனாதி நித்தியமானவை என

ஆன்றோர் கூறுவர். நித்தியமான தன்மை உடைய சாத்திரங்கள் இன்ன காலத்தில் தோன்றின என்று யாவராலும் அறுதியிட்டுக் கூறமுடியாது. எனினும் சிவாகமங்கள் வரிவடிவ அமைப்பை ஒரு குறிப்பிட்ட காலத்தில் பெற்றிருக்க வேண்டும் என்பதை யாவராலும் மறுக்க முடியாது.

வேதமந்திரங்களை இன்ன இன்ன இடத்தில் இன்ன இன்ன முறையில் பயன்படுத்தவேண்டும் என்ற வழி முறைகள் சிவாமகங்ளில் கூறப்படுவதால் வேதகாலத்திற்குப் பின்னரே சிவாகமங்கள் எழுத்துவடிவம் பெற்றிருக்க வேண்டும்.

வேதஸம்மிதைகளையும் பிராம்மணங்களையும் ஆரண்யகங்களையும் அடிப்படையாகக்கொண்டு சுரௌத சூத்திரங்களும் கிருஹிய சூத்திரங்களும் தரும சூத்திரங்களும் இயற்றப்பட்டன. இவற்றைக் கல்ப சூத்திரங்கள் எனும் பொதுப் பெயரால் குறிப்பர். சிவாகமங்களின் விதிமுறைகள் பல கல்பசூத்திரங்களில் காணப்படுவதால் சிவாகமங்கள் நிச்சயமாகக் கல்டசூத்திரங்களுக்கு முற்பட்ட காலத்தைச சார்ந்தவையாகவே இருக்கவேண்டும். சில சூத்திரங்கள் பாணினிக்கும் முற்பட்ட காலத்தைச் சார்ந்தவை என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர். கல்ப சூத்திரங்களின் காலத்தைக் கி.மு. நான்காம் நூற்றாண்டு என்றே பெரும்பாலான அறிஞர்கள் கணிக்கின்றனர். எனவே சிவாகமங்கள் கி.மு. நான்காம் நூற்றாண்டிற்கும் முற்பட்டவை எனக் கருதுவதில் தவறு இல்லை. திருமூலர் திருமந்திர நூலைக் காமிகம் முதலிய ஒன்பது சிவாகமங்களின் வழியே படைத்துள்ளார் என்பதை அவரது வாக்காலேயே உணர முடிகிறது. திருமூலருக்கும் முற்பட்ட காலத்தைச் சார்ந்தவை சிவாகமங்கள் என்பதிலும் ஐயமிருக்க முடியாது.

சிவாகமங்களில் ஏகான்மவாதமும், பௌத்தம், சமணம் முதலிய சமயக்கருத்துகளும் மறுத்து ஒதுக்கப்படுவதைக் காணும் அறிஞர் சிலர் சிவாகமங்கள் ஆதிசங்கரரின் காலத்திற்குப் பிற்பட்டு இடைக்காலத்தில் தோன்றியவையாகவே இருக்க வேண்டும் எனக் கூறுகின்றனர். சிவாகமங்கள் முற்றறிவுடைய முழுமுதற் பரம்பொருளால் அருளப்பட்டவை என்ற உண்மையை மறந்துவிட்ட காரணத்தால்தான் அவ்விதமான முடிவுக்கு வருகின்றனர். எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் தோன்றக்கூடியவற்றை ஒருங்கே ஒரே சமயத்தில் உணரும் முற்றறிவுடைய பரம்பொருள் பௌத்தமும் சமணமும் தோன்றிய பிறகுதான் அவற்றை ஆராய்ந்து மறுக்க வேண்டும் என்ற நிலைக்கு ஆட்படுவது கிடையாது. எனவே பௌத்த சமண வாதங்கள் மறுக்கப்படுவது குறித்துச் சிவாகமங்களை இடைக்காலத்திற்குக் கொண்டுவருவது பொருத்தமாகத் தோன்றவில்லை.

# 3. மூல ஆகமங்கள்—உபாகமங்கள்—சார்பு நூல்கள்

சதாசிவப் பெருமான் பிரதிசம்மிதை முறையில் பிரணவர் முதலான பதின்மருக்குக் காமிகம் முதலான பத்து சிவாகமங்களையும் அனாதிருத்திரர் முதலான பதினென்மருக்கு விஜயம் முதலான பதினெட்டு சிவாகமங்களையும் உபதேசித்தருளினார் என்றும் மஹௌக முறையில் அனந்தேசுவரருக்கு இருபத்தெட்டு சிவாகமங்களையும், ஒருங்கே உபதேசித் தருளினார் என்றும் முன்னர்க் கண்டோம். பிரணவர் எனபவர் காமிக ஆகமத்தை உபதேசமாகக் கேட்டபிறகு அவர் திரிகலர் எனபவர்க்கும் திரிகலர் ஹரர் என்பவருக்கும் இவ்வாகமத்தை உபதேசித்தார். இவ்வாறே சிவபேதமான ஏனைய ஒன்பது ஆகமங்களைக் கேட்டோரும் மற்றவர்க்கு உபதேசித்தனர். ருத்திரபேதமான பதினெட்டு ஆகமங்களைக் கேட்டோரும் இவ்வாறே மற்றவர்க்கு உபதேசித்தனர். இவ்வாறு உபதேசம் பெற்றுக் கொண்டோர் சிவபேதமான ஆகமங்களுக்கு முப்பத்தறுவரும் ஆக அறுபத்தாறு பேர்களாவர்.

மிகப்பெரிய அளவில் மூல ஆகமங்கள் இருக்க உபாகமங்கள் எதன் பொருட்டு எனும் கேள்வி எழக்கூடும். ஒரு மூலாகமத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு பாதங்களிலும் குறிப்பாகக் கூறப்பட்ட கருத்துகளை விளக்கிக் கூறுவதற்காகவும் கூறாது விடப்பட்ட கருத்துகளை எடுத்துக் கூறுவதற்காகவுமே அவ்வாகமத்தைச் சார்ந்து உபாகமங்கள் கூறப்பட்டன.

மூலாகமங்களின் எண்ணிக்கை இருபத்து எட்டு எனில் வக்தாரம் முதல் விசுவாத்மகம் ஈறாக உள்ள உபாகமங்களின் எண்ணிக்கை இருநூற்று ஏழு ஆகும்.

முதன்முதல் சதாசிவப் பெருமான் உபதேசித்த பொழுது ஒவ்வொரு மூலாகமமும் அதிக எண்ணிக்கை உள்ள சுலோகங்களைப் பெற்றிருந்தது. உபதேச முறையில் வரும் பொழுது காலப் போக்கில் அவ்வெண்ணிக்கை மிகமிகக் குறைந்து விட்டது. மூல ஆகமங்களின் சுலோக எண்ணிக்கையை ஆகமங்களில் கூறியுள்ளவாறு காண்போம்.

ஆகமங்களின் கிரந்த எண்ணிக்கையை அறிந்து கொள்வதற்கு முன் கோடி என்னும் எண்ணிக்கைக்குமேல் உள்ள எண்களைப் பற்றி அறிந்து கொள்வது அவசியம். பத்துக்கோடி சேர்ந்தது ஓர் அற்புதம்; பத்து அற்புதம் ஒரு பதுமம்; பத்து பதுமம் ஒரு கர்வம்; பத்து கர்வம் ஒரு நிகர்வம்; பத்து நிகர்வம் ஒரு பிருந்தம், பத்து பிருந்தம் ஒரு மகாபதுமம்; பத்து மகாபதுமம் ஒரு சங்கம்; பத்து சங்கம் ஒரு மகாசங்கம்; பத்து மகாசங்கம் ஒரு சமுத்திரம்; பத்து சமுத்திரம் ஒரு மா சமுத்திரம்; பத்து மா சமுத்திரம் ஒரு மத்தியம்; பத்து மத்தியம் ஒரு பரார்த்தம். பரார்த்தத்திற்கு மேற்பட்ட எண் கிடையாது. கணக்கிட்டுப்பார்த்தால் ஒன்றுக்கு இருபதாம் தானம் பரார்த்தம் என்பது புலனாகும்.

மூல ஆகமங்களின் சுலோக எண்ணிக்கை வருமாறு:

காமிகம், பரார்த்தம்; யோகஜம், லக்ஷம், சிந்தியம், லக்ஷம்; காரணம், கோடி; அஜிதம், லக்ஷம்; தீப்தம், லக்ஷம்; சூட்சுமம், பதுமம்; சகசிரம், சங்கம்; அம்சுமான், ஐந்துலக்ஷம்; சுப்பிரபேதம், மூன்று கோடி.

விஜயம், மூன்று கோடி; நிசுவாசம், கோடி; சுவாயம்புவம், ஒன்றரைக் கோடி; அனலம், முப்பதாயிரம்; வீரம், லக்ஷம்; ரௌரவம், எட்டு அற்புதங்கள் (80 கோடி); மகுடம், லக்ஷம்; விமலம், மூன்று லக்ஷம்; சந்திரஞானம், மூன்றுகோடி; பிம்பம், லக்ஷம்; புரோத்கீதம், மூன்று லக்ஷம்; லலிதம், எண்ணாயிரம்; ஸித்தம், ஒன்

றரைக் கோடி; ஸந்தானம், ஆயிரம்; சர்வோக்தம், இரண்டு லக்ஷம்; பாரமேசுவரம், பன்னிரண்டு லக்ஷம்; கிரணம், ஐந்து கோடி; வாதுளம், லக்ஷம்.

இருபத்து எட்டு மூலாகமங்களுக்கும் சேர்த்து சுலோக எண்ணிக்கை பரார்த்தத்து ஒரு சங்க ஒரு பதும எட்டற்புதத்துப் பத்தொன்பது கோடியே முப்பத்து மூன்று லக்ஷத்து நாற்பத்து நாலாயிரம்.

சிவாகமங்களை அருளிய சிவபெருமான் சிவாகமங்களையே தம்முடைய வடிவாக ஏற்றுக்கொண்டு விளங்குகின்றார் என்று காமிகம், அஜிதம், மகுடம் முதலான மூலாகமங்களிலும் சிவார்ச்சனா சந்திரிகை முதலான பத்தி நூல்களிலும் கூறப்பட்டுள்ளது. சிவபெருமானின் ஆகம வடிவை இனிக் காண்போம்.

காமிகம் திருவடிகள்; யோகஜம் கணைக்கால்கள்; சிந்தியம் திருவடிகளிலுள்ள விரல்கள்; காரணம், கெண்டைக் கால்கள்; அஜிதம் முழந்தாள்கள்; தீப்தம் தொடைகள்; சூட்சுமம் குய்யம்; சக்கிரம் இடுப்பு; அம்சுமான் முதுகு; சுப்பிரபேதம் நாபி.

விஜயம் வயிறு; நிசுவாசம் இருதயம்; சுவாயம்புவம் தனங்கள்; அனலம் கண்கள்; வீரம் கழுத்து; ரௌரவம் செவிகள்; மகுடம் கிரீடம்; விமலம் திருக்கரங்கள்; சந்திர ஞானம் மார்பு; பிம்பம் திருமுகம்; புரோத்கீதம் நாக்கு; லலிதம் கன்னங்கள்; ஸித்தம் நெற்றி; சந்தானம் குண்டலங்கள்; சர்வோக்தம் பூணூல்; பாரமேசுவரம் ஆரங்கள்; கிரணம் இரத்தினாபரணங்கள்; வாதுளம் ஆடையும் பரிவட்டமுமாம். வக்தாரம் காலோத்தரம் முதலான உபாகமங்கள் சந்தனப் பூச்சும் பரிமளத் திரவியங்களும் மலர்களுமாக அமைந்துள்ளன. எல்லா ஆகமங்களிலும் உள்ள ஞானபாதமாகிய சித்தாந்தம் சிவபெருமானுக்கு நிவேதனமாக விளங்குகின்றது.

## சார்பு நூல்கள் :

மூல ஆகமங்களிலும் உபாகமங்களிலும் உள்ள ஞான பர்த் கருத்துக்களில் சிலவற்றைத் தொகுத்தும் சில வற்றை விளக்கியும் எழுதப்பட்ட நூல்களே தத்துவப் பிரகாசிகை முதல் பரமோக்ஷ நிராசகாரிகை ஈறாக உள்ள எட்டுப் பிரகரணங்களும்:

| நூலின் பெயர் | | நூலாசிரியர் |
|---|---|---|
| 1. | தத்துவப் பிரகாசிகை | போஜதேவர் |
| 2. | தத்துவ சங்கிரகம் | சத்தியோஜோதி |
| 3. | தத்துவத்திரய நிர்ணயம் | சத்தியோஜோதி |
| 4. | ரத்தினத் திரயம் | ஸ்ரீகண்டர் |
| 5. | போக காரிகை | சத்தியோஜோதி |
| 6. | நாத காரிகை | பட்டராமகண்டர் |
| 7. | மோக்ஷ காரிகை | சத்தியோஜோதி |
| 8. | பரமோக்ஷ நிராச காரிகை | சத்தியோஜோதி |

சைவ சித்தாந்தக் கருத்துக்கள் இந்நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. சிவஞான பாடியத்தையும் மெய் கண்ட சாத்திரங்கள் பதினான்கையும் ஐயந்திரிபறக் கற் பதற்கு இந்நூல்கள் பெருமளவிற்குத் துணை செய்கின் றன. நூலாசிரியர்கள் அனைவரும் காஷ்மீர நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேற்கூறப் பெற்ற எட்டு நூல்களும் பொதுவாக 'அஷ்டப் பிர கரணம்' எனக் கூறப்பெறும்.

சிவாகமங்களின் சரியா பாதம், கிரியா பாதம் எனப்படும். இரண்டு பகுதிகளிலும் கூறப்பெறும் கருத்து களை ஆதாரமாகக் கொண்டு இயற்றப் பெற்றவை பத்ததி நூல்கள் எனப்படும். இவற்றில் ஞானபாத மாகிய சித்தாந்தக் கருத்துக்கள் இடம் பெறவில்லை. செயல் முறைகளை பத்ததிகளில் கூறப்பெற்றுள்ளன. சிவாலயங்களில் நிகழ்த்தப்பெறும் விழாக்களைப் பற்றி

யும் கும்பாபிஷேகம் முதலான நிகழ்ச்சிகளைப் பற்றியும் அறிந்து கொள்வதற்கும் அவைகளைச் செய்வதற்கும் வழிகாட்டியாக இருப்பவை இவை. ஆன்மார்த்தமாகச் செய்யப்பெறும் சிவபூஜா விதியும் இவற்றில் கூறப்பட்டுள்ளது.

கீழ்க்கண்டோர் பத்ததி நூல்கள் இயற்றிய ஆசாரியப் பெருமக்களாவர் :

1. தூர்வாச சிவர், 2. பைங்கள சிவர், 3. உக்கிர ஜோதி, 4. ஸ்ரீகண்டர், 5. விஷ்ணுகண்டர் 6. சுபோதர் 7. வித்தியா கண்டர். 8. ராமகண்டா, 9. ஞான சிவர் 10. ஞான சங்கரர், 11. சோமசம்பு, 12. பிரம்மசம்பு. 13. திரிலோசன சிவர், 14. அகோர சிவர், 15. வருண சிவர், 16. பிரசாத சிவர், 17. ராமநாத சிவர், 18. ஈசான சிவர், பதினெட்டு பத்ததிநூல்களுள் மிகவும் புகழ் பெற்றதும் ஆதிசைவ மரபினரால் இன்றுவரை பயிலப் பெற்றுவருவதும் ஆலயங்களில் வழக்கத்தில் இருப்பது மானது அகோர சிவ பத்ததியே. பத்ததி, வழி, நெறி, மார்க்கம், அத்துவா என்பன ஒரு பொருட் சொற்கள்.

காஞ்சியம்பதியைச் சார்ந்த பஞ்சாட்சர யோகிகளால் இயற்றப் பெற்ற சைவ பூஷணம் என்ற நூலும் திரிலோசன சிவாசாரியாரால் இயற்றப் பெற்ற சித்தாந்த சாராவளி என்ற நூலும் சிவாக்கிர யோகிகளால் இயற்றப் பெற்ற கிரியா தீபிகை என்ற நூலும் சிவாகமச் சார்பு நூல்களே.

## தொகுப்பு நூல்கள் :

சிவாகமங்களின் ஞானபாதப் பகுதியில் உள்ள சுலோகங்களை முறைபடத் தொகுத்து உமாபதி சிவாசாரியார் சதரத்தின சங்கிரகம் என்ற நூலை உருவாக்கினார். மணிமணியான சூத்திரங்கள் நூறு உள்ளதால் இப்பெயர் பெற்றது. கிரணம், மதங்கம், மிருகேந்திரம்,

நிசுவாசம், பராக்கியை, சுவாயர்புவம், சர்வஞானோத்தரம், விசுவசாரோத்திரம், காலோத்தரம் முதலான ஆகமங்களிலிருந்து இந்நூலின் நூறு சுலோகங்களும் தொகுக்கப் பெற்றுள்ளன. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் சதமணிமாலை என்று பெயரிட்டு இந்நூலை தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய மற்றொரு தொகுப்பு நூல் 'சைவாகம பரிபாஷா மஞ்ஜரி' என்பது. இதனைத் தொகுத்தவர் வேதஞானர் என்பவர். சிதம்பரத்தைச சார்ந்த இவரைப் பற்றிய விவரங்கள் அதிகமாகத் தெரியவில்லை. இவர் மறைஞான சம்பந்தராக இருக்கலாம் எனக் கருதுவதற்கு இடம் உண்டு. ஒரு வர்க்கம் இரண்டு வர்க்கம் எனப் பத்து வர்க்கங்கள்வரை ஆகமக் கருத்துக்களைத் தொகுத்துத் தருகிறார் வேதஞானர். ஒரு வர்க்கம் என்ற பகுதியில் ஒவ்வொன்றாக உள்ளவை எவையோ அவற்றைத் தொகுக்கிறார். சிவம் சக்தி, மலம் முதலானவை ஒன்றாக இருந்து பல சக்திகளைப் பெற்றிருக்கும். எனவே ஒரு வர்க்கப் பகுதியில் சிவம் சக்தியைப் பற்றிய கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இரு வர்க்கம், என்பதில் இரண்டிரண்டாக உள்ளவை எவையோ அவற்றைத் தொகுத்துத் தருகிறார். இவ்வாறே அமைத்து இறுதியில் தசவர்க்கம் என்ற பகுதியில் பத்துப் பத்தாக உள்ளவை எவையோ அவற்றைத் தொகுத்தளிக்கிறார். பத்துவகை ஹோமம், பத்து வாயுக்கள், பத்து நாடிகள், பத்துவகை தானங்கள், பத்து வகை ஆயுதங்கள்—இவை முதலான விவரங்கள் இப்பகுதியில் அடங்கியுள்ளன.

## ஆகமச் சார்பான தமிழ் நூல்கள் :

திருமூலர் அருளிய திருமந்திரம் ஒன்பது ஆகமங்களின் சாரமாகத் திகழ்கின்றது. வாகீச முனிவரால் இயற்றப் பெற்ற ஞானாமிர்தம் என்பது கிரணாகமத்தை

அடிப்படையாகக் கொண்டது. சிதம்பரம் மறைஞான சம்பந்தரின் சைவசமய நெறி என்னும் நூலும் தத்துவப் பிரகாசரின் தத்துவப்பிரகாசம் என்பதும் சிவாகமங் களை அடிப்படையாகக் கொண்டுஎழுதப் பெற்றவையே. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளும் சிவாகமங் களின் ஞானபாதப் பகுதிகளை ஆதாரமாகக் கொண்டு சிவப்பிரகாச விகாசம் என்னும் நூலை இயற்றியுள்ளார்.

திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞான போதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் எனப்படும் பதினான்கு நூல்களும் சிவாகம ஞானபாதக் கருத்துக்களை விளக்கிக் கூறுபவையே.

---

# 4. சிவாகமச் செய்திகள்

கோயிலுக்கும் வழிபாட்டிற்கும் மற்றச் சடங்குகளுக்கும்வேண்டிய மந்திரங்களைப்பற்றிக் கூறுபவையே சிவாகமங்கள் என்று பெரும்பாலோர் கருதுகின்றனர். சிவாகமங்கள் மந்திரங்களைப் பற்றிக் கூறுகின்றன என்பது உண்மையே. எனினும் அவைகளில் இவற்றைப் பற்றி மட்டுமே கூறப்பட்டிருக்கின்றன என்றுகருதுதல் பொருந்தாது. தனிமனிதனின் மேம்பாட்டிற்கும் சமுதாயம், கிராமம், நாடு—இவைகளின் உன்னத நிலைக்கும் எவை எவை அவசியமோ அவையனைத்தைப் பற்றியுமே சிவாகம சாத்திரங்கள் மிக விரிவாக எடுத்துக் கூறுகின்றன. சிவாகம சாத்திரங்களைக் கலைக்களஞ்சியங்கள் எனக் கூறுவது மிகையாகாது. சிற்பக்கலை, கட்டடக்கலை, ஓவியக்கலை, சோதிடக்கலை முதலான பல்கலைப் பற்றியும், மருத்துவத்தைப் பற்றியும் யோகப் பயிற்சியைக் குறித்தும் சிவாகமங்களில் கூறப்படுகின்றன. தேர்களின் வகைகளைப் பற்றியும் அவற்றை உருவாக்கும் முறைகளைப் பற்றியும் சிவாகமங்களைப் பயின்று தெரிந்து கொள்ளலாம். சுருங்கச் சொன்னால், சிவாகமங்களில் கூறப்பெறாத துறையோ, கலையோ எதுவும் இல்லை.

ஒவ்வோர் ஆகமமும் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படும் நான்கு பாதங்களாக (பகுதிகளாக) அமைந்து பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களையும் விளக்கிக் கூறும். பதி என்பது இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்கி உயிர்க் கூட்டத்தின் மேல் கொண்ட திருவருள் காரணமாகப் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் எனும் ஐந்தொழில்களையும் செய்யும் சிவபரம்பொருளைக் குறிக்கும். எல்லாவற்றுக்கும் மேலாகவும் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டும் எல்லாவற்றிற்கும் ஆதாரமாகவும் சிவபரம்பொருள்

என் ஒன்று உண்டு என்று எப்படி அறிவது? உயிர் என்பது என்ன? இவ்வுலகம் எதன் பொருட்டு உள்ளது?

காமிகம் எனப்படும் ஆகமத்தைச் சார்ந்த உபாகமம் மிருகேந்திரம் என்பது. சிவபெருமான் சிங்கவடிவம் தாங்கி (மிருகேந்திரம்—சிங்கம்) இந்திரனுக்கு உபதேசித்தது இவ்வாகமம். ஆதலால் இப்பெயர் பெற்றது. சித்தாந்த சைவத்தை உணர்த்தும் முக்கியமான உபாகமங்களுள் இதுவும் ஒன்று. மேலெழுப்பப்பட்ட மூன்று கேள்விகளுக்கும் இவ்வாகமம் கீழ்க்கண்டவாறு விடையளிக்கின்றது.

உடல், கருவி, உலகம் முதலியஅனைத்தும் பானை, கட்டிடம் முதலானவற்றைப் போல் காரியப் பொருள்களாகும். இவை (உடல் முதலானவை), எல்லாவற்றையும் ஒருங்கே உணரவல்ல ஞானசக்தியும் எல்லாவற்றையும் ஒருங்கே செய்ய வல்ல கிரியா சக்தியும் உடைய சிவபரம்பொருளால் உருவாக்கப்பட்டனவாக அனுமானத்தால் உணரப்படுகிறது. அவர் மந்திரமயமான சரீரம் தாங்கிப் படைப்பு முதலான தொழில்களில் ஈடுபடுகிறார்.

உடல், கருவி, உலகம் முதலானவை காரியப் பொருள் என்றும் அவற்றிற்குக் கருத்தா இறைவன் என்றும் கூறப்பட்டது. இறைவன் வரம்பில் இன்பம் உடையவன் ஆதலால் எப்பொழுதுமே நிறையுணர்வு (நித்ய திருப்தி) உடைய இறைவனுக்கு உடல், கருவி, உலகம் முதலானவற்றால் ஒருவிதமான உபயோகமும் இல்லை. உடல் முதலானவை ஜடப்பொருள்கள் ஆனதால் அவை தம்மைத் தாமே பயன்படுத்திக் கொள்ள முடியாது. அவற்றைப் பயன்படுத்தக்கூடிய அல்லது அவற்றால் பயன் பெறக்கூடிய பொருள் ஒன்று தனியே இருக்க வேண்டும். உடல் முதலானவற்றை இறைவன் அலகிலா விளையாட்டு என்ற முறையில் படைக்கின்றான் எனில் பேரறிவே வடிவாகக் கொண்டு விளங்கும் அவன் தனக்கும் பயன்படாத, தன்னையும் பயன்படுத்திக் கொள்

ளத் தெரியாத, பொருள்களைப் படைக்கமாட்டான். அவனுக்கு வீணான செயலைச் செய்யத் தெரியாது. எனவே உலகம் (பாசம்) என்பது இறைவன் அல்லாத வேறோர் அறிவுடைப் பொருளின் பொருட்டு உருவாக்கப்பட்டுள்ளது. அந்த அறிவுடைப் பொருளே உயிர்.

உயிர் உடலெடுத்துப் பிறந்து தனது வினைக்கேற்ற பலன்களை அனுபவித்து மாயை, கன்மம், ஆணவம் எனும் மும்மலங்களிலிருந்து விடுபடுவதற்காக உலகம் நிலைபெற்றுள்ளது. மாயை, கன்மம், ஆணவம் என்பவையே பாசங்களாகும்.

இறை எனப்படும் பதியைப் பற்றியும் உயிர் எனப்படும் பசுவைப் பற்றியும் தளைகள் எனப்படும் பாசங்களைப் பற்றியும் விரிவாக ஆராய்ந்து கூறுபவையே சிவானுகமங்கள். இம்மூன்றைத்தவிர வேறு பொருளைப் பற்றிக் கூறப்பட வில்லையா எனும் கேள்விக்குச் சூரிய பட்டர் என்பவர் தமது சைவசித்தாந்த பரிபாஷை எனும் நூலில் கூறுகிறார்: 'சைவ சம்பந்தமான பொருள் பதி பசு பாசம் எனும்மூன்றே. இம்மூன்றைத் தவிர வேறு பொருள்கள் இருப்பினும் ஆராய்ந்து நோக்குமிடத்து அவையனைத்தும் இம்மூன்றில் அடங்கும்.', சூரியபட்டர் கூறும் கருத்து உண்மையே என்பதை இன்றைய மேலை நாட்டுத் தத்துவ நூல்களைப் பயின்றும் தெரிந்து கொள்ளலாம்.

முப்பொருள்களைக் கூறுவதே சிவாகமத்தின் நோக்கம் எனில் மூன்று பாதங்களாக அமைந்திருக்கலாமே, ஏன் சரியை முதலான நான்கு பாதங்களாக அமைய வேண்டும்? இக்கேள்விக்கும் சூரியபட்டர் கூறும் விடையைக் காண்போம்.

''சரியை முதலான நான்கு பாதங்களிலும் தனித் தனியே முப்பொருளைப் பற்றியும் பேசப்படுகின்றது. சரியாபாதம் என்பது முக்கியமாக ஆலய வழிபாட்டைக் கூறுவது. வழிபாடு செய்யப் படுபவராயிருத்தல் பற்றிப் பதியும், வழிபாடு செய்வது பற்றிப் பசுவும் (உயிரும்), வழிபடுவதற்குச் சாதனங்களாகவும் இறைவனின் திரு வடியில் அர்ப்பணிக்கத் தகுந்தவையாகவும் விளங்குதல் பற்றிப் பாசமும் சரியாபாதத்தில் ஆராயப் பெறுகின் றன.

''கிரியாபாதத்தில் முக்கியமாகக் கூறப்பெறுவது தீக்ஷை என்பது. தீக்ஷை எனும் கிரியையில் அனுக்கிரகம் புரியும் கருத்தாவாக விளங்குதல் பற்றிப் பதியும், திரு வருளைப் பெறுவதற்குத் தகுதியுடையதாக விளங்குதல் பற்றிப் பசுவும், ஆன்மாவினால் நீக்கத்தக்கவை என்பது பற்றிப் பாசமும் கிரியாபாதத்தில் ஆராயப் பெறுகின் றன.

''யோக பாதத்தில் முக்கியமாக இடம் பெறுவது தியானம் என்பது. தியானிக்கப்படும் பொருளாக இருத் தல் பற்றிப் பதியும் தியானிக்கும் கர்த்தாவாக இருத்தல் பற்றிப் பசுவும் தியானத்தால் மறக்கத் தகுந்தவையாக விளங்குதல் பற்றிப் பாசமும் யோக பாதத்தில் ஆராயப் பெறுகின்றன.

''நான்கு பாதங்களுள் முதன்மையானது ஞான பாதமே. ஞானபாதத்தில் பதி பசு பாசங்கள் நிருபணம் செய்யப்படுகின்றன.

சிவாகமங்கள் நான்கு பாதங்களாக அமைந்து மூன்று பொருள்களை எவ்வாறு விளக்குகின்றன 'என்

பதைச் சூரியபட்டரின் விளக்கத்தால் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

இப்பொழுது கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் கிரணாகமம் சுப்பிரபேதாகமம் எனும் இரண்டு மூலாகமங்களும் மிருகேந்திராகமம் மதங்காகமம் எனும் இரண்டு உபாகமங்களுமே நான்கு பாதங்களாக அமைந்துள்ளமையைக் காண்கிறோம். காமிகம் என்பது சிவாகமங்களுள் மிகவும் சிறந்தது. தற்பொழுது கிரியாபாதம மட்டுமே கிடைத்துள்ளது. பூர்வபாகத்தில் 75 படலங்களும் உத்தரபாகத்தில் 98 படலங்களும் அமைந்துள்ளன. இவற்றில் அமைந்துள்ள சுலோகங்களின் எண்ணிக்கை ஏறக்குறைய பன்னிரண்டாயிரம். காரணாகமத்திலும் கிரியாபாதம் மட்டுமே கிடைத்துள்ளது. அஜிதம் எனப்படும் ஆகமத்திலும் கிரியாபாதம் மட்டுமே அச்சிடப்பெற்றுள்ளது. பௌஷ்கராகமம் என்பதில் ஞானபாதம் மட்டுமே அச்சிடப் பெற்றுள்ளது. அச்சிடப்படாமல் சுவடி வடிவில் உள்ள தீப்தம், சூக்குமம், வீரம் முதலான பல ஆகமங்களிலும் படலங்கள் வரிசையாக அமைந்துள்ளதைக் காண முடிகின்றதே தவிர சரியை, கிரியை முதலான பாதப் பிரிவுகளைக் காணமுடியவில்லை.

சிவாகமங்களில் கூறப்படும் செய்திகள் அனைத்தையும் இங்கே தொகுத்துத் தருதல் என்பது இயலாத செயலாகும். எனினும் சமுதாய மேம்பாட்டிற்கும் தனி மனிதனின் தெய்வீக வாழ்க்கைக்கும் சிவாகமங்கள் எவ்வாறு அவசியமாக உள்ளன என்பதை விளக்கிக் காட்டும் போக்கில் சில கருத்துக்கள் மட்டுமே இப்பகுதியில் கூறப்பெறுகின்றன. கருத்துக்களில் பெரும்பாலானவை காமிகம் எனப்படும் ஆகமத்தைச் சார்ந்தவை. சிறுபான்மை ரௌரவம், அஜிதம், காரணம், வாதுளம் சுப்

பிரபேதம், மகுடம் எனப்படும் ஆகமங்களைச் சார்ந்தவை.

## கிராமங்களும் நகரங்களும்

நாகரிகம் முதிர்ந்துள்ள இக்காலத்தில் புதிதாக ஒரு நகரத்தையோ, கிராமத்தையோ, குடியிருப்பையோ உருவாக்க வேண்டுமெனில் என்ன என்ன திட்டங்கள் மேற்கொள்ளப் பெறுகின்றனவோ அவை அனைத்தைப் பற்றியும் சிவாகமங்கள் கூறுகின்றன. மக்கள் அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கேற்ற நல்ல சுற்றுப்புறச் சூழலுள்ள இடத்தைத் தேர்ந்தெடுப்பது, அந்த இடத்தைப் பல்வேறு பாகங்களாகப் பிரித்து இன்ன இடத்தில் ஆலயம், இன்ன இடத்தில் கல்விச்சாலை, இன்ன இடத்தில் அலுவலர் குடியிருப்பு, இன்ன இடத்தில் மருத்துவ சாலை—எனத் திட்டமிடுவது, குடிநீர் வசதி, கழிவுநீர்க் கால்வாய்கள்அமைப்பது, நீர்நிலைகள் ஏற்படுத்துவது—இவை முதலான அடிப்படை வசதிகள் அனைத்தையும் திட்டமிட்டு நகரத்தையோ கிராமத்தையோ எவ்வாறு அமைக்க வேண்டும் என்று காமிகம் முதலான ஆகமங்கள் விளக்கிக் கூறுகின்றன. இன்றைய நூல்கள் இவற்றைப் பற்றிக் கூறுவதற்கும் சிவாகமங்களில் கூறப்பட்டுள்ளனவற்றிற்கும் இடையே பல வேறுபாடுகளைக் காணலாம் எனினும் ஆகமச் செய்திகள் இன்றைய நடைமுறைக்கு ஒத்துவரக் கூடியவையே என்பதை மறுக்க முடியாது.

மக்கள் வாழ்வதற்கேற்ற கிராமத்தையோ நகரத்தையோ உருவாக்க வேண்டுமெனில் முதலில் நல்ல இடத்தை ஆராய்ந்து தேர்ந்தெடுக்க வேண்டும். சிவாகமங்களில் நிலத்தைப் பற்றிய பாகுபாடுகள் மிகவும் விரிவாக அமைந்துள்ளன. தமிழ் இலக்கியங்களில் குறிஞ்சி,

முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐம்பெரும் நிலப்பிரிவுகளைக் காண்கிறோம். ஆகமங்களில் ஐந் திணைப் பாகுபாட்டைக் காணமுடியாது. நிலத்தில் காணப்படும் பொருள்கள், வாழும் உயிரினங்கள் என் பனவற்றிற்கு ஏற்பச் சிவாகமங்கள் பன்னிரண்டு வித மான நிலங்களைக் கூறுகின்றன.

1. சைவபூமி—கோங்கு, மருது, அரசு, விளா அசோகு, ஆச்சா, நிலத்தாமரை, துளசி, அறுகு, விஷ்ணுக் கிராந்தி, எலிக்காதுக் கீரை, இலவு, மலைநன்னாரி, புறா, கிளி, அன்னம் இவைகளையுடையது சைவபூமி எனப்படும். சிவாலயத்திற்கு ஏற்ற இடமான இது மிக வும் மங்களகரமானது.

2. பிரம்மபூமி : இது வில்வம், முருக்கு, விசு வாமித்திரம் எனப்படும் தருப்பை, நாணல் முதலான வற்றையும் நறுமணமுள்ள ஹோமத் திரவியங்களையும் உடையதாக விளங்குவது. மாலைகள் வாழ்வதற்குத் தகுதியானது. இதுவும் நன்மைகளைத் தரும் நிலமே.

3. விஷ்ணுபூமி : தும்பைச் செடி, புளியமரம், புங்க மரம், மூங்கில், பருத்தி, எருக்கு, செம்பருத்தி முதலானவற்றையும் அன்னம் முதலான பறவைகளை யும் பல விலங்குகளையும் உடையதாக விளங்குவது விஷ்ணுபூமி. வாழும் மனிதர்க்கு வீர பராக்கிரமங் களைக் கொடுப்பது இந்தப் பூமி.

4 இந்திரபூமி : வாழை, பலா, மாமரம், சுர புன்னை, மகிழ், பாதிரி, நொச்சி, நெல்லி, கருநெய்தல்— இவற்றைக் கொண்டிருப்பது இந்திர பூமி இது வணிகர்க் கும் வேளாளர்க்கும் சிறப்பினைத் தருவதாகும்

5 பசுபூமி : பாதிரி, அகில், அழிஞ்சில் முதலான மரங்களையும் பூனை, கீரி முயல், செந்நாய், உடும்பு முதலான பிராணிகளையும் சகோரம் முதலான பறவை களையும் உடையது பசுபூமி இது தன தான்யங்களின் வளர்ச்சியைக் கொடுக்கும்; வீரியத்தையும் தைரியத்தை யும் ஓங்கச் செய்யும்

6 பூதபூமி : பெருநெரச்சி, குறுக்கத்தி, அறுகு, அழிஞ்சில், முருக்கு, மல்லிகை, அலரி, இலுப்பை முத லானவற்றைக் கொண்டு நறுமணம் பரப்பி விளங்கும். இது அன்னத்தையும் புஷ்டியையும் கொடுக்கக் கூடியது

7 ஆஸுரபூமி : பருந்துகளும் வேடர்களும் நிறைந்து தீ நாற்றம் உடைய இந்நிலத்தில் செரா, மருது, ஓமை முதலான மரங்களும் கொடிய விலங்கு களும் அதிகமாகக் காணப்படும் வாழும் மனிதர்க்கு இடையே கலகங்களைத் தோற்றுவிக்கக் கூடியது இவ் வகை நிலம்

8 பைசாசபூமி : இதுவும் துர்க்கந்தம் உடைய நிலமே கழுதை, ஒட்டகம், பன்றி, நரி முதலிய விலங் குகள் நிறைந்தது; இலவு, மகிழ், தானறி, நறுவிலி முத லான மரங்களை உடையது வேடர்க்கும் சண்டாளர்க் கும் இருப்பிடமாக இலங்குவது இது எல்லாவிதமான அழிவுகளையும் கொடுக்கும்

9 ராக்ஷஸபூமி : பரிமளப் பொருள்கள் நிறைந்து விளங்கும் இவ்வகை நிலத்தில் மிளகும் வெல்லமும் நச் சுப் பொருள்கள் பலவும் அதிகமாகக் காணப்படும். சண் டாளர்களும் திருடர்களும் வாழும் இடம் இது. தலை வலி முதலான நோய்களையும் நாளுக்கு நாள் அழிவை யும் கொடுக்கக் கூடியது இந்நிலம்.

10. வாயுபூமி : குள்ளநரிக் கூட்டங்களும் சுவர்க் கோழிகளும் பருக்கைக் கற்களும் நிறைந்துள்ள இந்நிலம் துன்பங்களையும் தீய பேறுகளையும் கொடுக்கக்கூடியது.

11. வருணபூமி : பாக்கு மரங்களை மிகுதியாகக் கொண்டு நீர்வளம் மிகுந்துள்ள இந்நிலம் எல்லாவித மான நற்பேறுகளையும் கொடுக்கக் கூடியது.

12. ஆக்னேயபூமி : சதுரக்கள்ளி, நறுவிலி, முரட்டுப் பாறாங்கற்கள் முதலியவற்றை உடைய இந்நிலம் நீரின்றி வறண்டு வெப்பத்தோடு கூடியதாக இருக்கும். இது எல்லா விதமான கெடுதிகளையும் விளைவிக்கக் கூடியது.

மேற்கூறப்பட்ட பன்னிரண்டு விதங்களான பாகு பாடு தவிர வேறு விதமான பிரிவுகளும் உண்டு. சாத்து விகம், ராஜஸம், தாமஸம் எனப்படும் முக்குணங்களின் அப்படையில் நிலம் ஆறுவிதமாகப் பிரிக்கப்படுகிறது. சாத்துவிககுணம் அதிகமாக உள்ள இடம் நாகரம் என் றும் தாமஸ குணம் அதிகமாக உள்ள இடம் வேஸரம் என்றும் ராஜஸ குணம் அதிகமாக உள்ள இடம் திரா விடம் என்றும் சாத்துவிகமும் ராஜஸமும் அதிகமாக உள்ள இடங்கள் காலிங்கம் என்றும் வராடம் என்றும் ஏனைய இடங்கள் சார்வதேசிகம் என்றும் கூறப்பெறும்.

ஜாங்கல பூமி, அனூபபூமி, சாதாரண பூமி என மூன்று வகையாகவும் பத்மகம், பத்ரகம், தூம்ரம், பூர் ணம் என நான்கு வகையாகவும் சில ஆகமங்கள் நிலத் தைப் பாகுபாடு செய்து விளக்குகின்றன.

இவ்வாறு கூறப்பட்டுள்ள நிலங்களில் எது பலதரப் பட்ட மக்களின் வாழ்க்கைக்கு ஏற்றதாக விளங்குகிறதோ அதையே தேர்ந்தெடுக்க வேண்டும். வேறுஇடம் கிடைக்

காமல் பிசாச பூமி, ஆசுர பூமி, ராக்ஷஸ பூமிகளைத்தேர்ந் தெடுக்கும் சூழ்நிலை நேருமானால் இப்பகுதிகளை எருதுகள் பூட்டிக் கலப்பையால் பல தடவை உழுது ஒரு வருடம் கழித்த பின்னரே வீடுகள் கட்டத் தொடங்க வேண்டும்.

பொதுவாக ஒரு குறிப்பிட்ட இடத்தைக் கிராம நிர்மாணத்திற்குத் தேர்ந்தெடுப்பதாக இருந்தால் முத லில் சான்றோரும் வேதாகம ஞானம் சிறக்கப் பெற் றோரும், சாத்திரங்களில் கூறப்பட்டுள்ளவாறு எல்லாச் செயல்களுக்கும் வெற்றியைத் தரக் கூடிய மங்களகர மான காலத்தை நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும். இதற்குப் பிறகு இடத்தைத் தேர்ந்தெடுக்கப் புறப்படு வதற்கு முன்னால் நிமித்தங்களை (சகுனங்களை) ஆராய்ந்து பார்க்க வேண்டும். சுபமான சகுனங்களாக இருப்பின் மேற்கொண்டு காரியத்தில் இறங்கலாம். தீய சகுனங்கள் தோன்றினால் அச்செயலை அப்போதைக்கு நிறுத்தி விட வேண்டும். மூன்று முறை சகுனம் பார்த்து, மூன்று முறையும் தீய சகுனங்களாகவே தோன்று மானால் அந்தச் செயலை அறவே விலக்கிவிடவேண்டும்.

சுபமான காலத்தை முன்னிட்டும் சுபமான சகு னத்தை முன்னிட்டும் நல்ல இடத்தைத் தேர்ந்தெடுக் கப் புறப்பட்ட பிறகு முன்னே கூறப்பட்ட சைவபூமி முதலானவற்றுள் எது சிறப்புடையதாகக் கிடைக்கின் றதோ அதனைக் கைக்கொள்ள வேண்டும். தகுதியான நிலத்தைத் தேர்ந்தெடுத்ததும் அந்த நிலம் கட்டிடங் கள் கட்டுவதற்கு ஏற்றதா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

பூமியை இரண்டு முழ சதுரத்திற்கோ நான்கு முழ சதுரத்திற்கோ பள்ளம் செய்ய வேண்டும். வெளியே

எடுக்கப்பட்ட மணலால் மீண்டும் அப்பள்ளத்தைத் தூர்க்க வேண்டும். பள்ளம் முழுவதும் சமமாக நிரப்பப் பட்ட பிறகு மணல் மீதமிருக்குமாயின் அந்த இடம் கட்டிடம் கட்டுவதற்கு மிக உத்தமமான இடமாகும். பள்ளத்தைத் தூர்க்கும்போது மணல் மீதமின்றிச் சரி யாகப் போகுமானால் அந்த நிலம் மத்திமமான நிலம். பள்ளத்தைத் தூர்ப்பதற்கு, அகழ்ந்தெடுக்கப்பட்ட மணல் போதாமல் இருக்குமாயின் அந்த நிலம் தாழ்ந்த நிலமாகும். கட்டிடம் கட்டுவதற்கு இத்தகைய நிலம் தகுதியற்றது. நிலத்தின் தராதரத்தை ஆராய்வதற்கு வேறுபல முறைகளும் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன.

மேற்கூறியவாறு நிலத்தை ஆராய்ந்த பிறகு செய் யப்பட வேண்டியது 'பிரவேச பலி' எனும் செயலா கும். ''இந்தப் பகுதியில் வசிக்கும் பூத, பிசாச, ராக்ஷஸ் கணங்கள் யாவும் வேறிடத்திற்குச் செல்ல வேண்டும். இந்தப் பகுதியைக் கிராமத்திற்காகக் கைக்கொள்ளப் போகின்றோம்' என்ற முறையில் பிரார்த்தனை செய்து தயிரன்னத்தாலும் நெய் அன்னத்தாலும் அந்நிலத்தில் உள்ள கணங்களுக்குப் பலியிட வேண்டும். பிறகு எத் துணைப் பரப்பளவிற்கு நிலத்தைக் கைக்கொள்ளவேண் டுமோ அந்தப் பரப்பு முழுவதிலும் மந்திரிக்கப்பட்ட கும்பநீர் கொண்டு தெளிக்க வேண்டும். இவ்வாறு கும்ப நீரால் தூய்மை செய்த பிறகு அந்நிலத்தைப் பலமுறை உழ வேண்டும். குறைந்த அளவு ஐந்து முறைகளாவது உழுதல் வேண்டும். பின்னர் எள், கடுகு, பயறு, உளுந்து நெல் முதலானவற்றை விதைத்து அவை முளை வந்த தும் மூன்று இரவுகளோ ஐந்து இரவுகளோ பசுக்களைக் கொண்டு மேயச் செய்ய வேண்டும்.

எருது கன்றுகளோடு கூடின பசுக்களின் சாணியா லும் மூத்திரத்தாலும், அவைகளின் காலடி படுவதாலும்

அசை போட்டுக் கக்குவதால் விழுந்த நுரைகளாலும் தூய்மையாக்கப்பட்ட நிலத்தின் நடுவில் கிராமத்தை நிர்மாணிக்க வேண்டும். சங்குத்தாபனம் (சங்கு—மரக் குச்சு) எனும் செயலால், குறிப்பிட்ட அந்த இடத்தைப் பொறுத்த வரையில் நேர்கிழக்கு எது, நேர்மேற்கு எது என்று திசைகளை நிர்ணயம் செய்ய வேண்டும். கிராமத்தின் அமைப்பைத் திசைகள் எவ்வாறு பாதிக்கின்றன என்பதையும் சூரியன் செல்லும் கதிக்கும் கிராமத்தின் அமைப்புக்கும் உள்ள தொடர்பு இன்னது என்பதையும் ஆகமங்கள் விளக்கமாகக் கூறுகின்றன.

தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்திற்குச் சரியான திசைகளை அறிந்துகொண்ட பிறகு வாஸ்துபலி எனும் செயலுக்காகப் பதவின்யாசம் என்பதைச் செய்வார்கள். இவற்றைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு முன் வாஸ்துபுருஷன் என்பவனைப் பற்றி அறிய வேண்டியது அவசியம்.

முன்பொரு காலத்தில் சிவபெருமானுக்கும் அந்தகாசுரன் என்னும் அசுரனுக்கும் இடையே போர் மூண்டது. அப்பொழுது சிவபெருமான் கொண்ட கோபத்தின் காரணமாக நெற்றியில் வியர்வை தோன்றியது. ஒரு வியர்வைத் துளி பூமியில் விழ, அதிலிருந்து பூதம் ஒன்று உண்டாயிற்று. அது சிவபெருமானுடைய கட்டளையினால் அந்தகாசுரனைக் கொன்று அவனது இரத்தத்தைப் பருகித் திருப்தி அடைந்து சிவபெருமானைக் குறித்தே தவம் புரிந்தது. தவப்பயன் காரணமாகச் சிவபெருமான் அந்தப் பூதத்திற்குப் பல வரங்களை அருளினார். அது தனது வர பலத்தால் மூன்று உலகங்களையும் அடக்கியது. தேவர்கள் முன்பு சூரபதுமனைக் கண்டு அஞ்சி ஒடுங்கியது போன்று அந்தப் பூதத்தைக் கண்டு பயந்து நடுநடுங்கிச் சிவபெருமானிடம் தஞ்சம் அடைந்

தனர். தேவர்களிடம் கருணை கொண்ட சிவபெருமான் பூதத்தை அடக்கவேண்டி அதிபலர் என்னும் ருத்திரரை யும் எட்டு மாயாபாசங்களையும் படைத்தார். அதிபல ருத்திரர் எட்டுப் பாசங்களினாலும் பூதத்தைக் கட்டிக் கீழே தள்ளினார். பிறகு பிரமன் முதலான ஐம்பத்து மூன்று தேவர்களை அந்தப் பூதத்தின் தேகத்தில் வசிக் குமாறு செய்தார். தனது தேகத்தின் ஒவ்வோர் இடத் தில் ஒவ்வொரு தேவர் இடங்கொண்டு வசிக்க அப்பூதம் வாஸ்து புருஷன் என அழைக்கப்பெற்றுச் சிவபெருமா னது கட்டளையினால் நிலத்தில் படிந்து உறங்கிக்கொண் டிருக்கிறது. தேவதைகள் வாசம் செய்வதால் வாஸ்து எனும் பெயர் உண்டாயிற்று.

வாஸ்து புருஷனின் தோற்றத்தைக் குறித்து வேறு விதங்களாகவும் சில ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன. வாஸ்து புருஷன் இடக்கையை மடித்து அதன் மீது தலை வைத்துப் படுத்துத் தூங்கிக் கொண்டிருப்பான். அவ் வாறு உறங்கிக் கொண்டிருந்தாலும் சில குறிப்பிட்ட தினங்களில் சில நாழிகை கண் விழிப்பான். அப்பொழுது அவனது பார்வைக்கு உட்படும் நிலத்தை வீடு கட்டு வதற்காகப் பயன்படுத்தக் கூடாது. அவன் தூங்கிக் கொண்டிருக்கும் நிலையும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாறும். புரட்டாசி மாதம் முதல் கார்த்திகை மாதம் வரை கிழக்கே தலை வைத்து மேற்கே கால்களை நீட்டியும், மார்கழி மாதம் முதல் மாசி மாதம் முடிய தெற்கே தலை வைத்து வடக்கே கால்களை நீட்டியும், பங்குனி மாதம் முதல் வைகாசி வரை மேற்கே தலை வைத்துக் கிழக்கே கால்களை நீட்டியும், ஆனி முதல் ஆவணி வரை வடக்கே தலை வைத்துத் தெற்கே கால்களை நீட்டியும் படுத்திருப்பான்.

வாஸ்து புருஷனின் நிலை இவ்வாறு மாறிக் கொண்டே இருப்பதால் வாஸ்துபலி எனும் செயலைச் செய்யும் பொழுது வாஸ்து புருஷனின் தேகத்தில் இடம் பெற்றிருக்கும் வாஸ்து தேவர்களின் இருப்பையும் அந்தக் காலத்திற்குத் தகுந்தாற் போல் அறிந்து அந்த அந்தத் தேவருக்கு உரிய பலியைக் கொடுக்க வேண்டும். இதை அறிந்து கொள்வதற்குத்தான் பதவிந்யாசம் எனும் செயல் மேற்கொள்ளப் பெறுகிறது.

எந்த நிலம் தேர்ந்தெடுக்கப்படுகிறதோ அந்த நிலத்தின் பரப்பளவிற்குத் தகுந்தவாறு அதனைப் பல பாகங்களாகப் பகுக்க வேண்டும். பாகம் செய்யாமல் அப்படியே இருப்பதானால் ஒரு பதம் என்பர். ஒரு பதம் உடைய நிலத்துக்குச் சகளம் என்று பெயர். சகளம் என்ற ஏகபத வின்யாசத்தில் நடுவில் பிரம்மாவும் கிழக்கில் இந்திரனும் தெற்கில் யமனும் மேற்கில் வருணனும் வடக்கில் சந்திரனும் வாஸ்து தேவர்கள் ஆவார்கள். இவர்களுக்கு உரிய பலியைக் கொடுத்த பிறகு கட்டிட வேலையைத் தொடங்கலாம். நீளத்தையும் அகலத்தையும் இரண்டு இரண்டு சம பாகங்களாகப் பிரித்துக் குறுக்கும் நெடுக்குமாகக் கோடு போட்டால் அது இரண்டு பத நிலமாகிப் பேசகம் எனும் பெயர் பெறும். இரண்டு பத வாஸ்துவில் நான்கு கட்டங்கள் ஏற்படும். நடுவில் பிரம்மா. நான்கு கட்டங்களில் நான்கு வாஸ்து தேவர்கள். கிழக்கு முதலான எட்டுத் திக்குகளிலும் எட்டு வாஸ்து தேவர்கள்.

ஏகபதம் உடைய சகளம் என்பது முதல் முப்பத்திரண்டு பதம் உடைய இந்திரகாந்தம் என்பது வரை முப்பத்திரண்டு விதமான பதவின்யாசங்கள் ஆகமங்களிலும் மானஸாரம் முதலான சிற்ப சாத்திரங்களிலும் கூறப்பட்டுள்ளன. முப்பத்திரண்டிற்கு மேற்பட்ட பதம் கிடையாது. முப்பத்திரண்டு பதவின்யாசத்தில் ஆயிரத்து இருபத்து நான்கு கட்டங்கள் ஏற்படுவதால் வாஸ்துபலி என்பதை வித்தாரமாகச் செய்ய வேண்டிவரும். மிகப் பெரிய அளவில் நகரங்களை அமைப்பதற்கு இத்தகைய பதவின்யாசங்களைச் செய்ய வேண்டும். எந்த எந்தக் கட்டத்தில் எந்த எந்த வாஸ்து தேவதை அதிபதி என்னும் விவரங்களையும் இன்னாருக்கு இன்ன பொருள் பலி என்பது போன்ற விவரங்களையும் விரிவான அளவில் ஆகமங்களிலும் சிற்ப சாத்திரங்களிலும் காணலாம். கிராமம் முதலானவற்றிற்கும் வீடு கட்டுவதற்கும் உசிதமான பதங்கள் மூன்று. அவை எட்டுப் பதம் உடைய (64 கட்டங்கள் உடைய) மண்டுகம், ஒன்பது பதம் உடைய (81 கட்டங்கள் உடைய) பரமீசம், பத்துப் பதம் உடைய (100 கட்டங்கள் உடைய) ஆசனம் என்பன. பதவின்யாசம் என்பதைக் கொண்டுதான் வீதிகள் எவ்வாறு அமைக்கப்படவேண்டும் என்பதையும் இன்ன இடத்தில் இன்ன தேவாலயம் என்பதையும் இன்ன வகுப்பார்க்கு இன்ன வீடு என்பதையும் கல்விச்சாலை அமைக்க வேண்டிய இடத்தையும் வேறு பலவற்றையும் நிர்ணயம் செய்வார்கள்.

''சாஸ்திரப்படி செய்யப்பட்ட வாஸ்துவை(நிலத்தை) விட்டுத் தேவர்கள் ஒருபோதும் நீங்கமாட்டார்கள்.

வாஸ்து பூஜையும் பலியும் செய்வதால் பிசாசு, பிரேத கணம், ராக்ஷஸர் முதலிய கணங்களெல்லாம் தீங்கு செய்வதற்குச் சக்தியற்றவராகின்றனர்'' என்று காமிகாகமம் கூறுகிறது.

பன்னிரண்டு விதங்களான கிராமங்கள் காமிகத்தில் கூறப்பெற்றுள்ளன. அக்கிரகாரம் (மங்களம்), கிராமம், குடிகம், (ஏகபோகம்), நகரம், கர்வடம், பட்டினம், கேடகம், கண்டகை, சிபிரம், ஸேனாமுகம், ஸேனாஸ்தானம், மடம் என்னும் பன்னிரண்டு ஊர்கள், வாழும் மக்களின் தன்மையை ஒட்டிக் கூறப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கிராமமும் அதன் நிலப்பரப்பிற்குத் தகுந்தாற்போல் ஒவ்வொரு வடிவத்தில் அமைக்கப் பெறும். வில் போன்ற அமைப்புடைய கிராமத்திற்குக் கார்முகம் என்று பெயர். தாமரை போன்ற அமைப்புடைய கிராமத்திற்குப் பத்மகம் எனப்பெயர். இவ்வாறே தண்டகம், சர்வதோபத்திரம், நந்தியாவர்த்தம், ஸ்வஸ்திகம், பிரஸ்தரம், சதுர்முகம், பிரகீர்ணம், ஸம்பத்கரம், பராகம், ஸ்ரீப்ரதிஷ்டிதம், ஸ்ரீவத்ஸம் எனப் பலவகை வடிவங்களில் கிராமங்கள் நிர்மாணிக்கப்படும் என்பதை ஆகமங்கள் எடுத்துரைக்கின்றன.

கிராமத்தின் வடகிழக்கு, கிழக்கு, வடமேற்கு, வடக்கு எனும் நான்கு திசைகளுள் ஏதாவது ஒன்றில் ஆறு முதலானவை இருக்குமாயின் நதிக்கரையில் மயானம் அமைக்க வேண்டும் என்றும் குளம், கிணறு முதலான நீர்நிலைகளும் அந்தத் திக்குகளுள் ஏதாவது ஒன்றில் நிறுவ வேண்டும் என்றும் பசுக்கள் கூடுமிடம் கிராமத்திற்குத் தெற்குப் புறத்தில் இருக்க வேண்டும் என்

றும் பூஞ்சோலைகள் கிராமத்திற்கு வடக்கில் இருக்க வேண்டும் என்றும் ஆகமங்கள் விதிமுறைகளை வகுத்துக் கூறுகின்றன.

மேடையோடு கூடிய நறுவில்லி, ஆல், கடகம், அத்தி, கொன்றை, அரசு, வேம்பு, கல்லாலம் எனப்படும் எண் வகை மரங்களையும் கிராமத்திற்கு வடகிழக்கிலிருந்து தொடங்கி எல்லாத் திக்குகளிலும் வளர்க்கவேண்டும் என்றும் இவ்வாறு வளர்ப்பது கிராமங்களுக்கு நேர இருக்கும் உற்பாதங்களைப் போக்கும் என்றும் கூறப்படுகின்றன.

கிராமமோ நகரமோ இவ்வாறு விதிமுறைப்படி அமைக்கப்பட்டுவிட்ட பிறகு சுபமான வேளையை நிர்ணயித்து கிராம அல்லது நகரப்பிரவேசம் செய்யவேண்டும். பிரவேசம் செய்யும் போது நாத்திகவாதிகள், கோள் சொல்கின்றவர்கள், கொடிய பார்வையுடையவர்கள், கடவுளரையும் குருமார்களையும் நிந்திக்கின்றவர்கள், பிறரிடமிருந்து பலாத்காரமாக உடைமைகளை அகபரித்துக் கொண்டவர்கள்—இவர்களை விலக்கி வைக்க வேண்டும். அந்தணர்க்குப் பலவிதமான தானங்களைக் கொடுக்க வேண்டியது அவசியம் எனினும் மேற்கூறப்பட்ட இழிகுணம் உடையவர்களாக அந்தணர்கள் இருப்பாராயின் அவர்கள் தானம் பெறுவதற்குத் தகுதியுடையவர் அல்லர். அவர்களை விலக்கி விட்டு நற்குணம் உடையவர்க்கே தானங்களை வழங்கவேண்டும். பூர்ணகும்பத்தையும் விளக்குகளையும் முன்னே செல்லவிட்டு, நன்னாளில் நல்ல வேளையில் வேதாகமங்களில் கூறப்பட்டுள்ள வாழ்த்துரை ஒலிக்கப் பிரவேசம் செய்ய வேண்டும்.

## ஆலய அமைப்பு.

கிராம அல்லது நகர நிர்மாணத்தில் முக்கியத்துவம்

பெறுவது ஆலய அமைப்பே. கிராமத்தை இன்ன வடிவத்தில் அமைக்கவேண்டும் என்று திட்டமிடும் பொழுதே இன்ன திசையில் இன்ன ஆலயம் என்று விதிமுறைப்படி நிர்ணயித்துச் செயல்படுவார்கள். ஆலயம் இல்லாத ஊரில் மக்கள் வாழ்வதற்கு விரும்பமாட்டார்கள்.

''திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும்
திருவெண்ணீ றணியாத திருவில் ஊரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிகள் இல்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்
விதானமும் வெண்கொடியும் இல்லா வூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே''

என்பது திருநாவுக்கரசு சுவாமிகளின் திருவாக்கு.

கிராமத்தை அமைப்பதற்குப் பூர்வாங்கமாக என்ன செயல்கள் மேற்கொள்ளப் பெற்றனவோ அவையனைத்தையும் ஆலயம் அமைப்பதற்கு முன்னர்ச் செய்ய வேண்டும். தகுந்த காலமும் சுபசகுனமும் பார்த்து நிலத்தைத் தேர்ந்தெடுத்தல், அதன் தராதரத்தை ஆராய்தல், பிரவேசபலி, நிலத்தை உழுதல் சங்குத்தாபனம், பதவின்யாசம், வாஸ்து சாந்தி ஆகிய இவையனைத்தையும் சாத்திரங்களில் கூறியுள்ளவாறு தகுந்த சிவாச்சாரியார் சிற்பாசாரியார் முதலானோரைக் கொண்டு செய்ய வேண்டும்.

ஆலயம் கட்டுவதற்குரிய நிலத்தை இவ்வாறு புனிதப்படுத்திய பிறகு கால்கோள் விழாவைச் செய்ய வேண்டும்.

கட்டிடம் கட்டுவதற்கு நிலத்தை அகழ்ந்த பிறகு, அகழ்ந்த இடத்தில் செய்யப்படும் செயலுக்குக் 'கருப்ப நியாசம்' என்று பெயர். 'கருப்ப நியாசத்தோடு கூடிய இடம் எல்லாவிதமான செல்வங்களையும் கொடுக்கக் கூடியதாக ஆகும்' என்று காமிகாகமம் கூறுகிறது.

பொன்னாலோ, வெள்ளியாலோ, செம்பாலோ, தகுந்த மரத்தாலோ ஒரு பேழையைச் செய்து அதனைப் பஞ்சகவ்யத்தால் தூய்மை செய்ய வேண்டும். (பஞ்சகவ்யம் என்பது பசுவின் பால், பசுந்தயிர், பசுவின் நெய், பசுஞ் சாணம், பசுவின் மூத்திரம் எனப்படும் ஐந்தையும் குறிக்கும்) பேழையில் அக்ஷர நியாஸம், திரவிய நியாஸம், மூல வருக்க (கிழங்குகள்) நியாஸம், அட்டமங்கல நியாஸம், நவரத்தின நியாஸம், தான்ய நியாஸம், உலோக நியாஸம், மூலிகை நியாஸம், அட்டகந்த நியாஸம் முதலான பலவகை நியாஸங்களையும் செய்ய வேண்டும். (நியாஸம்-வைத்தல்) சமுத்திர மண், ஆற்றுமண், குளத்துமண் தருப்பையின் கீழே இருக்கும் மண், புற்று மண், நண்டு வளை மண் முதலான மண் வகைகளையெல்லாம் பேழையில் வைக்க வேண்டும். பிறகு முறைப்படிப் பேழையைப் பூசித்துப் பலிகொடுத்து அகழ்ந்த இடத்தில் ஆலயத் துவாரத்திற்குத் தென்புறமாகப் புதைக்க வேண்டும். இதுவே கருப்ப நியாஸம் என்பது.

நிறுவப்பட வேண்டிய ஆலயத்துக்கு வடகிழக்கு, வடக்கு, கிழக்கு, தென்கிழக்கு எனும் திசைகளுள் ஏதாவது ஒன்றில் பாலாலயம் அமைத்து வழிபட்ட பிறகே மூலாலயத்திற்கான கட்டிட வேலைகளை மேற்கொள்ளவேண்டும்.

இதற்குப் பிறகு உபபீடம், அதிட்டானம், பாதம், பிரஸ்தரம், கோஷ்டம், பஞ்ஜரம், கர்ணகூடம், வேதிகைகளம், சிகரம், தூபி எனப்படும் அங்கங்களை உடையதாகவும் பிராகாரங்களை உடையதாகவும் ஆலயத்தை அமைக்க வேண்டும்.

மேரு; ரம்மியம், மந்தரம், ருக்ஷமாலி, தியுமணி, சந்திர சேகரம், மாலியவான், பாரியாத்ர, ரத்னசீர்ஷம், தாதுமான், பஞ்சகோசம், புஷ்பஹாஸம், ஸ்ரீகரம், ஸ்வஸ்திகம், மஹாபத்மம், பத்மகூடம் எனப்படும் பதினாறு வகையான கோயில்களின் அமைப்பைக் காமிகாகமம் கூறுகிறது. மேலும் நாகரம், வேஸரம், திராவிடம் எனப்படும் விமான வகைகளைப் பற்றியும், ஸாலாகார சிரோ கோபுரம், மண்டபாகார சிரோ கோபுரம், ஹூபாகார சிரோ கோபுரம், சத்திராகார சிரோ கோபுரம் எனப்படும் கோபுர வகைகளைப் பற்றியும்கூட ஆகமங்கள் விவரித்துக் கூறுகின்றன.

## ஆலயத்தின் உட்பொருள் :

சிற்சில உட்கருத்துகளின் அடிப்படையில்தான் ஆலயங்கள் கட்டப்படுகின்றன என்பதை எல்லா ஆகமங்களும் கூறுகின்றன. ஆலயம் என்பதற்கு எல்லாம் ஒடுங்கும் இடம் என்று பொருள். எல்லோரும் ஒருங்கு கூடிக் கடவுளை வழிபடுவதற்கு இடமாக உள்ளது ஆலயம். ஆ என்பது பசுவையும் லயம் என்பது ஒடுக்கத்தையும் குறிக்கும். பசு என்பது ஆன்மா. ஆன்மா தனது மும்மலங்களிலிருந்து நீங்கி இறைவனிடம் ஒடுங்குவதற்குரிய இடமாக விளங்குவது ஆலயம். இறைவனுக்கு உரிய இருப்பிடமாகத் திகழ்வது எனக் கூறப்படும் விளக்கமும் உண்டு.

உடம்பினை இருப்பிடமாகக் கொண்டு உயிர் விளங்குவது போன்று ஆலயத்தை இருப்பிடமாகக் கொண்டு ஆண்டவன் விளங்குகின்றார். தோல், குருதி, இறைச்சி, எலும்பு, மஜ்ஜை, மேதஸ், சுக்கிலம் எனப்படும் எழுவகைத் தாதுக்களால் உடல் அமைக்கப்பட்டிருப்பது போன்று ஆலயமும் செங்கல், வெண்கல், கருங்கல், நீறு, மணல், நீர், காரம் எனப்படும் ஏழு வகைப் பொருள்களாலும் கட்டப்படுகிறது.

ஆலயத்தை ஒரு மனித வடிவமாகக் கொண்டால் கருப்பக் கிரகம் என்பது சிரசு; அர்த்தமண்டபம் என்பது கழுத்து; மஹாமண்டபம் என்பது மார்பு; யாகசாலை என்பது நாபி; கோபுரம் என்பது பாதம்.

மற்றொரு வகையில் ஆலயம் என்பதை உடலாகக் கொண்டால் கோபுரம் என்பது வாய்; நந்தி என்பது நாக்கு; கொடி மரம் என்பது உள் நாக்கு; தீபங்கள் என்பன பஞ்ச இந்திரியங்கள்; கருப்பக்கிரகம் என்பது இதயம்; சிவலிங்கம், உயிர்.

கருப்பக் கிரகத்தை அடுத்துள்ள பிராகாரம் அந்தர் மண்டலம் என்றும் அதையடுத்துள்ள பிராகாரம் அந்தர் ஹாரம் என்றும் அதற்கு அடுத்திருப்பது மத்திய ஹாரம் என்றும் அதனை அடுத்து இருப்பது மாயாதா என்றும் அதற்கும் வெளியே இருப்பது மஹாமர்யாதா என்றும் கூறப்பெறும். மஹாமர்யாதா முதற்கொண்டு அந்தர்மண்டலம் வரை ஐந்து பிராகாரங்கள் எனக்கணக்கிடுவதும் உண்டு. அந்தர் மண்டலத்தை நீக்கி மஹாமர்யாதா முதல் கருப்பக் கிரகம் வரை ஐந்து பிராகாரங்கள் எனக் கூறுவதும் உண்டு.

காரண சரீரம், கஞ்சுக சரீரம், குணசரீரம், சூக்கும சரீரம் தூலசரீரம் என ஆன்மாவிற்கு ஐந்து வகையான உடல்கள் இருக்கின்றன. காரண சரீரம் ஆனந்தமய கோசம் என்றும், கஞ்சுக சரீரம் விஞ்ஞானமய கோசம் என்றும், குணசரீரம் மனோமய கோசம் என்றும், சூக்கும சரீரம் பிராணமயகோசம் என்றும் தூலசரீரம் அன்னமய கோசம் என்றும் கூறப்பெறும். மஹாமர்யாதா முதலான ஐந்து பிராகாரங்களும் அன்னமய கோசம் முதலான ஐந்து கோசங்களையும் குறிக்கும். ஐந்தாவது பிராகாரத்தை நோக்க நான்காவது பிராகாரம் நுண்மையானது. அவ்வாறே அன்னமய கோசத்தை நோக்கப் பிராண

மயகோசம் நுண்மையானது. இவ்வாறே மற்றைய பிராகாரங்களையும் கோசங்களையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும். காரணசரீரமாகிய ஆனந்தமய கோசம் மிகமிக நுண்மையானது. கருப்பக்கிரக ஆவரணமும் அவ்வாறே மிக நுண்மையானது சரீர தத்துவமே ஆலய தத்துவம் என்பது இதனால் புலனாகின்றது.

மூன்று பிராகாரங்கள் மட்டும் உள்ள ஆலயங்களில் அவை தூல சரீரம், சூக்கும சரீரம், காரண சரீரம் எனும் மூன்றையும் குறிக்கும். இரண்டு பிராகாரங்கள் இருக்குமாயின் அவை தூலம், சூக்குமம் எனும் இரண்டு சரீரங்களையும் குறிக்கும். ஒரே பிராகாரம் இருப்பின் அவ்வொன்றில் ஐந்து சரீரங்களும் அடங்கும்..

ஓர் ஆலயத்தில் ஐந்து வகையான லிங்கங்கள் உண்டு எனப் பாரமேசுவரம் எனும் ஆகமம் கூறுகிறது. விமானம் தூல லிங்கம்; கருப்பக்கிரகம் சூக்கும லிங்கம்; பலிபீடம் அதிசூக்கும லிங்கம்; துவஜஸ்தம்பம் காரண லிங்கம்; மூல லிங்கம் மஹா காரண லிங்கம்.

ஆலயத்தில் உள்ள சிவலிங்கம் பதியையும் நந்தி பசுவையும் பலிபீடம் பாசத்தையும் குறிக்கும். பதி பசு பாச விளக்கமே சிவாலயம். துவஜஸ்தம்பத்தைப் பொறுத்த மட்டில் கொடிமரம் என்பது பதியையும் கொடிக்கயிறு திருவருட் சக்தியையும், கொடிச் சீலையில் வரையப்பட்டுள்ள ரிஷபம் பசுவையும் தருப்பைக் கயிறு பாசத்தையும் குறிக்கும் என்று காரணம் எனும் ஆகமம் கூறுகிறது.

ஆலயதரிசனத்தால் ஆன்மாக்கள் பக்குவம் அடையும் முறையினையும் சிவாகமங்கள் தெளிவாக விளக்குகின்றன. ஆலயத்தின் தீர்த்தக் குளத்தில் மூழ்குதல் சத்தி நிபாதம் என்பதைக் குறிக்கும். அதாவது திருவருள் வீழ்ச்சியைப் பெற்று மேலும் பக்குவமடைதலை அது குறிக்கும். பிராகாரங்களை வலம் வருதல், தத்துவங்

களைக் கடந்து சிவத்தை அடைதல் என்பதை உணர்த்தும்; பலிபீடம், நந்தி, கொடிமரம் ஆகிய இவற்றின் தரிசனத்தால் ஆன்மா பாசம், பசு, பதி எனப்படும் முப்பொருள் உணர்ச்சியுற்று, பலிபீடத்தருகே விழுந்து வணங்குவதால் வினைநாசமும் பாசநீக்கமும் அடையும். ஆலயத்தில் உள்ள மண்டபங்களைக் கடத்தலால் மூலாதாரம் முதலான ஆறு ஆதாரங்களையும் கடந்து அதிகார நந்தியின் இடத்தை அடைவதால் அதிகார முக்தனாகிப் பிறகு சிவலிங்க தரிசனத்தால் அபரமுக்தன் எனும் நிலையை ஆன்மா அடைகிறது.

அதிகாரநந்தி என இங்கே குறிக்கப்பட்டதால் கோயிலில் உள்ள ஐந்து வகையான நந்திகளைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். மூலலிங்கத்தின் அருகில் உள்ள நந்தி கைலாச நந்தி. இதற்கு அடுத்து, பிராகாரத்தில் உள்ள நந்தி மஹாவிஷ்ணு சிவபெருமானைத் தாங்க ரிஷப வடிவெடுத்ததைக் குறிப்பது; மூன்றாவது நந்தி உள்ளே விடுவதற்கும் தடுப்பதற்கும் அதிகாரம் பெற்றுள்ள அதிகார நந்தி; நான்காவது நந்தி சாமான்ய நந்தி; ஐந்தாவது நந்தி விசுவரூபம் எடுத்துப் போருக்கு முன்னே செல்லும் மஹாநந்தி. இவ்வாறு சிவாலயத்தில் உள்ள நந்திகளை அறிந்து கொள்ள வேண்டும்.

## சிவலிங்கம் :

சிவலிங்கம் என்பதன் பொருளைச் சைவருட் சிலரும் சைவரல்லாதார் பலரும் வெளிநாட்டு அறிஞர்களும் விரசமாகவும் தவறாகவும் எழுதிப் பொய்க்கருத்துகளை இன்று பரப்பிக் கொண்டு வருவதால் சிவலிங்கம் என்பதன் உட்பொருளை ஆகம அடிப்படையில் விளக்க வேண்டியது அவசியமாகிறது.

லிங்கம் என்பதற்குரிய பொருளைக் காரணம், கிரணம், சுப்பிரபேதம் வாதுளம் முதலான ஆகமங்கள் அழகாகவும் தெளிவாகவும் கூறுகின்றன. 'எந்த இடத்தில், பிரளய காலத்தில் சேதன அசேதனப் பிரபஞ்சங்கள்

அனைத்தும் லயம் அடைந்து பின்னர்ப் படைப்புக் காலத்தில் எதிலிருந்து மீண்டும் உற்பத்தியாகின்றனவோ அதுவே லிங்கம் என்பது. லிம் என்பது லயத்தையும் (ஒடுங்குவதையும்) கம் என்பது வெளிவருதலையும் குறிக்கும்.'' லிங்கம் என்பது சித்திரித்தல் எனப் பொருள் படும் என்றும் சிவபெருமான் படைப்பு முதலான ஐந்தொழில்களாலும் பிரபஞ்சத்தைச் சித்திரிக்கின்றதால் சிவலிங்கம் எனப் பெயர் ஏற்பட்டது என்றும் வருண பத்ததி எனும் நூல் விளக்கம் கூறுகிறது. 'தேவர்கள் செல்வத்தை அடையும் பொருட்டு உமது விசித்திர ரூபமாகிய மஹாலிங்க மூர்த்தியை அபிஷேகம் செய்து வழிபட்டார்கள்'' என்று ருக் வேதத்திலும் (5:3:3) சிவலிங்கத்தைப் பற்றிய குறிப்பு வந்துள்ளது.

சிவலிங்கத்தில் பீடமாக உள்ள பகுதி விந்து எனும் தத்துவத்தையும் லிங்கமாக உள்ள பகுதி நாதம் எனும் தத்துவத்தையும் குறிக்கும் என்றும் நாத விந்து வடிவான இவ்விரண்டையும் ஒன்றாகச் சேர்த்தலே பிரதிஷ்டை என்றும் யோகஜம் எனும் ஆகமம் கூறுகிறது.

சிவபெருமானுக்கு மூன்று வகையான திருமேனிகள் உண்டு. 1. அருவத் திருமேனி. இது வடிவில்லாததால் குறிப்பிட்ட வடிவத்தால் சுட்டிக் காட்டமுடியாது. 2. உருவத் திருமேனி இது வடிவுகொண்டு விளங்குவது, தக்ஷிணா மூர்த்தி வடிவம், ஸோமாஸ்கந்த வடிவம் முதலிய வடிவங்களெல்லாம் உருவத் திருமேனியில் அடங்கும். 3. அருவுருவத் திருமேனி, இதுவே சதாசிவ வடிவம் என்பது. ஆலயத்தில் உள்ள சிவலிங்கம் சிவபெருமானின் அருவுருவத் திருமேனியையே குறிக்கும். ஒரு வடிவுகொண்டு விளங்குவதால் உருவம் என்றும் இன்ன வடிவம் என்று குறிப்பிட்டுக் கூற முடியாததால் அருவம் என்றும் லிங்கவடிவத்தை உணர்ந்துகொள்ள வேண்டும். அருவத் திருமேனி முதலான மூன்றும் முறையே நிஷ்

களம், சகளம், சகளநிஷ்களம் என ஆகமங்களில் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றையே தத்துவம், மூர்த்தி, பிரபாவம் என வேறுவிதமாகச் சில ஆகமங்கள் குறிப்பிடுகின்றன.

இனி, சிவலிங்கத்தின் வகைகளைக் காண்போம்.

அவ்யக்த லிங்கம், வியக்த லிங்கம், வியக்தா வியக்த லிங்கம் எனச் சிவலிங்கம் மூன்று வகை. இவற்றுள் அவ்யக்த லிங்கம் என்பது நிட்கள லிங்கம். தத்துவங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டு விளங்கும் சிவபெருமானே அவ்யக்த லிங்க வடிவில் உள்ளார். இரண்டாவது, வியக்த லிங்கம் என்பது. மகேசுவரரிடம் இருந்து தோன்றிய இருபத்தைந்து வடிவங்களும் வியக்தலிங்கம் எனப்படும். வியக்தம்—கை, முகம் முதலான அங்கங்களெல்லாம் வெளிப்பட்டு விளங்குதல். அவ்யக்தம்—அவை வெளிப்படாதிருத்தல். வியக்தா வியக்த லிங்கம் என்பது அருவுருவத் திருமேனியான சிவலிங்கம்.

மகேசுவர மூர்த்தங்கள் இருபத்தைந்து வருமாறு :

1. லிங்கோத்பவம், 2. சுகாசனம், 3. கல்யாண சுந்தரம், 4. உமாஸகம், 5. அர்த்தநாரீசுவரம், 6. ஸோமாஸ்கந்தம், 7. சக்கிரப்பிரதானம், 8. திரிமூர்த்தி, 9. சங்கரநாராயணம், 10. தக்ஷிணாமூர்த்தி, 11. பிக்ஷாடனம், 12. கங்காளம், 13. கால சங்காரம், 14. காம சங்காரம், 15. ஜலந்தர சங்காரம், 16. திரிபுர சங்காரம், 17. சரபம், 18. நீலகண்டம், 19. திரிபாத மூர்த்தி, 20. ஏகபாத மூர்த்தி, 21. பைரவம், 22. இடபாரூடர், 23. சந்திரசேகரம், 24. நிருத்தம், 25. கங்காதரம்.

இவற்றுள் சிலவற்றை நீக்கிக் கஜாரி, வீரபத்திரம், கிராதம், சண்டேசானுக்கிரகம், விக்கினப் பிரசாதம் என்பனவற்றைச் சேர்த்து வாதுளாகமம் மகேசுர மூர்த்தங்களைப் பற்றிக் கூறுகின்றது.

வியக்தாவியக்தமான சிவலிங்கம் சுயம்பு, தைவிகம் திவ்வியம், ஆருடம், மானுடம், ராக்ஷஸம், பாணம்எனப் பல வகைப்படும்.

சுயம்புலிங்கம், ஒருவரால் செய்யப்படாது தானாகவே தோன்றியது.

பூமியைத் தாங்கிக் கொண்டிருக்கும் ஆதிசேடனின் அளவற்ற சிரசுகள் ஒரு முறை அசைந்ததால், காலாக்கினி ருத்திரருடைய கோபாக்கினியிலிருந்து மூன்று தீப்பொறிகள் உண்டாயின. அந்தத் தீப்பொறிகளே சிவலிங்கங்களாக மாறின. இவை நிர்மூலம், சமூலம், பார்த்திவம் என மூன்று வகைப்படும். நிர்மூல சுயம்பு லிங்கம் நீருக்குள் இருப்பது; சமூல சுயம்பு லிங்கம் மலையில் இருப்பது. பார்த்திவ சுயம்பு லிங்கம் மண்ணுக்குள் இருப்பது. சுயம்பு லிங்கத்தைப் பற்றிக் காமிகாகமம் இவ்வாறு கூறுகிறது.

பாரமேசுவரம் எனும் ஆகமத்தில் சுயம்பு லிங்கத்தைப் பற்றி வேறுவிதமாகக் கூறப்படுகின்றது. கூத்தப்பெருமான் தமது ஜடாபாரம் அவிழ்ந்து அலையப்பெருங் கூத்து நிகழ்த்தியபோது ஜடாமகுடத்தில் இருந்த திவ்விய கங்கையின் நீர்த்துளிகள் உலகெங்கும் சிதறின. அவ்வாறு சிதறிய நீர்த்துளிகள் இறுகி லிங்க வடிவம் பெற்றன. இவையே சுயம்பு லிங்கங்களாகும். உமாபதி சிவாசாரியார் அவர்களும் தமது 'குஞ்சிதாங்கிரிஸ்தவம்' எனும்தோத்திர நூலில் இக்கருத்தைக் குறிப்பிடுகிறார். காரணம், வாதுளம், சூக்குமம், சுப்பிரபேதம் எனும் நான்கு ஆகமங்களும் சுயம்பு லிங்கத்துக்கு உரிய ஆகமங்களாகும்.

தைவிக லிங்கம் என்பது தேவர்களால் பிரதிட்டை செய்யப்பட்ட சிவலிங்கம். காமிகம், விஜயம், சுவாயம்புவம், அனலம் எனப்படும் நான்கு ஆகமங்கள் தைவிகலிங்கத்துக்கு உரியனவாகும்.

திவ்விய லிங்கம் என்பது தேவ இருடிகளால் தாபிக்கப்பட்ட சிவலிங்கம், சிந்தியம், ஸஹஸ்ரம், தீப்தம், அஜிதம் எனும் நான்கும் இந்த லிங்கத்துக்கு உரியவை.

மானுட இருடிகளால் பிரதிட்டை செய்யப்பட்ட லிங்கம் ஆர்ஷலிங்கம் எனப்படும். யோகஜம், மகுடம், நிசுவாசம், ரௌரவம் எனும் நான்கு ஆகமங்களும் இதற்கு உரியவை.

மானுடரால் (அரசரால்) பிரதிட்ட செய்யப்பட்ட லிங்கம் மானுஷலிங்கம். வீரம், விமலம், சந்திரஞானம், பிம்பம் எனும் நான்கு ஆகமங்களும் இதற்கு உரியவை.

ராக்ஷசர்களால் பிரதிட்டை செய்யப்பட்ட லிங்கம் ராக்ஷச லிங்கம். புரோத்கீதம், லலிதம், ஸித்தம் ஸந்தானம் எனப்படும் நான்கு ஆகமங்களும் இதற்கு உரியவை.

பாணாசுரனால் பூசை செய்யப்பெற்று ஸ்ரீசைலம், நீலகண்டம், நேபாளம் முதலிய பல இடங்களிலும் காணப்படும் லிங்கம் பாணலிங்கம் ஆகும். பாரமேசுவரம் சர்வோக்தம், அம்சுமான், கிரணம் எனப்படும் ஆகமங்கள் பாணலிங்கத்துக்கு உரியவை.

ரத்தினலிங்கம், உலோக லிங்கம், க்ஷணிகலிங்கம் எனப்படும் சிவலிங்க வகைகளும் உண்டு. இவற்றை இடம் விட்டு இடம் மாற்றக் கூடுமாதலால் சலலிங்கம் (சலம்—அசைவது) எனவும் கூறுவர். சுயம்பு, தைவிகம் முதலானவை அசல லிங்கம் எனப்படும் (அசலம்—அசையாதது). பாணலிங்கம் சலலிங்கமே. இவற்றைத் தவிர ஏகாசிரலிங்கம், துவியசிரலிங்கம் என வேறு பல வகைகளும் கிரணாகமத்தில் கூறப்படுகின்றன.
(அசிரம்—கோணம்)

வழிபாட்டின் பயனாகக் கிடைக்கக் கூடிய பேறுகள் பலவாக இருத்தலால் சிவலிங்க பேதங்களும் மிகப்பலவாகக் காணப்படுகின்றன. இன்ன விதமான சிவலிங்கத்தை வழிபடுவதால் இன்ன விதமான பயன் என்பது

போன்ற விவரங்களையெல்லாம் ஆகமங்கள் விரிவாக எடுத்துக் கூறுகின்றன.

முகலிங்கம் என்று ஒரு வகை உண்டு. சிவலிங்கத்தின் லிங்கப்பகுதியில் ஒன்று முதல் ஐந்து வரை முகங்கள் அமைக்கப்பட்டிருப்பது முகலிங்கம் எனப்படும். லிங்கத்தின் உச்சிப் பகுதி எந்த வடிவத்தில் உள்ளதோ அந்த வடிவத்தை யொட்டி ஆட்யம், அனாட்யம், ஸுரேட்யம், ஸர்வஸமம் எனப்படும் சிவலிங்க பேதங்கள் கூறப்படுகின்றன. ஸர்வஸமம் எனப்படும் சிவலிங்கத்தில் மட்டுமே முகலிங்கங்களை அமைக்கலாம். ஏனைய மூன்றிலும் முகலிங்கம் செய்யக் கூடாது.

## தெய்வச் சிலைகள் :

ஆலயத்தில் உயிராகத் திகழும் சிவலிங்கத்தின் அமைப்பைப் பற்றி இதுவரை கண்டோம். சிவலிங்கம் மட்டுமன்றி ஏனைய தெய்வப்படிமங்களும் பிராகார கோஷ்டங்களில் பிரதிட்டை செய்யப் பெறும். முன்னர்க் கூறப்பட்ட மகேசுர மூர்த்தங்கள் இருபத்தைந்து, கணபதி, சண்முகர், துர்க்கை, சண்டேசர், நந்தி, பலிபீடம், சூலம், பாசுபதம், ஜ்யேஷ்டாதேவி, ஜுரதேவர், துவார பாலர் முதலிய பல தெய்வப் படிமங்களையும் ஆலயத்தில் உரிய இடத்தில் பிரதிட்டை செய்ய வேண்டிய முறையைப் பற்றி ஆகமங்கள் கூறுகின்றன. சிற்ப சாத்திரங்களில், இந்தப் படிமங்களை எவ்வாறு உருவாக்குவது என்பதைப் பற்றிய விவரங்கள் மட்டுமே காணப்பெறும். ஆனால், சிவாகமங்களில் மேற்கூறப்பட்ட தெய்வப் படிமங்களை அமைப்பதற்கு வேண்டிய வழிமுறைகள் மட்டுமன்றி அவற்றைப் பிரதிட்டை செய்ய வேண்டிய கிரியைகளைக் குறித்தும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

ஒரு தெய்வ வடிவத்தைப் பிரதிட்டை செய்யும் போது கீழ்க்கண்ட பதினெண் செயல்களும் வரிசையாக நிகழ்த்தப் பெறும்: 1. மிருத்சங்கிரகணம், 2. அங்குரார்ப்

பணம், 3. ரத்தின நியாஸம், 4. நயனோன்மீலனம், 5. பிரதிமா சுத்தி, 6. கிராமப் பிரதக்ஷிணம், 7. ஜலாதிவாஸம், 8. ரக்ஷாபந்தனம், 9. வாஸ்து பூஜை, 10. பஞ்சகவ்யம், 11. மண்டப ஸம்ஸ்காரம், 12. சயனம், 13. ஹோமம், 14. ஸ்தாபனம் 15. அஷ்டபந்தனம், 16. மந்திரம், 17. நாமகரணம், 18. விவாகம்.

**குடமுழுக்கு :**

முறைப்படி உருவாக்கப்பட்ட ஆலயத்திற்குக் கும்பாபிஷேகம் எனப்படும் குடமுழுக்கு விழா நிகழ்த்தினால் தான் இறைவனின் சான்னித்தியம் (திருத்தோற்றம்) என்பது முழுமையாக இருக்கும். நான்கு விதமான கும்பாபிஷேகங்களைப் பற்றி ஆகமங்கள் கூறுகின்றன.

1. அனாவர்த்தனம்:— கோயிலே இல்லாமல் இருந்து புதிதாகக் கோயில் கட்டிக் குடமுழுக்கு நிகழ்த்தினால் அது அனாவர்த்தனம் எனப்படும்.

2. ஆவர்த்தனம் :— வெகுகாலத்திற்கு முன்னர்க் கோயில் கட்டப்பட்டுப் பூஜை இல்லாமலும் இடிந்தும் சீர்குலைந்து இருந்தால் அதனைச் சீர்திருத்தித் தூய்மை செய்து கும்பாபிஷேகம் செய்வது ஆவர்த்தனம் எனப்படும்.

3. புனராவர்த்தனம் :— கருப்பக் கிரகம், விமானம், பிராகாரம், கோபுரம், பலிபீடம், கொடிமரம், தெய்வப் படிமங்கள் ஆகிய இவற்றில் பின்னம் ஏற்பட்டிருந்தாலும், முன்னர்ச் சார்த்தப்பட்ட அஷ்டபந்தனம் சிதைந்திருந்தாலும், விமானத்தின் வண்ணம் அழிந்திருந்தாலும் பாலாலயம் செய்து எல்லாவற்றையும் சரிப்படுத்திக் கும்பாபிஷேகம் செய்வது புனராவர்த்தனம் எனப்படும்.

4. அந்தரிதம் :—கருப்பக்கிரகம் முதல் மர்யாதை எனப்படும் பிராகாரம் வரையில் உள்ள இடத்தில் எதிர்பாராத விதமாக யாருக்கேனும் மரணம் ஏற்பட்டாலும்,

தீட்டு முதலான தோஷம் உடையவர் கொடிமரம் தாண்டிப் பிரவேசித்தாலும், நாய், கழுதை, பன்றி முதலானவை உள்ளே வந்தாலும், தீபங்களில் விழுந்து விட்டில் பூச்சி, ஈ, எறும்பு முதலானவை மரணமடைந்தாலும் பிராயச்சித்தம் செய்து சாந்தி செய்வது அந்தரீதம் எனப்படும்.

ஆலயத்தில் முறைப்படி பூஜை நடைபெறாது போனால் சிவபெருமான் சிவலிங்கத்தை விட்டு விமானத்திற்கு வந்து மூன்று வருடங்கள் வரையிலும் யாவருக்கும் அருள்புரிந்து கொண்டிருப்பார்; மூன்று வருடங்களுக்கு மேற்பட்டால் ஆலயத்தின் தல விருஷத்தில் ஆவிர்பவித்து அனுக்கிரகம் செய்து கொண்டிருப்பார்; பன்னிரண்டு வருடங்களுக்கு மேற்பட்டால் தலவிருக்ஷத்தினின்றும் நீங்கித் தமது எண்வகை வடிவங்களுள் ஒன்றான சூரிய மண்டலத்தில் ஆவிர்பவித்து விடுவார். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கட்டாயமாகக் குட முழுக்கு விழாவை நிகழ்த்த வேண்டும்.

## ஆலய நிகழ்ச்சிகள்—நித்திய வழிபாடு

சிவாலயத்தில் நித்தியவழிபாடு என்பது உஷத்கால பூஜையோடு தொடங்குகிறது. ஆன்மார்த்த சிவபூஜை செய்து தனது ரூபத்தைச் சிவமாக்கிக் கொண்ட சிவாசாரியார் ஆலயம் சென்று க்ஷேத்திரபாலர் என்ற தெய்வம் இருக்குமிடம் சென்று "பூமியில் உள்ள எல்லா உயிர்க்கூட்டங்களையும் காப்பாற்றுவதற்கான சிவ பூஜையைச் செய்வதற்காக முத்திரா தண்டத்தைத் தந்தருள்வீராக" என்று வேண்டிக் கொண்டு உத்திரவு பெற்று உஷத்கால பூஜையைச் செய்ய வேண்டும். உஷத்கால பூஜையின் முடிவில் சூர்யோதயம் ஆகக் கூடியதாக இருக்க வேண்டும். அவ்வளவு விடியற்காலையில் இதனைச் செய்ய வேண்டும். உஷத்கால பூஜை ஆலயத்தில் நடைபெறும் அறுகால பூஜையில் சேராது. இது

அறுகால பூஜைக்கு அப்பாற்பட்டது. சூரியன் உதிப்பதற்கு ஒன்றரை மணி நேரம் முன்பாக இதனைச் செய்ய வேண்டும்.

சூர்யோதயம் முதற்கொண்டு காலை ஒன்பது மணி வரை நடைபெறுவது காலசந்தி பூஜை; இதற்குப் பிறகு பத்தரை மணி வரை உபசந்தி பூஜை; பன்னிரண்டு மணி வரை உச்சிக் கால பூஜை.

பன்னிரண்டு மணிமுதல் மாலை நான்கு மணி வரை திருக்கோயில் சார்த்தப்பட்டிருக்க வேண்டும். திறந்திருத்தல் கூடாது.

மாலை நான்கரை மணி முதல் ஆறுமணி வரை பிரதோஷ கால பூஜை. (தினந்தோறும் நடைபெறும் பிரதோஷ பூஜை வேறு; சதுர்தசியில் நடைபெறும் மகாப் பிரதோஷ பூஜை வேறு). ஆறுமணி முதல் ஏழரை மணி வரை ஸாயங்கால பூஜை; ஏழரை மணி முதல் ஒன்பது மணி வரை அர்த்தஜாம பூஜை. காலசந்தி முதல் அர்த்த யாமம் வரை அறுகால பூஜையாகும்.

ஆலயத்தில் சிவபூஜை செய்வதற்குரியோர் ஆதி சைவ மரபினரே என்று எல்லா ஆகமங்களும் ஐயத்துக்கு இடமின்றிக் கூறுகின்றன. ஆதி சைவ மரபில் தோன்றியிருந்தாலும் வேத ஆகமப் பயிற்சி இல்லாமலோ, ஒழுக்க மேம்பாடு இல்லாமலோ, புகையிலை போன்ற பொருள்களைப் பயன்படுத்துபவராகவோ இருந்தால் அவர்கள் பூஜை செய்வதற்குத் தகுதியுடையவர் அல்லர். சதாசிவப் பெருமானின் ஐந்து திருமுகங்களாலும் தீக்ஷக்கப்பட்ட கௌசிகர் முதலிய முனிவர்களின் மரபில் தோன்றியவர்களாவும், சமய பரிபாலராகவும், வேத சிவாகம புராணங்களை நன்கு பயின்றவராகவும், டம்பம் அசூயை முதலான குற்றங்களிலிருந்து நீங்கினவராகவும் உள்ளவரே சிவாலய பூஜை செய்வதற்குத் தகுதிபடைத்தோராவர். சிவாலயத்தில் ஆதி சைவ மரபின

ரால் செய்யப்படும் பூஜை, அனைத்துயிர்க்கும் தீக்ஷை செய்தல் என்னும் உட்பொருளை உடையதாகும்.

ஆலயத்தில் நாள்தோறும் நடைபெறும் பூஜையானது சாங்கம் உபாங்கம் பிரத்யங்கம் என மூவகைப்படும். அபிஷேகம், பாத்யம், (திருவடி நீர்), ஆசமனீயம் (திருவாய் நீர்), அர்க்கியம் (திருமுடி நீர்), ஆடை, ஆபரணம், சந்தனம், மலர் எனப்படும் எட்டும் சாங்கம், தூபம், தீபம், திருநீறு அணிவித்தல், குடை, கண்ணாடி சாமரம், விசிறி, வியஜனம் (ஒரு வகையான விசிறி) நாட்டியம், கீத வாத்தியம் எனப்படும் பத்தும் உபாங்கம்; நிவேதனம் செய்தல், பலியிடுதல், ஹோமம் செய்தல், நித்திய உத்ஸவம், சுளுகோதக தானம், (சுருகோதகம்-உள்ளங்கை) வாழ்த்துரை வழங்கல் எனப்படும் ஆறும் பிரத்தியங்கம். "சாங்கோ பாங்கப் பிரத்தியங்க பூஜை" என்பது மேற்கூறப்பட்ட இருபத்து நான்கு செயல்களையும் செய்தலே.

அபிஷேக திரவியங்கள் இவை இவை என்றும் அவற்றை முன்ன வரிசைப்படி இறைவனுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும் என்றும் ஆகமங்கள் விதிகள் வகுத்துக் கூறுகின்றன. கீழ்க்கண்ட வரிசையில் இருபத்தைந்து அபிஷேகத் திரவியங்களைப் பயன்படுத்த வேண்டும்.

1. சந்தனாதித் தைலம், (வாசனை பொருந்திய எள்ளெண்ணெய்), 2. மாப்பொடி, 3. நெல்லி முள்ளிப் பொடி 4. மஞ்சள் பொடி, 5. ஜல திரவியம், 6. பஞ்சகவ்யம், 7. பஞ்சாமிர்தம், 8. பசுவின் நெய், 9. பசுவின் பால், 10. பசுவின் தயிர், 11. தேன், 12. கரும்புச் சாறு, 13. சர்க்கரை, 14. பழவகைகள், 15. பழங்களின் சாறு, 16. இளநீர், 17. அன்னம், 18. சந்தனம், 19. ஸ்னபன கும்பம், 20. பத்திரோதகம், (வில்வபத்திரம் இட்ட நீர்) 21. தாராபிஷேகம் (ஸஹஸ்ரதாரை) 22. சிருங்கோதகம் (பசுவின் கொம்பிலே நீரிட்டு அபிஷேகித்தல்), 23. ரத்தினோதகம் (பொன்னாபரணம் இட்ட நீர்,

24. குசோதகம் (தர்ப்பை இட்ட நீர்) 25. விசேஷ அர்க்யத்தால் அபிஷேகம்.

இவற்றுள் சிலவற்றை நீக்கி அபிஷேக திரவியங்கள் பதினாறு என்றும் பன்னிரண்டு என்றும் சில ஆகமங்கள் கூறுகின்றன.

இனி, இவ்வாறு அபிஷேகம் செய்வதால் ஏற்படும் பயன்களைக் காண்போம். தைலாபிஷேகம் சுகத்தைக் கொடுக்கும்; மாப்பொடி கடன் நிவாரணம் அளிக்கும் நெல்லிமுள்ளி வியாதிகளைப் போக்கும்; மஞ்சள் பொடி வசீகரணம் உண்டாக்கும்; ஜலதிரவியம் நற் பேறுகளைக் கொடுக்கும்; பஞ்சகவ்யம் தூய்மையை உண்டாக்கும்; பஞ்சாமிர்தம் வெற்றியைக் கொடுக் கும்; பால் ஆயுளை வளர்க்கும்; தயிர் மக்கட்பேற் றினைக் கொடுக்கும்; தேன் இன்பம் அளிக்கும்; கரும்புச்சாறு பிணிகளை நீக்கும்; சர்க்கரை பகை வரை அழிக்கும்; பழவகைகள் பயிர்பச்சைகளைச் செழிக்கச் செய்யும்; அன்னம் சாம்ராஜ்யம் அளிக்கும்; இளநீர் போகத்தை அளிக்கும்; சந்தனம் செல் வத்தைக் கொடுக்கும். உத்ரோதகம் முதலியன அச்சத் தைப் போக்கும்.

இறை வழிபாட்டிற்காகச் சிறந்த நந்தவனங்களில் பறித்த மலர்கள் உத்தமம்; வனத்தில் கிடைத்த மலர்கள் நடுத்தரம்; பூக்களை விலைக்கு வாங்கிப் பூசை செய்தல் சிறப்பில்லாதது. பூக்களை யாசகமாகப் பெற்று பூசித்தால் பயனே கிடைக்காது.

பூக்களின் சிறப்பு அம்சங்களை அறிந்து அதன்படி பூசை செய்தால் நினைத்த காரியம் விரைவில் நிறை வேறும். ஒவ்வொரு பூவுக்கும் ஒவ்வோர் அதி தெய்வம் உண்டு.

| பூவின் பெயர் | அதிதெய்வம் |
|---|---|
| நந்தியாவர்த்தம் | நந்தி |
| எருக்கம் பூ | சூரியன் |
| சண்பகம், கடம்பம், குரா | முருகப்பெருமான் |
| மகிழம் பூ | கலைமகள் |
| தாமரைப் பூ | சிவபெருமான் |
| அறுகு | விநாயகர் |
| அலரிப் பூ | பிரமன் |
| கொக்கிரகம்பூ | திருமால் |
| பில்வத் தளிர் | திருமகள் |
| மல்லிகை, முல்லை. நீலோற்பலம் | உமையம்பிகை |

அந்தந்தத் தெய்வத்துக்குரிய பூக்களைக் கொண்டு வழிபாடு செய்தால் விரைவில் பயன் கிடைக்கும்.

பூக்களில் மூன்று வகை உண்டு.

1. சாத்துவிக மலர்கள் : வெள்ளெருக்கு, மந்தாரை, புன்னை, நந்தியாவர்த்தம், மல்லிகை முல்லை முதலான வெண்ணிறப் பூக்கள் சாத்துவிகப் பூக்கள். உயர்ந்த ஞானத்தையும் கல்வியையும் விரும்புவோர் இப் பூக்களால் இறைவனை அர்ச்சிக்க வேண்டும்.

2. ராசத மலர்கள் : பாதிரி, செந்தாமரை, செங்கழுநீர், செவ்வலரி, செங்கடம்பு முதலிய செந்நிறப் பூக்களே ராசதப் பூக்கள். வீரபராக்கிரமத்தையும் செல்வத்தையும் விரும்புவோர் இவ்விதமான பூக்களைப் பயன்படுத்த வேண்டும்.

3. ராசத சாத்துவிக மலர்கள் : கொன்றை, சண்பகம், செருந்தி, பொன்னூமத்தை முதலான பொன்னிறமுள்ள பூக்கள் இவ்வகையைச் சாரும். போகத்திற்கும், நினைத்த காரியத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கும் இவ்விதமான பூக்களைப் பயன்படுத்த வேண்டும்.

வில்வம், துளசி, மருக்கொழுந்து, மாசிப்பச்சை, திருநீற்றுப் பச்சை முதலியவை ராசத தாமச பத்தி ரங்கள் (தளிர்கள்) எனப்படும். எல்லாப் பயன்களுக் காகவும் இவற்றை உபயோகிக்கலாம்.

சிவபெருமானுக்கு மிகவும் உகந்த தளிர்கள் வில்வ மும் துளசியுமாகும். திங்கட்கிழமை தவிர மற்றைய நாள்களில் பறித்த வில்வத் தளிர்களுக்கு நிர்மால்யக் குற்றம் கிடையாது. அதாவது சார்த்திய வில்வத் தளிரையே மீண்டும் ஓராண்டுக் காலம் வரை சார்த்த லாம். மற்றப் பூக்களையோ தளிரையோ அவ்வாறு செய்யக்கூடாது.

வாசனை இல்லாத அல்லது கேசரம் இல்லாத பூக்கள், மயிர், புழு முதலானவற்றோடு கூடிய பூக்கள், அதிக வாசனை யுடையவை, வாடியவை, முகர்ந்து பார்க்கப்பட்டவை, கையினால் நிமிர்த்தி மலர்த்தப் பட்டவை, அசுத்தமான பாத்திரங்களில் கொண்டு வரப்பட்டவை, பூமியில் விழுந்தவை, முன்னாள் பறிக்கப் பட்டவை இத்தகைய பூக்களைப் பூசைக்குப் பயன் படுத்தக் கூடாது. சண்பக அரும்பு தவிர மற்ற பூக்களின் அரும்புகளையும் பூஜையின் பொருட்டுக் கொள்ளக் கூடாது.

இறைவன் திருமுன்பும் ஆலயத்தின் மற்ற இடங் களிலும் தூபம் இடுதல் என்பது மிகச் சிறந்த சிவ புண்ணியச் செயலாகும். எல்லாவிதமான தோஷங் களையும் நீக்கிப் பேரானந்தத்தைக் கொடுப்பதால் தூபம் என்ற பெயர் உண்டாயிற்று. (தூ—தோஷ நீக்கம்; ப—மகிழ்ச்சிப் பேறு) தூபங்களுள் சிறந்தது சீதாரி தூபம் என்பது. சந்தனம் ஏழு பங்கு, சாம் பிராணி ஆறு பங்கு, குங்குலியம் ஐந்து பங்கு, குங்கு மப்பூ நான்கு பங்கு, கோரைக் கிழங்கு மூன்று பங்கு, அகரு இரண்டு பங்கு, பச்சைக் கற்பூரம் ஒரு பங்கு

—இம்முறைப் படி சேர்த்துச் சிறிதளவு பசுநெய் கலந்து போடும் தூபமே சீதாரி தூபம் எனப்படும். காரணம் எனும் ஆகமத்தில் இதைப்பற்றிச் சிறப்பாக பேசப்படுகிறது.

''விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்'' என்று திருநாவுக்கரசு சுவாமிகள் கூறும் வண்ணம், ஆலயத்தில் விளக்கேற்றுதல் என்பது சிறந்த ஞானச் செல்வத்தை அளிக்கும். 'தீ' என்பது அறியாமை நீக்கத்தையும் 'ப' என்பது அறிவின் மலர்ச்சியையும் குறிக்கும். தீபம் என்பதன் பொருளை இவ்வாறு ஆகமத்தில் கண்டு கொள்ளலாம்.

இறைவனுக்குத் தீப உபசாரம் சமர்ப்பிக்கும் பொழுது உபயோகிக்கப் பெறும் பதினாறு வகையான தீபங்கள் ஆகமங்களில் குறிக்கப் பெற்றுள்ளன. மகா தீபம், நாக தீபம், ரிஷப தீபம், புருஷாமிருக தீபம் முதலிய தீபங்களில் அந்தந்த தேவதைகளைப் பூஜித்த பிறகே இறைவன் திருமுன் காட்ட வேண்டும். நாகதீபம் முதலானவற்றைக் காண்பிப்பதால் என்னென்ன பயன்விளையும் என்பதைப் பற்றியும் ஆகமங்களில் கூறப்பெற்றுள்ளது. மற்றும் நிவேதனம் செய்யப்பட வேண்டிய அன்ன வகைகளைப் பற்றியும் அவற்றின் அளவுகளைப் பற்றியும் அவ்வாறு நிவேதனம் செய்வதால் ஏற்படும் பயன்களைப் பற்றியும் கூட விரிவாக விளக்கப் பெற்றுள்ளன.

நித்திய வழிபாடு என்பது உஷத்கால பூஜையில் தொடக்கமுற்று சயனாலய பூஜை எனப்படும் பள்ளியறைப் பூஜையோடு நிறைவு பெறும்.

## ஆலய நிகழ்ச்சிகள்-மாச பூஜை

ஒவ்வொரு மாதத்திலும் பௌர்ணமியை முன்னிட்டு ஆலயத்தில் சிறப்பான பூஜைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். சித்திரைத் திங்களில் சித்திரை

நட்சத்திரத்தில் தமனோற்சவம் என்பதைச் செய்தால் நாட்டில் எல்லாவகைச் செல்வங்களும் கொழிக்கும். கத்தூரி, பச்சைக் கற்பூரம், பனிநீர் முதலானவற்றைக் கூட்டிச் செய்யப் பெற்ற கந்தத்தை இறைவனின் திருமேனியில் சாத்துதலாகிய கந்தபூசை என்பதை வைகாசித் திங்களில் விசாக நட்சத்திரத்தில் செய்ய வேண்டும். பக்குவமான பழவகைகளையும் அவற்றின் சாற்றையும் மூல லிங்கத்தின் மேல் அபிஷேகம் செய்தலாகிய பழபூசை என்பதை ஆனித் திங்களில் மூல நட்சத்திரத்தன்று செய்யவேண்டும். ஆடித்திங்களில் உத்திராட நட்சத்திரத்தில் க்ஷீரபூசை எனப்படும் பாற் பூசையைச் செய்ய வேண்டும். ஆடிப் பூரத்தில் உமையம்பிகைக்குப் பூரகர்ம உற்சவத்தையும் செய்ய வேண்டும். ஆவணித் திங்களில் அவிட்ட நட்சத்திரத்தில் சர்க்கரைப் பூசையையும் புரட்டாசித் திங்களில் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் ஆபூப பூஜையையும் செய்ய வேண்டும். ஆபூபம் என்பது வடை, தேன்குழல், முறுக்கு, எள்ளுருண்டை முதலான பணியார வகைகளைக் குறிக்கும். ஐப்பசித் திங்களில் அசுவனி நட்சத்திரத்தில்அன்னாபிஷேகத்தையும் கார்த்திகை மாதத்தில் கிருத்திகை நட்சத்திரத்தில் தீபாவளிப் பூஜையையும் செய்ய வேண்டும். சிவகாமங்களில் கார்த்திகை தீபவிழாவே தீபாவளி என்ற பெயரால் குறிக்கப் பெறுகிறது. கண்ணன் நரகாசுரனைக் கொன்றதன் நினைவாகக் கொண்டாடப் பெறும் விழாவே தீபாவளி எனப் பிற்காலத்தில் கருதப் பட்டு விட்டது. இந்த விழாவிற்கும் சிவாலயங்களுக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை.

மார்கழித் திங்கள் முப்பது நாள்களிலும் உஷத் கால பூஜையைச் சிறப்பாகச் செய்ய வேண்டும். மார்கழி மாத உஷத் காலத்தில் ஒரு சந்தியிற் செய்யும் பூஜை ஆயிரம் நாள்களில் செய்த சிவபூஜைக்குச்

சமமாகும் என்று ஆகமங்கள் மார்கழி மாத உஷத் கால பூஜையின் சிறப்பைப் பேசுகின்றன. இம் மாதத்தில் திருவாதிரை நட்சத்திரத்தன்று நெய்யாலும் இளஞ்சூடான வெந்நீராலும் இறைவனுக்கு அபிஷேகம் செய்து திருவூஞ்சல் விழாவைச் செய்ய வேண்டும்.

தைத் திங்களில் பூச நட்சத்திரத்தில் தேனபிஷேகம் செய்து இறைவனுக்குக் கிருஷ்ணகந்தம் என்பதைச் சார்த்த வேண்டும். மாசித் திங்களில் மக நக்ஷத்திரத்தில் கம்பள பூசை செய்யவேண்டும். பஞ்ச வர்ணமுள்ள இரத்தினக் கம்பளத்திலாவது, அது கிடைக்காவிடின் பருத்தி ஆடையிலாவது நெய், பால், பச்சைக் கற்பூரம் என்பனவற்றைப் பூசிப் பூசனை செய்து வாத்திய கோஷங்களுடன் கிராமத்தை வலமாக வந்து சிவலிங்கத்தின் மேல் சார்த்தி அர்ச்சிப்பதுதான் கம்பள பூஜை என்பது. பங்குனித் திங்களில் உத்திர நட்சத்திரத்தில் தயிர் அபிஷேகம் செய்து வழிபட வேண்டும்.

ஒவ்வொரு மாதமும் இவ்வாறு சிறப்பான விழா செய்வது கிராமத்திற்கும் நாட்டிற்கும் பல்வகையான வளங்களைக் கொடுக்கும்; இதனால் அண்டை நாடுகளால் ஏற்படும் பகைமை முதலாயின விலகும்; பிணி அகலும்; ஞானம் ஓங்கும்.

ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி என்னும் நான்கு மாதங்களுள் ஏதாவது ஒரு மாதத்தில் பவித்திர உற்சவம் என்பதைக் கட்டாயமாகச் செய்ய வேண்டும். ஒரு வருடத்தில் நாள்தோறும் செய்யும் பூஜையில் மந்திரக் குறைவு, திரவியக் குறைவு, கிரியைகளில் குறைவு முதலானவற்றாலும் அறியாமையாலும் கள்ளர் பயம் முதலானவற்றாலும்

நேர்ந்துவிடும் குறைபாடுகளை நிறைவு செய்யும் பொருட்டுப் பவித்ர உற்சவம் செய்யப்படுகின்றது. பூஜைகளில் நேர்ந்த குறைவை நீக்கிப் பரிசுத்தம் செய்வதால் பவித்திரம் எனப் பெயர் வந்தது. "நரகங்களில் உழலும் உயிர்க் கூட்டங்களுக்கு இதமளித்து அவற்றை மீட்பதால் பவித்திரம் எனப் பெயர் ஏற்பட்டது" என்று காமிகாகமம் கூறும் கருத்து சிந்தையைக் கவர்வதாக உள்ளது. சிவாலய நிகழ்ச்சிகள் இவ்வுலகத்தாரின் நன்மைக்காக மட்டுமல்ல, ஏனைய உலகத்தாரின் இன்ப வாழ்வுக்காகவும் அவை நிகழ்த்தப் பெறுகின்றன என்பதை காமிகக் கருத்தால் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

## ஆலய நிகழ்ச்சிகள்—பெருவிழா (பிரம்மோற்சவம்)

மக்களாகப் பிறந்தோர் தமது வாழ்க்கையின் மிகச் சிறந்த பேறுகளாகக் கருதி இரண்டு செயல்களைச் செய்யவேண்டும் என்று கூறுகிறார் சேக்கிழார் பெருமான். ஒன்று அன்பர்க்கு அமுது படைத்தல்; மற்றொன்று சிவாலயங்களில் நடைபெறும் பெருவிழாக்களைக் கண்டு களித்தல்.

"மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லாரடி யார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணி னாலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்"
பெரியபுராணம் : 2990.

சிவாலயங்களில் பெருவிழாக்களை நிகழ்த்துதலும் அவற்றைக் கண்டு களித்துத் திருவருளைப் பெறுதலும் வாழ்க்கையின் சிறந்த பயன்களாகும்.

'உத்ஸவம்' என்பது விழா எனப் பொதுப்படப் பொருள் தரும். எனினும் குமார தந்திரம் முதலான

ஆகமங்களில் உத்ஸவம் என்ற சொல்லின் பொருள்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. 'உத்' என்பது படைப்பையும் 'ஸ' என்பது காத்தலையும் 'வ' என்பது அழித்தலையும் குறிக்கும் எழுத்துக்களாகும். இம் மூன்று தொழில்களுள் மறைத்தல் என்பதும் அருளல் என்பதும் அடங்கும். எனவே உத்ஸவம் என்பது ஐந்தொழில் எனப் பொருள் தருகின்றது. உத்ஸவ நிகழ்ச்சிகள் எவ்வாறு ஐந்தொழில்களைக் குறிக்கின்றன என்பதைப் பின்னர்க் காண்போம். உத்ஸவம் என்பது உத்தம யாகம் எனவும் படைப்பு நெறியைக் குறிப்பது எனவும் போக மோக்ஷங்களைக் கொடுப்பது எனவும் பொருள்படும் என்று அகோர சிவாசாரியார் தமது பத்ததியில் கூறுகிறார்.

சிவாலயங்களில் பெருவிழாக்கள் மூன்று விதங்களாகத் தொடங்கப் பெறும். கொடியேற்றுவிழா, பேரீதாடனம் (முரசொலி), அங்குரார்ப்பணம் என்ற வரிசைப்படி நிகழ்வது ஒருவகை. இதற்குத் துவஜாரோகண பூர்வம் என்று பெயர். பேரீதாடனம், கொடியேற்று விழா, அங்குரார்ப்பணம் என்ற வரிசைப்படி நிகழ்வது இரண்டாவது வகை. இதற்குப் பேரீதாடன பூர்வம் என்று பெயர். அங்குரார்ப்பணம், பேரீதாடனம், துவஜாரோகணம் என்ற வரிசைப்படி நிகழ்வது மூன்றுவது வகை. இதற்கு அங்கு பார்ப்பண பூர்வம் என்று பெயர். இம் மூன்றும் விழாத் தொடக்கத்தைப் பற்றிய பிரிவுகளே; விழாக்களைப் பற்றிய பிரிவுகள் அல்ல.

பிரம்மோற்சவம் என்றும் மகோற்சவம் என்றும் கூறப்படும் பெருவிழாக்கள் சாகல்யம், பாவனம், சாந்தி, மாங்கல்யம் என நான்கு வகைப்படும். துவஜாரோகணம் முதல் தீர்த்தவாரி என்பது வரை நடைபெறுவது சாகல்ய உற்சவம்; துவஜா ரோகணம் மட்டும் இல்லாமல் மற்ற

எல்லா நிகழ்ச்சிகளையும் சாகல்யத்திற்கு உள்ளது போலவே நடத்துதல் பாவனம் எனப்படும்; காலையில் ஹோமம், பலி இவற்றைச் செய்து மாலையில் உற்சவம் செய்வது சாந்தி எனப்படும்; தனது நன்மைக்காக வேண்டி ஒருவர் ஒரு குறிப்பிட்ட தினத்தை முடிவாகக் கொண்டு விழாச் செய்வதற்கு மாங்கல்யம் என்று பெயர். பெரும்பாலான சிவாலயங்களில் சாகல்ய உற்சவங்ககளே நிகழ்த்தப் பெறுகின்றன.

சாகல்ய உற்சவம் ஒன்பது வகைப்படும் என்று காரணாகமம் கூறுகிறது. உற்சவம் நடைபெறும் நாள் கணக்கை வைத்து இதன் பிரிவுகள் ஏற்படுகின்றன.

| பெயர் | விழா நடைபெறும் நாள் | தரமும் பயனும் |
| --- | --- | --- |
| 1 சௌரம் | 27 நாள் | உத்தமம்; |
| 2. சாந்திரம் | 17 நாள் | |
| 3. சாவித்திரம் | 15 நாள் | சுகத்தைக் கொடுக்கும். |
| 4. சௌமாரம் | 13 நாள் | மத்திமம்; |
| 5. தைவிகம் | 9 நாள் | |
| 6. பௌவனம் | 7 நாள் | வெற்றியைக் கொடுக்கும் |
| 7. பௌதிகம் | 5 நாள் | அதமம்; |
| 8. கௌணம் | 3 நாள் | |
| 9. சைவம் | 1 நாள் | செல்வத்தைக் கொடுக்கும் |

கௌரம் என்பதை நீக்கியும் பைத்ருகம் (11 நாள் விழா) என்பதைச் சேர்த்தும் சூட்சுமம் எனும் ஆகமம் உற்சவப் பிரிவுகளைக் கூறுகிறது. இந்த ஆகமப்படி பதினேழு நாள் விழாவே மிகவும் பெரியது. குமார தந்திரம் எனும் ஆகமம் பைத்ருகம் (11 நாள்), சௌக்கியம் (9 நாள்). ஸ்ரீகரம் (7 நாள்), பௌதிகம் (5 நாள்), சாத்துவிகம் (3 நாள்), சைவம் (1 நாள்) என்னும் ஆறு பிரிவுகளையே கூறுகிறது. சௌரம் முதலான ஒவ்வொரு வகைக்கும் உரிய சிறப்பான பயனைக் காமிகாகமம் கூறு

கிறது. இவ்வகை உற்சவங்கள் தனிப்பட்ட ஒருவரின் நன்மைக்காகச் செய்யப் பெறுவதில்லை என்பதையும் உலகெங்கும் உள்ள ஜீவராசிகளின் நன்மைக்காகவே செய்யப் பெறுகின்றன என்பதையும் சிவாகமங்கள் அடிக்கடி நினைவுபடுத்திய வண்ணம் உள்ளன.

பெருவிழா ஒன்றில் கீழ்க்கண்ட பதினெண் கிரிகைகளும் வரிசைப்படி நிகழும்:

1. ரிஷப யாகம்
2. துவஜாரோகணம்
3. பிருகத்தாளம் (பேரீதாடனம்)
4. அங்குரார்ப்பணம்
5. யாகசாலை
6. அஸ்த்ரயாகம்
7. பலிதானம்
8. யானக்கிரமம்
9. பரிவேடம்
10. நீராஜனம்
11. கௌதுகம்
12. தீர்த்த ஸங்கிரகணம்
13. சூர்ணோற்சவம்
14. தீர்த்தவாரி
15. துவஜ அவரோகணம்
16. ஸ்னபனம்
17. திருக்கல்யாணம்
18. பக்த உற்சவம்

இங்கே குறிப்பிடப் பெற்றவை மட்டுமல்லாமல் ரதா ரோகணம், மௌனோற்சவம், கிருஷ்ண கந்தார்ச்சனை, சக்தியாத்திரை முதலான வேறு நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

உற்சவம் என்பது எவ்வாறு ஐந்தொழிலைக் குறிக்கின்றது என்று இனிக் காண்போம். உற்சவத்தில் செய்யப்பெறும் செயல்களுள் அனுக்ஞை, வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், பேரீதாடனம், ரட்சாபந்தனம், ரிஷபயாகம், அத்திரதேவதை ஆவாகனம், துவஜாரோகணம், கிராமப்பிரதக்ஷிணம், கோபுரத் துவார நீராஜனம், பலி, திருக்கல்யாணம் என்பவை படைப்புத் தொழிலைக் குறிக்கும்.

வாகன உற்சவம் (யானக் கிரமம்), ஹோமம், பலி என்பவை காத்தல் தொழிலைக் குறிக்கும்.

மிருக யாத்திரை, ரதாரோகணம்(தேர்த்திருவிழா), கிருஷ்ண கந்தார்ச்சனை என்பவை அழித்தல் தொழிலைக் குறிக்கும். சூர்ணோற்சவம், தீர்த்தவாரி, யாக கும்பாபிஷேகம், துவஜ அவரோகணம், மௌனோற்சவம், சண்டயாகம் என்பவை மறைத்தல் தொழிலைக் குறிக்கும்.

சக்தியாத்திரை, சண்டேசுவர உற்சவம், ஆசாரிய உற்சவம் என்பவை அருளல் எனும் தொழிலைக் குறிக்கும்.

உற்சவ நிகழ்ச்சியின் முக்கியமான உட்கருத்து ஒன்று உண்டு. சைவ சமயததில் தீக்ஷை என்பதற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. 'தீ' என்பது சிவப்பேற்றையும் 'க்ஷி' என்பது மலநாசத்தையும் குறிக்கும். எந்தச் செயல் ஒருவருடைய மாயை, கன்மம், ஆணவம் எனும் மும்மலங்களையும் போக்கிச் சிவப்பேற்றினை (சிவஞானச் செல்வத்தை) அளிக்கின்றதோ அதுவே தீக்ஷை எனப்படும். தீக்ஷையில் பல வகைகள் உண்டு. இவற்றுள் ஒன்று சாம்பவி தீக்ஷை என்பது. ஆசாரியர் தமது ஞானக் கண்ணால், மாணவனின் பாசத்தை அழித்துத் தூய்மை செய்தலே சாம்பவி தீக்ஷை என்பது. தீக்ஷை செய்யும் காலத்தில் ஆசாரியர் ஒரு சமயத்தில் ஒருவருக்கே தீக்ஷை செய்யமுடியும். ஆனால், ஆலயங்களில் நடைபெறும் உற்சவமோ சாம்பவி தீக்ஷையை ஒரே சமயத்தில் எல்லா உயிர்க்கூட்டங்களுக்கும் அளிக்கவல்லதாகின்றது. இதுதான் உற்சவத்தின மேலான பயன்.

உற்சவ காலத்தில் சிவபெருமான் திருவீதி வலம் வருதல் மூவுலகங்களையும் காத்து அருளும் குறிப்பாகும். ரிஷபம் முதலான வாகனங்களின் மேல் எழுந்தருளுதல், அசுரர், பிசாசர், ராக்கதர், இயக்கர் முதலிய கொடி

யோர்களை அழித்தற் பொருட்டும் அன்பர்களை அனுக்கிரகித்தற் பொருட்டுமாம். இறைவன் திருவுலாக் கொள்ளும் போது சிவாசாரியார் சுவாமிக்கு வலப்பக்கத்திலும், கோயில் அதிகாரி இடப்பக்கத்திலும், அன்பர்களின் கூட்டம் பின்னாகவும், வாத்தியம் வாசித்தல் முதலான சிவச் செயல்களில் ஈடுபடுவோர் சுவாமிக்கு முன்பும் இரண்டு பக்கங்களிலும் செல்லவேண்டும். திருவுலாச் சமயத்தில் இறைவனை மாடியின் உச்சியில் இருந்து கொண்டோ மரக்கிளைகளில் இருந்து கொண்டோ தரிசனம் செய்யாது கீழிறங்கி வந்தே வணங்க வேண்டும்.

உற்சவத்தின் பொருட்டு ஆலயத்தில் அமைக்கப் பெறும் யாகசாலை, மந்திரம், பதம், வர்ணம், தத்துவம், புவனம், கலை எனப்படும் ஆறு அத்துவாக்களின் வடிவமாக விளங்கும். யாக சாலையின் நடுவில் வேதிகையில் வைக்கப்பட்டிருக்கும் கும்பத்தில் ஆவாகனம் செய்யப்பெறும் சிவபெருமானுக்குக் குடமே மாமிசம்; கும்பத்தில் நிறைந்துள்ள நீர் இரத்தம்; கும்பத்தின் மேல் சுற்றப்பட்டிருக்கும் நூல் எழுபத்திரண்டாயிரம் நாடிகள்; கும்பத்துள் இடப்படும் ரத்தினங்கள் எலும்பு அல்லது சுக்கிலம்; கும்பத்தின் மேல் இடப்படும் ஆடை, தோல்; தர்ப்பையால் அமைக்கப்பட்ட கூர்ச்சம் என்பது கேசரம்; மாவிலை, ஜடை; மாதுளம் பழம், பற்கள்; தேங்காய், சிரசு: ஆசாரியர் கூறும் மந்திரம் பிராணன். இவ்வாறு கும்பத்தின் வடிவை உணர்ந்து கொள்ள வேண்டும்.

சிவாலய வழிபாட்டில் எந்த இடத்திலும் எந்தச் சமயத்திலும் உயிர்க் கொலைக்கு இடமே கிடையாது.

உற்சவத்தில் முக்கியமானது ரதாரோகணம் எனப்படும் தேர்த்திருவிழாவே. இதற்கு மிகவும் முக்கியத்து

வம் இருக்கின்ற காரணத்தால் ஆகமங்களில் தேர்களின் அமைப்பைக் குறித்தும் விரிவாகக் கூறப்பெற்றுள்ளது. குமாரதந்திரம் என்னும் ஆகமம் விஜயரதம், காந்தரதம், ஸ்ரீகேசர ரதம், விசால ரதம், நிபத்திர ரதம், ஸ்ரீவிசால ரதம், பத்திர ரதம், பத்திர விசால ரதம் என எட்டு வகையான தேர்களின் அமைப்பைப் பற்றிக் கூறுகின்றது. இரண்டு சக்கரத் தேர் முதல் பன்னிரண்டு சக்கரங்கள் உடைய தேர் வரை பல வகையான தேர்கள் முற்காலத்தில் இருந்தனவாக அறிய முடிகிறது.

தீயசக்திகளின் அழிவின் பொருட்டாகவும், அறிந்தோ அறியாமலோ நேரும் அனைத்து விதமான குற்றங்களை நீக்கும் பொருட்டாகவும், எல்லா உலகங்களும் இன்பமாக இருப்பதன் பொருட்டாகவும், எல்லாத் தெய்வங்களுக்கும் மகிழ்ச்சியை உண்டுபண்ணும் பொருட்டாகவும் எல்லா உயிர்த்திரள்களுக்கும் சுகம் உண்டாகும் பொருட்டாகவும் நாடு பகையை வென்று மேம்பாட்டுடன் திகழ்வதன் பொருட்டாகவும் நினைத்த காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டாகவும் மகோற்சவங்களைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும்.

## தனிமனிதனுக்குரிய அன்றாடக் கடமைகள் :

கிராமங்களையும் நகரங்களையும் ஆலயங்களையும் எவ்வாறு அமைக்க வேண்டும் என்ற வழிமுறைகளைக் கூறுவதோடு ஆகமங்கள் நின்றுவிடவில்லை. சமுதாயத்தின் ஓர் உறுப்பினன் என்ற முறையில் ஒரு தனி மனிதன் தனது அன்றாடக் கடமைகளை முறையாக நிறைவேற்றித் தூய்மையுடனும் ஒழுக்கக் கட்டுப்பாடுகளுடனும் எவ்வாறு வாழ வேண்டும் என்பதைப் பற்றியும் ஆகமங்

கள் வித்தாரமாகப் பேசுகின்றன. ஒரு தனிப்பட்ட மனிதனின் ஒழுக்கத்திற்கும் கிராம மேம்பாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதால், ஒரு மனிதனுக்குரிய அன்றாடக் கடமைகளைப் பற்றியும் ஆகமங்கள் ஆராய்கின்றன. மனிதனின் நோக்கம் புற உலகில் சென்று அலைந்து திரியாமல் அகமுகமாகத் திரும்பி ஆண்டவனிடம் ஒன்றும் வண்ணம் ஆகமங்கள் மனிதனுக்குரிய அன்றாடக் கடமைகளை வரையறுக்கின்றன.

சூரியன் உதயமாவதற்கு ஐந்து நாழிகைகளுக்கு முன் (விடியற்காலை 4 மணி அளவில்) ஒருவன் துயில் நீங்கி எழுந்திருந்து இயன்றவரை தனது தேகத்தைத் தூய்மை செய்து கொண்டு இறைவனைத் தியானிக்க வேண்டும். பிறகு மௌனமாக வீட்டை விட்டு வெளியே புறப்பட்டுக் காலைக் கடன்களைக் கழிப்பதற்காகத் தகுந்த இடத்தை அணுக வேண்டும். பசுக்கள் கூடும் இடம், மரநிழல் படியும் இடம், புல் முளைத்துள்ள இடம், இடி விழுந்த இடம், நீர்க்கரை முதலான இவ்விடங்களில் அவன் அசுத்தம் செய்யக்கூடாது. பசு, சான்றோர், சிவலிங்கம், துறவி, பெண்கள், சந்திரன், சூரியன் —இவர்களின் பார்வையில் படாமல் மறைவிடத்தில் காலைக்கடனைக் கழிக்கவேண்டும். பகலில் வடக்கு நோக்கியும் இரவில் தெற்கு நோக்கியும் மூக்குநுனியிற் படிந்த பார்வை உடையவனாய் இருக்க வேண்டும்.

புங்கன், குரா, வாகை, கருங்காலி, மருது முதலான மரங்களின் குச்சியால் துறவியும் நொச்சி, மா, அசோகு, நாவல், சண்பகம், நாயுருவி, வேம்பு முதலானவற்றின் குச்சியால் இல்லறத்தானும் பல் துலக்க வேண்டும். பிரதமை, சஷ்டி, நவமி, அமாவசை, பௌர்ணமி, பித்ரு தினம், மாதப் பிறப்பு முதலான நாள்களில் பல்தேய்க்கக் கூடாது; முன் சொன்ன மரங்களின் சருகுகளால் நாவினைத் தூய்மை செய்து பன்னிரண்டு முறை வாய் கொப்பளிக்க வேண்டும்.

பல் தேய்த்த பிறகு மேற்கொள்ளப்பட வேண்டிய குளியல் (ஸ்னானம்) என்பது பலவகைப்பட்டதாக விளங்குகிறது. நதி, குளம் முதலான நீர்நிலைகளில் மந்திரத்தால் சிவதீர்த்தம் உண்டாக்கிக் குளிப்பது வாருண ஸ்னானம் எனப்படும். நீர் நிலைகளில் ஏற்கெனவே நீர் இருந்தாலும் அந்த நீரைச் சிவதீர்த்தமாகப் பாவனை செய்து குளிக்க வேண்டும். விபூதியினால் தலை முதல் பாதம் வரை உத்தூளனம் செய்து கொள்ளல் ஆக்னேய ஸ்னானம் எனப்படும். (ஆக்னேயம்—நெருப்பின் தொடர்புடையது). வயது முதிர்ந்தோருக்கே இவ்வகைக் குளியல் விதிக்கப்படுகிறது. குருவின் உபதேசப்படி மனத்தால் ஸ்னான பாவனை செய்தல் மானதஸ்னானம் எனப்படும். தீக்ஷை பெற்றோரே இதனை மேற்கொள்ளலாம். சிறிது வெய்யிலோடு கூடிய மழையில் கிழக்கு முகமாக நின்று ஈசானம் அல்லது தத்புருஷம் என்னும் மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு ஏழடி நடந்து செல்லுதல் திவ்விய ஸ்னானம் என்றும் மாகேந்திர ஸ்னானம் என்றும் கூறப்படும். பசுக்கள் கூட்டமாக வரும்பொழுது பசுக்களின் குளம்புகளிலிருந்து எழும்பும் துகள்கள் காற்றினால் தனது எல்லா அங்கங்களிலும் படியுமாறு நடந்து செல்லுதல் மாருத ஸ்னானம் எனப்படும். இதனை வாயு ஸ்னானம் என்றும் கூறுவர். பெருமை வாய்ந்த சிவத்தலங்களிலோ மகா நதிகளிலோ உள்ள திருமண்ணை எடுத்துத் தான் இருக்கும் இடத்தில் வைத்துக் கொண்டு தான் வேண்டியபோது நீரில் கரைத்துத் தெளித்துக் கொள்ளுதல் பார்த்திவ ஸ்னானம் எனப்படும். தன்னுடைய குருவின் இரண்டு திருவடிகளையும் சந்தன நீராலோ தண்ணீராலோ கழுவி அதனால் ஸ்னானம் செய்தல், அல்லது சிரசில் தெளித்துக்கொண்டு உட்கொள்ளல் கௌரவ ஸ்னானம் எனப்படும். சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்யப்பட்ட நீரை ஒரு குடத்தில் ஏந்தி வந்து அதனால் ஸ்னானம் செய்தல் சிவநிர்மால்ய

ஸ்னானம் என்பதாகும். இந்த ஸ்னானம் குட்டம் முதலான பெரு நோய்களையும் பேய்ப்பிடிப்பு முதலானவற்றையும் நீக்க வல்லது. நோய் முதலிய காரணங்களால் ஸ்னானம் செய்ய முடியாத நிலை நேர்ந்த பொழுது ஈரத் துணியால் தேகத்தைத் துடைத்துக் கொள்ளுதல் கபிலஸ்னானம் எனப்படும்.

''அவரவர் நிலைக்கு எந்த வகைக் குளியல்முறை பொருத்தமாகத் தோன்றுகிறதோ அதனை மேற்கொள்ளலாம். தேகத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுதலே முக்கியம்'' என்று கூறும் காமிகாகமம் அடுத்துக் கூறுகிறது : ''தேக சுத்தி மாத்திரம் தூய்மையன்று. மனத்தின்கண் மாசில்லா திருத்தலே எல்லாத் தூய்மைகளிலும் சிறந்தது.''

குளித்த பிறகு உலர்ந்த ஆடை தரித்துத் திருநீற்றையும் ருத்திராக்கத்தையும் விதிப்படி அணிந்து கொள்ளவேண்டும். மூன்று திருமுகங்களும் ஒன்பது கண்களும் மூன்று கரங்களும் மூன்று திருவடிகளும் நடனக் கோலமும் விபூதி உத்தூளனம் செய்யப்பட்ட சிவந்த திருமேனியும் உக்கிரமான வேடமும் உடைய விபூதி தேவர் என்பவரைத் தியானம் செய்துகொண்டு தனக்குப் பெரியோர் சொல்லிக் கொடுத்த முறைப்படித் திருநீற்றை அணிந்து கொள்ள வேண்டும். தீட்சை பெற்றோர் மந்திரங்களைச் சொல்லியே ஸ்னானம் முதலான காரியங்களைச் செய்ய வேண்டும்.

இன்ன இன்ன இடங்களில் விபூதியைத் தரிக்கவேண்டும் என்றும் அவ்வாறு தரிப்பதால் ஏற்படும் பயன்கள் என்ன என்றும் ஒரு முகமுடைய ருத்திராக்கம் முதல் பதினான்கு முகங்களுடைய ருத்திராக்கங்கள் வரை உள்ள ருத்திராட்சங்களை அணிவதால் ஏற்படும் பயன்கள் என்ன என்றும் ஆகமங்களில் விரிவாகக் கூறப்பெற்றுள்ளன.

திருநீறு, ருத்திராக்கம் இவற்றை அணிந்துகொண்டு தீட்சைபெற்ற ஒவ்வொரு சைவனும் காலையில் பிராம்மி எனும் சந்தியாதிட்டான தேவதையையும் உச்சிப் போதில் வைஷ்ணவீ எனும் தேவதையையும் மாலையில் ரௌத்திரி எனும் தேவதையையும்வணங்க வேண்டும். ஆசாரியாபிஷேகம் செய்யப் பெற்றவர் நான்காவது சந்தியிலும் (நள்ளிரவிலும்) சந்தியா வந்தனம் செய்ய வேண்டும். சைவர்கள் அவசியம் சிவகாயத்திரி மந்திரத்தை ஜபிக்கவேண்டும். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், ஆன்மா, சூரியன், சந்திரன எனப்படும் எட்டும் சிவபெருமானுக்குரிய அட்டமூர்த்தங்களாகும். இவற்றுள் சூரியனிடத்தில் சிவத்தோற்றத்தைப் பிரத்தியட்சமாகக் காணமுடிவதால் சூரிய வழிபாட்டின் அவசியத்தை ஆகமங்கள் எடுத்துரைக்கின்றன. சூரிய வழிபாடு சிவபூஜை செய்வதற்கு ஏற்ற ஆன்ம பலத்தைக் கொடுக்கும். சூரியவழிபாட்டிற்குப் பிறகு பூதசுத்தி, ஸ்தான சுத்தி, திரவியசுத்தி, மந்திர சுத்தி, லிங்க சுத்தி எனப்படும் ஐந்துவகையான சுத்திகளையும் செய்துகொண்டு, ஆகமங்களில் கூறியவண்ணம் சாங்கோபாங்கமாகச் சிவபூஜையைச் செய்யவேண்டும். இவ்வாறு செய்வது ஆன்மார்த்த சிவபூஜையாகும். ஆதிசைவர் ஆன்மார்த்த சிவபூஜை செய்த பின்னரே பரார்த்தமாகிய ஆலய பூஜையைச் செய்யவேண்டும். சிவபூஜைக்குப் பிறகு அக்னிகாரியத்தையும் சண்டேசுவர பூஜையையும் செய்ய வேண்டும். பிறகு, கபில பூஜை என்ற முறையில் பசுக்களைப் பூஜித்துப் புல்லோ கவளமோ கொடுத்துத் துதிக்க வேண்டும்.

ஆகமங்களில் பசுவின் பெருமை கூறப்பெற்றுள்ளது போல் வேறு எந்த நூலிலும் கூறப்படவில்லை எனக்கூறலாம். கைலாயத்தில் சிவபெருமான் திருமுன்னர் உள்ள ரிஷபத்தைச் சார்ந்து உள்ள பசுக்கள் ஐந்து.

கபிலவண்ணம் உடைய நந்தை, கருமைவண்ணம்உடைய பத்திரை, செவ்வண்ணம் உடைய சுரபி, வெண்ணிற முடைய சுசீலை, விசித்திர வண்ணங்களுடைய சுமனை எனப்படும் ஐந்து பசுக்களிலிருந்தே விபூதி, பஸிதம், பஸ்மம், க்ஷாரம், ரக்ஷை என்னும் ஐந்துவகைப்பட்ட திருநீறு உண்டாயிற்று என பிருகஜ்ஜாபாலம் எனும் உப நிடதம் கூறுகிறது. பசுவின் அங்கங்களில் தேவர்கள் இருப்பிடம் கொண்டுள்ளதை ஆகமங்கள் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. பிரம்மாவும் திருமாலும் கொம்புகளின் அடியிலும், காவிரி முதலான புண்ணிய நதிகளும் சராசர உயிர் வருக்கங்களும் கொம்புகளின் நுனியிலும் தலையில் சிவபெருமானும், நெற்றியின் நடுவில் சிவசக்தியும், மூக்கின் நுனியில் முருகப்பெருமானும், மூக்கினுள்ளே வித்தியாதரர்களும், இரண்டு கன்னங்களுக்கும் நடுவில் அசுவினி தேவரும், இரண்டு கண்களில் சூரிய சந்திரரும், பற்களில் வாயுதேவனும் நாவில் வருண தேவனும் பொருந்தி யிருப்பார்கள். நெஞ்சில் கலைமகளும், கழுத்தில் இந்திரனும், முரிப்பு எனப்படும் கொண்டைப் பகுதியில் பன்னிரண்டு ஆதித்தியர்களும், நான்கு கால்களிலும் அனிலன் எனும் வாயுதேவனும், முழந்தாள்களில் மருத்து தேவரும், குளம்பின் நுனியில் நாகர்களும், குளம்பின் நடுவில் கந்தர்வர்களும், குளம்பின் மேற்பகுதியில் அரம்பையரும் வீற்றிருப்பார்கள். இவ்வாறே முதுகில் உருத்திரர்களும், யோனியில் சத்த மாதாக்களும், குதத்தில் இலக்குமியும், ரோமங்களில் மகாமுனிவர்களும், எல்லா அங்கங்களிலும் கற்புடை மங்கையரும் பொருந்தியிருப்பார்கள். ஆன்மாக்களின் பொருட்டே சிவபெருமான் பசுக்களைப் பூமியில்பிறக்கச் செய்துள்ளார் என்று சாத்திரங்களில் கூறப்பட்டிருப்பதால் மனிதன் நாள்தோறும் தான் செய்யும் பூஜையின் முடிவில் கபில பூஜை என்பதைச் செய்யவேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன. கபில பூஜை முடிந்த பிறகு

ஆலயத்திற்குச் சென்று சிவபெருமானைத் தரிசிக்க வேண்டும்.

ஆலயத்துக்கு அருகே சென்று கோபுரவாயிலுக்கு வெளியிலாவது பலிபீடத்தின் அருகிலாவது தூலலிங்கம் எனப்படும் விமானத்திற்கு நமஸ்காரம் செய்யவேண்டும். பின்னர்ப் பலிபீடம், கொடி மரம், நந்தி என்பவற்றை வணங்கி இடபதேவரின் அனுமதி கிடைத்தது போன்று பாவனை செய்துகொண்டு பலி பீடத்தின் முன்னர் விழுந்து வணங்கவேண்டும். வணங்கி எழுந்திருக்கும் போது கையிலோ, காலிலோ, ஆடையிலோ ஒட்டிக் கொண்டுள்ள தூசுகளை உதறக்கூடாது. தேகத்தை உத்தரீயத்தால்போர்த்துக்கொண்டும் வணங்கக்கூடாது. சிவபெருமானுக்கு நேராகவும் பின்பக்கத்திலும் இடப் பக்கத்திலும் கருப்பக்கிரகத்திலும் நமஸ்காரம் செய்யக் கூடாது. சிவபெருமானின் சந்நிதியில் சிறிது நேரம் மௌனமாகத் தோத்திரம் செய்த பிறகு ஆலயத்தைத் வலம் வரவேண்டும். இருபத்தொன்று, பதினைந்து, ஏழு, ஐந்து, மூன்று எனும் இவற்றுள் யாதானும் ஓர் எண்ணிக்கையில் வலம் வரலாம். வலம் வரும்பொழுது, அபிஷேக நீர் செல்லும் வழியாகிய சோமசூத்திரம் மூடப் படாது இருக்குமானால் தாண்டிச் செல்லக்கூடாது. சோமசூத்திரம் வரையில் வலமாக வந்து மீண்டும்திரும்பி இடமாகச் சென்று சோமசூத்திரத்தை அடையவேண் டும். பிறகு அங்கிருந்து வலமாக மீண்டும் வரவேண்டும் இவ்வாறு வலமாகவும் இடமாகவும் பிரதக்ஷிணம் செய்ய வேண்டும். பிரதோஷ காலத்தில் இடபதேவரைத் தாண்டிச் செல்லக்கூடாது. ஆகையால் அப்பொழுதும் முன்கூறியவண்ணமே வலமாகவும் இடமாகவும் பிரதக்ஷி ணம் செய்ய வேண்டும்.

பிரதக்ஷிணம் என்பதன் பொருளை அம்சுமான் எனும் ஆகமம் கீழ்க்கண்டவாறு கூறுகிறது: ''ப்ர என்பது

பயநாசத்தையும் த என்பது மோட்சத்தையும் க்ஷி என்பது வியாதி நாசத்தையும் ணம் என்பது செல்வப் பேற்றையும் குறிக்கின்றது. எனவே பிரதக்ஷிணம் என்ற ஒரு செயலால் நான்கு பயன்களையும் பெறலாம்.''
பிரதக்ஷிணம் செய்யும்பொழுது அடிமேல் அடிவைத்துச் செல்லவேண்டும்; கைகளை வீசி வேகமாக நடக்கக் கூடாது. வாக்கில் தோத்திரமும் உள்ளத்தில் தியானமும் இருக்க வேண்டும்.

இவ்வாறு பிரதக்ஷிணம் செய்த பிறகு சண்டேசுவரப் பெருமானை வணங்கி சிவாலய தரிசனப் பயனை வழங்குமாறு பிரார்த்திக்க வேண்டும். பின்னர், அறிந்தோ அறியாமலோ தன்னால் ஆலயத்தில் நேர்ந்துவிட்ட குற்றங்களை நீக்குவதற்காகச் சிவபெருமானின் சந்நிதியில் இருந்து கொண்டு இயன்றவரை தோத்திரமும் ஜபமும் செய்து சிவபெருமானுக்குத் தனது முதுகைக் காட்டாமல் ஆலயத்தினின்று வெளியே வரவேண்டும். இவ்வாறு ஆலயதரிசனம் செய்த பிறகே உணவினைக் கொள்ள வேண்டும்.

சிவாகமங்களில் கூறப்பட்டுள்ள செய்திகளுள் ஒரு பகுதியே கிராம அமைப்பு, ஆலய அமைப்பு, ஆலய நிகழ்ச்சி, தனி மனிதனின் கடமைகள் என முறைப்படுத்திக் கூறப்பட்டது. சமுதாய அமைப்பிற்கும் மனித வாழ்க்கைக்கும் சிவாகமங்கள் எங்ஙனம் உதவுகின்றன என்பதைக் காட்டவேண்டும் என்ற நோக்கில்தான் இவ்வாறு எழுதப்பட்டது. மற்ற கிரியைகளைப் பற்றியோ மந்திரங்களைப் பற்றியோ இங்கே எழுதவில்லை.

# 5. ஆகம உரையாசிரியர்கள்

வேதங்களைப் போன்றே ஆகமங்களும் குரு சம்பிரதாய முறையில் வழிவழியாகப் பயிலப்பட்டு வந்தன. ஆகமப் பயிற்சியைத் தொடர்ந்து காப்பாற்றிக்கொண்டு வந்த நான்கு மடங்களைப் பற்றிக் காமிகாமம் கூறுவதைக் காண்கிறோம். சனற்குமாரரை ஆசிரியராகக் கொண்ட ஆமர்த்தக மடம், சனக முனிவரை ஆசிரியராகக் கொண்ட புஷ்பகிரி மடம், சனாதன முனிவரை ஆசிரியராகக் கொண்ட கோளகி மடம், சனந்தன முனிவரை ஆசிரியராகக் கொண்ட ஆமண்டமடம் எனப்படும் நான்கு மடங்களும் ஆகமங்களைத் தக்கார்க்கு (தீக்ஷையுடையோர்க்கு)ப் பயிற்றுவித்துக் கொண்டு வந்தன. காலம் செல்லச் செல்ல வேதங்களும் உபநிடதங்களும் அதிக செல்வாக்கைப் பெற ஆகமப் பயிற்சி நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வந்தது. ஆதிசங்கரர் போன்ற பெருமக்களும் வேதங்களையும் உபநிடதங்களையும் பிரமாணங்களாகக் காட்டிய அளவிற்கு ஆகமங்களைக் காட்டவில்லை. தத்துவ நெறியில் தலைப்பட்ட சான்றோர்களும் ''சடங்குகளுக்காக எழுதப்பட்ட நூல்களே ஆகமங்கள்'' என எவ்வாறோ தவறான முடிவிற்கு வந்து விட்டனர். அதற்கேற்றாற்போல் அக்காலத்தில் சிவாசாரியப் பெருமக்களும் கிரியைகளில் காட்டிய அக்கறையையும் ஊக்கத்தையும் ஞானநெறியில் காட்டத் தவறிவிட்டனர். பெரும்பாலான ஆகமங்களில் ஞானபாதப் பகுதி கிடைக்காமல் இருப்பதற்கு இவர்களது புறக்கணிப்பை முக்கியக் காரணமாகக் கூறலாம். கி.பி. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை சிவாகமங்கள் புதையுண்ட பொற்குவியல்கள்

போன்றே இருந்தன. எட்டாம் நூற்றாண்டு முதல் பதினைந்தாம் நூற்றாண்டு வரை உள்ள காலத்தில்தான் தமிழ்நாட்டையும் காஷ்மீரத்தையும் சார்ந்த பெரு மக்கள் பலர் சிவாகமங்களின் உட்பொருளை விளக்கிப் பேருரைகள் படைத்து அவற்றின் பெருமையை மீண்டும் நிலை நாட்டினர். அவர்களின் உரைப்பணியால் சித்தாந்த சைவம் புத்துயிர் பெற்றது எனக் கூறலாம். காஷ்மீர நாட்டில் வழங்கும் சைவம் பிரத்தியபிக்ஞா எனப் பெயர் பெறும். சிவாகமங்களுக்கு உரைகண்ட காஷ்மீர அறிஞர்கள் பிரத்தியபிக்ஞா அடிப்படையில் உரை வரையாமல் சைவ சித்தாந்தக் கண்ணோட்டத்திலேயே வரைந்திருப்பது பெரிதும் பாராட்டுதலுக்குரியதாகும். சிவாகமங்களுக்கு உரை எழுதிய அறிஞர்களைப் பற்றி இனிக் காண்போம்.

## 1. சத்தியோஜோதி சிவாசாரியார் :

ஆகம உரையாசிரியர்களுள் காலத்தால் முற்பட்டவர் சத்தியோஜோதி சிவாசாரியாரே ஆவார். இவர் உக்கிரஜோதி சிவாசாரியார் என்பவரின் மாணவர். மதங்காகமப் பேருரையிலும் மிருகேந்திராகம உரையிலும் சத்தியோ ஜோதி கேடகபாலர் என்றும் கேடக நந்தனர் என்றும் குறிக்கப் பெறுகிறார். எனவே இவர் கேடகர் என்பவரின் பிள்ளையாக இருக்கக்கூடும் என ஊகிக்கலாம். பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்தவரும் மிகவும் புகழ்பெற்ற காஷ்மீர அறிஞருமான அபிநவ குப்தர் என்பவர் தமது தந்திரலோக விருத்தி எனும் நூலில் இவரைப் பற்றிக் குறிப்பிடுகிறார். ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்தவராகக் கருதப் பெறும் சோமானந்தர் என்பவரால் இயற்றப் பெற்ற சிவதிருஷ்டி என்னும் நூலிலும் சத்தியோ ஜோதியாரைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இக்காரணங்களால் இவர்

பெரும்பாலும் எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவர் எனக் கருதலாம்.

இவர் ரௌரவம் எனும் சிவாகமத்திற்கு எழுதியுள்ள உரை மிகவும் புகழ் பெற்றதாகும். இவரது ரௌரவாகம உரைக்கு ஸூவிருத்தி என்றும் ஸத்விருத்தி என்றும் பெயருண்டு. இவர் சுவாயம்புவம் எனும் ஆகமத்திற்கும் உரை எழுதியுள்ளார் என்பதைத் தத்துவத்திரய நிர்ணயம் எனும் நூலாலும் சோமானந்தரின் சிவதிருஷ்டி எனும் நூலாலும் தெரிந்துகொள்ளலாம்.

சத்திய ஜோதியார், மேற்கண்ட உரை நூல்களை மட்டுமன்றி மேலும் பல நூல்களையும் வரைந்துள்ளார். தத்துவத் திரய நிர்ணயம், தத்துவ சங்கிரகம், போக காரிகை, மோக்ஷ காரிகை, பரமோக்ஷ நிராச காரிகை, நரேசுவர பரீக்ஷை, மந்திர வார்த்திகம்—இவை அனைத்தும் இவரால் எழுதப் பட்டவையே. இந்நூல்கள் அனைத்தும் சித்தாந்த சைவத்தை விளக்குபவையே.

## 2. பட்ட நாராயண கண்டர் :

வித்தியா கண்டர் என்பவரின் புதல்வரான பட்ட நாராயண கண்டர் காமிகாகமத்தின் உபாகமமான மிருகேந்திராகமத்தின் நான்கு பாதங்களுக்கும் சிறந்த உரை எழுதியுள்ளார். சத்தியோ ஜோதி சிவாசாரியாரால் இயற்றப்பட்ட தத்துவ சங்கிரகம் என்னும் நூலுக்கு 'பிருஹத் டீகை' எனும் உரையையும் எழுதியுள்ளார். தோத்திராவளி எனப்படும் நூலும் இவரால் இயற்றப்பட்டதே. 'ஸ்தவ சிந்தாமணி', நூலின் ஆசிரியரான பட்ட நாராயண கண்டர், இவரினும் வேறானவர் என்பது குறிப்பிடத் தக்கது. ஆகம உரையாசிரியரான பட்ட நாராயண கண்டர் தமது உரையில் ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த

வரான உத்பலதேவரின் ஈசுவரசித்தி எனும் நூலிலிருந்து மேற்கோள் காட்டுகின்றார். எனவே இவர் பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

## 3. பட்ட ராமகண்டர் :

பட்டராமகண்டர் என்ற பெயரில் இரண்டு அறிஞர்கள் இருந்திருக்கின்றனர். பட்ட நாராயண கண்டரின் தந்தையான வித்தியா கண்டரின் ஆசிரியராக இருந்தவர், காலத்தால் முற்பட்ட பட்டராம கண்டர். இரத்தினத்திரயம் என்னும் நூலால், இவர் ஷத்விருத்தி என்ற பேருரை ஒன்று எழுதியிருப்பதாக அறிய முடிகிறது. ஆனால் இந்த உரை எந்த ஆகமத்திற்கு எழுதப்பட்டது என்பதை நிர்ணயிக்க முடியவில்லை.

ஆகம உரையாசிரியர் என்ற வரிசையில் நாம் காணும் பட்டராமகண்டர் காலத்தால் பிற்பட்டவர். இவர் பட்ட நாராயண கண்டரின் புதல்வர். சிவாகமம் என்ற பெரிய ஆலயத்தில் பட்டராம கண்டர் தன்னிகரற்ற சிவாசாரியராக விளங்குகின்றார் எனக் கூறலாம். இவரைப் போன்று சிவாகம ஞானபாதப் பகுதிகளின் நுணுக்கங்களை விளக்கித் தெளிவு படுத்திய அறிஞர் யாரும் இல்லை என உறுதியாகக் கூறலாம். இவரது உரை விளக்கங்களில் இடம்பெறாத புராணங்களோ ஆகமங்களோ உபநிடதங்களோ இல்லை. தத்துவச் செறிவு நிறைந்து காணும் தரமான உரை இவரது உரை.

ஆகமத்தில் ஒரு படலத்திற்கும் அடுத்து வரும் படலத்திற்கும் இடையே உள்ள ஐந்து விதமான சம்பந்தங்களையும் தெரியப்படுத்தி விட்டு மேற்கொண்டு உரை வரைதல் என்ற போக்கினைப் பட்ட

நாராயண கண்டர், பட்டராமகண்டர் என்னும் இருவரிடமும் காணலாம். தந்தையின் அடிச்சுவட்டில் மகன் சென்றதில் வியப்பொன்றுமில்லை. தந்திர வத்து, சூத்திரம், வாக்கியம், பிரகரணம், படலம் என்பவையே ஐந்து விதமான சம்பந்தங்கள்.

பகவத் கீதைக்கு ஸர்வதோபத்திரம் என்ற பெயரில் ஒருவர் உரை எழுதியுள்ளார். அவர் ராஜானக ராமகண்டர் என்பவர். அவரே 'ஸ்பந்தகாரிக டீகை' என்பதையும் எழுதியுள்ளார். இன்றைய ஆராய்ச்சியாளர் சிலர் ராஜானக ராம கண்டரும் பட்டராம கண்டரும் ஒருவரே எனக் கருதுகின்றனர். ஆனால், அவ்வாறு கருதுவது தவறு. ராஜானக ராம கண்டர் சிவாத்துவைதக் கொள்கை உடையவர்; பட்டராம கண்டரோ சைவசித்தாந்தத்தைப் பரப்பியவர். இதுமட்டுமன்றி இருவரது உரைநடைப் போக்குகளும் பெருமளவிற்கு மாறுபட்டுக் காண்கின்றன.

ஆகம உரையாசிரியரான பட்டராம கண்டர் பதினோராம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்பதை அவருடைய நூல்களாலேயே தெரிந்து கொள்ளலாம். ராமகண்டரின் படைப்புக்கள் வருமாறு.

1. கிரணாகம விருத்தி, 2. மதங்க பாரமேசுவர விருத்தி, 3. சார்த திரிசதி காலோத்தர விருத்தி, 4. மோக்ஷ காரிகை விருத்தி, 5. பரமோக்ஷ நிராச காரிகை விருத்தி, 6. நரேசுவர பரீக்ஷைப் பிரகாசம், 7. நாத காரிகை, 8. ஜாதி நிர்ணய பூர்வக ஆலயப் பிரவேச விதி, 9 வியோம வியாபிஸ்தவம், 10. மந்திர வார்த்திக டீகை, 11. ரௌரவ விருத்தி டீகை, 12. ஆகம விவேகம்.

## 4. அகோர சிவாசாரியார் :

அகோர சிவாசாரியாரின் பெயரைக் கேள்விப் படாத ஆதி சைவர் இருக்க முடியாது. நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு சிவாசாரியர்க்கு ஒரே ஒரு சிறந்த கையேடாக விளங்குவது அகோர சிவாசாரியாரின் பத்ததியே.

ஆதிசைவ மரபில் கௌண்டின்ய கோத்திரத்தில் பிறந்த அகோர சிவாசாரியாரின் இயற்பெயர், பரமேசுவரன் என்பதாகும். அகோர சிவம் என்பது தீக்ஷைக்குப் பிறகு ஏற்பட்ட பெயர். சர்வாத்ம சம்பு சிவாசாரியார் என்பவரிடம் மாணவராக இருந்து வேதங்களையும் ஆகமங்களையும் தருக்க மீமாம்ச சாத்திரங்களையும் புராண இதிகாசங்களை யும் முறையாகப் பயின்றவர் இவர். தூர்வாச முனிவர் என்பவர் சிதம்பரத்தில் இவருக்கு ஆசாரியா பிஷேகம் செய்து வைத்தார். சிதம்பரஸாரம் என்னும் நூலில் இவரது வாழ்க்கை வரலாறு சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

'லட்சத் துவய அத்தியாபகர்' என்று இவருக்கு ஒரு சிறப்புப் பட்டம் உண்டு. இரண்டு லட்சம் சீடர்களுக்கு ஆசிரியர் என்பது இதன் பொருள். இமயம் முதல் குமரி வரை இவரது செல்வாக்கிற்கு உட்படாத பகுதி அந்தக் காலத்தில் இல்லை என ஆன்றோர் கூறுகின்றனர். சிலர் 'இரண்டு லட்சம் கிரந்தங்களுக்கு (நூல்களுக்கு) ஆசிரியர்' என இவரது சிறப்புப் பெயருக்குப் பொருள் கூறுவர். முன்னைய பொருளே ஏற்றம் உடையது. இவரது மஹோற்சவ பத்ததி என்னும் நூலைக் கொண்டு இவர் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என உறுதி செய்ய முடிகிறது.

இவரது மஹோற்சவ பத்ததி, பவித்ரோற்சவ விதி, சிவலிங்கப் பிரதிட்டாவிதி, தீக்ஷாவிதி முதலான பல நூல்களும் 'கிரியாக்கிரம த்யோதிகை' என்ற பொதுப்பெயரால் வழங்கப்படுகின்றன. இவரது நூல்கள் வருமாறு:

1. கிரியாக் கிரம த்யோதிகை, 2. சர்வ ஞானோத்தர விருத்தி, 3. கிரணாகம விருத்தி, 4. மிருகேந்திர விருத்தி தீபிகை, 5. சர்வ வித்தியேசினி, 6. தத்துவப் பிரகாசிக விருத்தி, 7. தத்துவ சங்கிரக லகு டீகை, 8. தத்துவத் திரய நிர்ணய விருத்தி, 9. இரத்தினத் திரய உல்லேகினி, 10. போக காரிகை வியாக்யை, 11. நாத காரிகை வியாக்யை, 12. ஆச்சரிய சாரம். 13. பாஷண்ட அபஜயம், 14. பக்தப் பிரகாசம், 15. நாட்டிய அப்யுதயம் 16. சிவ பஞ்சாவரண தோத்திரம்.

## 5. உமாபதி சிவாசாரியார் :

சந்தான ஆசாரிய பரம்பரையில் நான்காமவராகக் கருதப் பெறும் உமாபதி சிவாசாரியார் ஆகம உரையாசிரியர்களின் வரிசையில் தனியானதொரு சிறப்பிடத்தை பெறுகின்றார். இதுவரை நாம் பார்த்த ஆசிரியர்களுள் அகோரசிவம் தவிர்த்தஏனைய மூவரும் காஷ்மிர நாட்டைச் சார்ந்தவர்கள். அகோரசிவம் தமிழ் நாட்டைச் சார்ந்தவரே ஆயினும் அவரது தமிழ்ப் படைப்பு என ஒன்றையும் காண முடியாது. உமாபதி சிவமோ வடமொழி, தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் நூல்கள் பலவற்றை எழுதியுள்ளார்.

சிதம்பரசாரம் என்னும் நூலிலும், சிவானந்த தீக்ஷிதரால் இயற்றப் பெற்ற ராஜேந்திரபுர மகாத்மியம் என்னும் நூலிலும், சுவாமிநாத தீக்ஷிதரால் இயற்றப் பட்ட சந்தானாசாரிய புராணம் என்னும் நூலிலும், உமாபதி சிவாச்சாரியாரின் வரலாறு கூறப்பெற்றுள்ளது.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர் இவர்.

இவரது சதரத்தின சங்கிரகம் என்னும் நூல் சிவாகமங்கள் பலவற்றின் ஞானபாத சூத்திரங்களின் தொகுப்பாக உள்ளது. இவர் பாரமேசுவரம் எனும் ஆகமத்தின் உபாகமமான பௌஷ்கராகமத்திற்குவிரிவான உரை எழுதியுள்ளார். பிரம்ம சூத்திரத்திற்கு ஸ்ரீ கண்டாசாரியார் எழுதிய உரையின் செல்வாக்கை இவரது பௌஷ்கராகம உரையில்தெளிவாகக் காணலாம். சைவ சித்தாந்த உலகிற்குக் கிடைத்துள்ள மிகப் பெரிய சொத்து என்று பௌஷ்கராகம உரையைக் குறிப்பிடலாம். இவரது வடமொழிப் படைப்புகள் வருமாறு :

1. குஞ்சிதாங்கிரிஸ்தவம்
2. நடராஜ த்வனிமந்த்ர ஸ்தவம்
3. யந்திர விதான டீகை
4. வாயு ஸம்ஹிதை விருத்தி
5. ஸ்ரீருத்திர விருத்தி
6. பௌஷ்கராகம விருத்தி

இவர் தமிழில் எழுதியுள்ள நூல்கள் :

1. சிவப்பிரகாசம்
2. திருவருட்பயன்
3. வினாவெண்பா
4. போற்றிப்பஃறொடை
5. நெஞ்சுவிடு தூது
6. கொடிக்கவி
7. உண்மை நெறி விளக்கம்
8. சங்கற்ப நிராகரணம்
9. கோயிற் புராணம்

## 6. ஞானப்பிரகாசர்

யாழ்ப்பாணம் சாலீவாடீசுவர (திருநெல்வேலி) நகரைச் சேர்ந்த ஞானப்பிரகாசர், திருப்புகலூர் பெரிய அண்ணாசாமிக் குருக்கள் என்பவரிடம் தீக்ஷை பெற்றவர். வடமொழி தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்த இவர் உமாபதி சிவத்தைப் போன்றே பௌஷ்கராகமத்திற்கு உரை எழுதியுள்ளார். சத்தியோ ஜோதி, நாராயண கண்டர், ராமகண்டர் முதலானோரின் நூல்களில் இவருக்குச் சிறந்த ஈடுபாடும் பயிற்சியும் உண்டு என்பதை இவரது உரையால் தெரிந்து கொள்ளலாம். சிவாக்கிர யோகிகளைப் போன்றே இவரும் சிவஞான போதத்திற்கு வடமொழியில் உரை எழுதியுள்ளார். சிவஞான சித்தியார் எனும் நூலுக்கும் இவர் உரைவரைந்துள்ளார். பிரமாண தீபிகை, பிரசாத தீபிகை, அஞ்ஞான விவேசனம், சித்தாந்த சிகாமணி, சிவயோக சாரம், சிவயோக ரத்தினம், சிவசமாதி மகாத்மிய சங்கிரகம் முதலான நூல்களை இவர் இயற்றியுள்ளார். இவரது காலத்தைக் குறித்து உறுதியாக ஏதும் சொல்ல இயலவில்லை. சிவாக்கிர யோகிகள், மறைஞான தேசிகர் முதலானோர்க்குப் பிற்பட்டுப் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராக இருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

இவரது தமிழ்நடையைக் காட்டிலும் வடமொழி நடை தெளிவாகவும் கருத்து நிறைந்ததாகவும் விளங்குகிறது.

## 7. வாதுளாகம உரையாசிரியர்

வாதுளாகமத்திற்குரிய உபாகமமான வாதுள சுத்தாக்கியம் என்பதற்குத் தெளிவானதும்விளக்கமானதுமான உரை ஒன்று வடமொழியில் உள்ளது. ஆயினும் மிகச் சிறப்பாக விளங்கும் இந்தவிளக்கவுரையை எழுதி

யவர் இன்னார் எனத் தெரியவில்லை. பெயர் பொறித்து விட்டுச் செயலைச் செய்யாமலேயே பேரெடுக்கும் இவ்வுலகில் சிறப்பான முறையில் செயலைச் செய்துவிட்டுப் பெயரைக் குறிக்காமல் சென்று விட்ட அவரை நினைக்கும்போது நெஞ்சம் நைகின்றது. இவரது உரையின் சிறப்பை உணர்வதற்கு ஓர் எடுத்துக்காட்டு இங்கே காணலாம்.

''நானாவிதமான ரத்தினங்களால் பிரகாசிக்கும் கைலை மலை என்பதாவது : விஷ்ணு முதலான ஆடவர்குல ரத்தினங்களாலும், இந்திரை முதலான பெண்டிர்குல ரத்தினங்களாலும், வசிட்டர் முதலான முனி ரத்தினங்களாலும் இந்திரர் முதலான தேவ ரத்தினங்களாலும், தும்புரு, நாரதர் முதலான காயக ரத்தினங்களாலும் (காயகர்—கீதம் இசைப்போர்), அரம்பை முதலான நாட்டிய ரத்தினங்களாலும், பரதாசாரியார் முதலான வாதக ரத்தினங்களாலும் (வாதகர்—இசைக் கருவி வாசிப்போர்) நந்தி முதலான கண ரத்தினங்களாலும், சூரியன் முதலான ஒளி ரத்தினங்களாலும், பினாகம் முதலான ஆயுத ரத்தினங்களாலும் சூழப்பட்டு பிரகாசிக்கும் மலை.''

இசைக்கருவி வாசிப்பதில் பரதர் சிறந்தவரென இவரது உரையால்தான் உணர்கிறோம். புதிய புதிய கருத்துக்கள் இவரது விளக்கவுரையில் ஒளிவீசிக் கொண்டே இருக்கும்.

காலத்தின் சூழ்நிலை அறிந்து ஆகமங்களுக்கு விளக்கவுரை தந்த அனைவருக்கும் சைவ உலகம் பெரிதும் நன்றிக்கடன் பட்டுள்ளது.

# 6. பொதுவும் சிறப்பும்

முற்றறிவுடைய ஞானப் பெருமக்களும் சிவாகம நெறி. எனப்படும் ஞான நெறியை அனுட்டிப்பதில் ஆர்வம் கொண்டு, அதனை அனுட்டிப்பதற்கு வேண்டிய ஆற்றலை இறைவனிடம் வேண்டிப் பெற்றனர்.

''நாவேறு பாமணத்த பாதார மேநினைத்து
நாலாறு நாலுபற்று வகையான
நாலாரும் ஆகமத்தின் நூலாய ஞானமுத்தி
நாடோறும் நானுரைத்த நெறியாக''

என்று அருணகிரிப் பெருமான் அறுமுகப் பெருமானிடம் வேண்டுகின்றார். அவரே வேறொரு திருப்புகழில் ''வேதங்களின் நெறிகளை எடுத்துக் கூறும் சைவசித்தாந்த நூல்கள் தவிர உலக சம்பந்தமான வேறு நூல்களைப் பயில மாட்டேன்'' என்று கூறுவதும் கவனிக்கத் தக்கது.

''சுருதி வழிமொழி சிவகலை அலதினி
உலக கலைகளும் அலம்; அலம்''.

—திருப்புகழ்.

'ஆராதனர் ஆடம்பரம்' என்று கிரியை நெறிகளை மறுத்து ஒதுக்கும் அருணகிரிப் பெருமான் சிவாகமங்களில் கூறப்பெறும் ஞான மார்க்கத்தைக் கடைப் பிடிக்க ஆர்வம் காட்டுவதை உணரலாம். அருணகிரிப் பெருமானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் சென்ற பாம்பன் குமரகுருதாச சுவாமிகளும் சிவாகம ஞான மார்க்கத்தில் தீவிரமான ஈடுபாடு கொண்டிருந்தவரே.

வேதங்களை மட்டுமே பிரமாண நூல்களாகக் கொண்டு சிவாகமங்களை ஒதுக்கித் தள்ள முற்படும் உள்ளம் உடையாரை நினைந்து தமது திருப்பா என்னும் நூலில் பாம்பன் சுவாமிகள் பாடுகின்றார்:

''சீரிய திருவிற் கோலவம் பதிகத் தேயிரு மூன்றினும் ஒற்றி
ஊரினப் பதிகம் பத்தினும் பொழிலேர் ஓங்குகோ கரணவா றினுமா
ஆரியன் ஞானப் பாலறா வாயன் ஆகமச் சிறப் பெடுத் ததிர்த்த
காரியந் தேரா துளறுநர்க் கியாது கழறுவேன் என்குரு மணியே''.

''திருவிடை மருதூர்ப் பதிகம்நான் கதிலே தேசிக நாவரசுகளும்
மருவடர் கானப் பேர்திரு வாரூர் மண்டளி கயிலை கட்குரிய
துரிசறு பதிகம் எட்டொரா றெட்டிற் சுந்தரரும்பதி நூலைப்
பொருளுற விதந்து சொனதறி யார்க்கென் புகலு வேன் என் குருமணியே.''

சமயாசாரியப் பெருமக்களுள் முதல் மூவரும் சிவாகமச் சிறப்பை எவ்வாறு உணர்த்தியிருக்கின்றனர் என்பதை இப்பாடல்களில் சுவாமிகள் தெளிவுபடுத்துகின்றார். ''ஆகமமாகி நின் றண்ணிப்பான் தாள் வாழ்க'' என்று சிவபெருமானின் ஆகமவடிவைப் பாடும் மாணிக்கவாசக சுவாமிகள் ''மன்னுமா மலை மகேந்திரம் அதனிற் சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்'' என்று இறைவன் ஆகமங்களைத் தோற்றுவித்த நிகழ்ச்சியையும் பாடுகின்றார். மகேந்திரம் என்பது பூலோகத்தில் உள்ள எந்த மலையையும் குறிக்கவில்லை. அது சதாசிவ தத்துவத்தில் உள்ள அப்பிராக்கிருத கைலாய மலையையே குறிக்கும். பிரகிருதிக்கு அப்பாற்பட்டது

அப்பிராக்கிருதம். இறைவன் சதாசிவ தத்துவத்தில் தான் சொற்பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கின்றாரே தவிர பிருதிவி தத்துவத்தில் இல்லை. சிவதத்துவங்கள் ஐந்தனுள் மூன்றாவது தத்துவம் சதாசிவ தத்துவம் எனப்படும்.

வேதம், ஆகமம் எனப்படும் இரண்டும் முதல்வ னால் அருளப்பெற்ற மூல இலக்கியங்கள் என்பதை உணர்ந்து இவற்றைப் பாதுகாக்க வேண்டும். இவை இரண்டும் ஒரே பரம் பொருளின் திருவாக்குகள் என்ற காரணத்தால் இரண்டிற்கும் பேதம் கிடையாது.

''முதலாகும் வேத முழுதா கமமாகப்
பதியான வீசன் பகர்ந்த திரண்டும்''
வேதமொ டாகமம் மெய்யாம் இறைவனூல்
ஓதும் சிறப்பும் பொதுவுமென் றுள்ளன
நாதன் உரையிவை நாடில் இரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே''

—இவை திருமூலரின் கூற்றுகள். வேதம் ஆகமம் என்ற இரண்டில் வேதம் பொது; ஆகமம் சிறப்பு. இரண்டந்தம் என்பது வேதாந்தத்தையும் சித்தாந் தத்தையும் குறிக்கும். வேதாந்தம்-வேதத்தின் இறுதிப் பகுதியாகிய ஞானகாண்டம். சித்தாந்தம்—ஆகமத்தின் இறுதிப் பகுதியாகிய ஞானபாதம். உண்மை உணராதவர் இவ்விரண்டும் வேறுபட்டவை என்பர்- ஆனால், உண்மை உணர்ந்த பெரியோர்க்கு இரண் டும் அபேதமாகவே தோன்றும். அபேதமாக உள்ள காரணத்தால் சாத்திரங்கள் சில வேதத்தையே ஆகமம் என்றும் ஆகமத்தையே வேதம் என்றும் குறித்துள்ளன. யோகசூத்திரக் காரரான பதஞ் சலியார் வேதம் என்ற பொருளில் ஆகமம் என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளார். ஞானாமிர்தம் இயற்றிய வாகீச முனிவர் ஆகமம் என்ற பொருளில்

வேதம் என்ற சொல்லை ஆண்டுள்ளார். இரண்டுமே பரமனின திருவாக்கிலிருந்து வந்தவை ஆதலால் இரண்டும் ஆகமம் எனவும் இரண்டுமே ஞானத்தை விளக்கம் செய்கின்ற காரணத்தால் இரண்டுமே வேதம் எனவும் வழங்கப்படுகின்றன என்று 'வேதத்தைக் குறித்த வியாசம்' என்ற நூலில் பாம்பன் சுவாமிகள் கூறுகின்றார்.

வேத முறைப்படி வளர்க்கும் அக்கினிக்கும் சிவாகம முறைப்படி வளர்க்கும் அக்கினிக்கும் வேறுபாடு உள்ளதாலும், யாகபூஜை, யாககுண்டங்கள், மண்டலங்கள் முதலியவற்றைப் பொறுத்த வரையிலும் வேதங்களுக்கும் சிவாகமங்களுக்கும் இடையே வித்தியாசங்கள் இருப்பதாலும் வேதநெறியும் ஆகம நெறியும் முரண்பட்டவையே என்பர் சிலர்.

> 'இரண்டு முகங்கள், ஆறுகண்கள், இரண்டு மூக்குகள் ஏழு நாக்குகள், ஜடை, யக்ஞோபவீதம் (பூணூல்), முஞ்சிப்புல்லால் ஆன அரைஞாண், ஏழு கைகள் மூன்று பாதங்கள், ஆட்டு வாகனம்—''

ஆகிய இவற்றை உடையவராக அக்கினி பகவான் வேதங்களில் சொல்லப்படுகிறார்.

> ''செவ்வண்ணம், ஐந்து முகங்கள், பதினைந்து கண்கள், ஏழு நாக்குகள், பத்துக் கரங்கள், சிவப்பு ஆடை, ஆபரணங்கள், தாமரை மலர் இருக்கை, ரிஷப வாகனம்''

ஆகிய இவற்றை உடையவராக அக்கினி பகவான் ஆகமங்களில் சொல்லப்படுகிறார். ஹிரண்யை, கனகை, ரக்தை, கிருஷ்ணை, சுப்ரபை, அதிரக்தை, பஹுரூபை என்பன அக்கினியின் ஏழு நாக்குகள். வேதாக்கினிக்கு மத்தியில் ஒன்றும் நான்கு திக்குகளில் நான்கும் தென்கிழக்கில் ஒன்றும் வடகிழக்கில்

ஒன்றுமாக ஏழு நாக்குகளும் அமைந்திருக்கும். சைவாக்கினிக்கு மேன் முகத்தில் மூன்றும் கிழக்கு முதலான திசைகளை நோக்கும் நான்கு முகங்களில் நான்குகாக ஏழு நாக்குகளும் அமைந்திருக்கும்.

வேதாக்கினியில் ஆகம மந்திரங்களைப் பயன்படுத்தக்கூடாது. ஆனால், சைவாக்கினியில் வேத மந்திரங்களைப் பயன்படுத்தலாம்.

கிரியைகளைப் பொறுத்த வரையில் மேற்கூறப்பட்டவாறு வேதங்களுக்கும் ஆகமங்களுக்கும் இடையே சில பேதங்கள் காணப்படுவது உண்மையே. கிரியைகளின் பயன் ஞானப்பேறு. கிரியைகள் நேரடியாக முக்தியைத் தரமாட்டா. கிரியை நெறி ஞானத்தைக் கொடுக்க ஞானப் பேற்றாலேயே முக்திப்பேறு. ஞானபாகத்தைப் பொறுத்த வரையில் வேதாகமங்களுக்கிடையே முரண்பாடு இல்லை என்பது முன்னரேயே கூறப்பட்டது. ஆகையால் தான் அபேதத்தைக் காட்ட வந்த திருமூலர் இவ்விரண்டின் ஞானபாகங்களை மட்டும் சுட்டிக் காட்டினார்.

வேதத்தின் கரும காண்டம் சிவாகமத்தின் சரியை, கிரியை எனும் பாதங்களாகவும் வேதத்தின் ஞான காண்டம் சிவாகமத்தின் யோகம் ஞானம் எனும் பாதங்களாகவும் விரிந்துள்ளன. பிரம்மப் பொருள், பிரணவம், திருவைந்தெழுத்து, பிராசாதம் முதலான மந்திர விளக்கங்கள், பதி பசு பாச விளக்கம், லிங்க வழிபாடு, திருநீறு அணிதல், ருத்திராக்கம் அணிதல்—இவை முதலான கருத்துகளெல்லாம் வேதங்களிலும் ஆகமங்களிலும் சமமாகக் காணப்படுகின்றன என்று கூறி இவற்றின் பேதமின்மையைத் தமது பிரம்ம சூத்திர உரையில் விளக்குகின்றார் ஸ்ரீ கண்டர். ஸ்ரீகண்டரின் உரைக்குச் சிவார்க்க மணி தீபிகை எனும்

விளக்கவுரை எழுதிய *அப்பைய தீக்ஷிதர் வேதத்திற்கும் ஆகமத்திற்கும் பொருள் ஒன்றே என்பதை விரிவாக விளக்கிக் கூறுகின்றார். கருமம், உபாசனை, யோகம் என்ற நெறியில் சென்று ஞானத்தில் முடிகின்றது வேதம்; சரியை, கிரியை, யோகம் என்ற நெறியில் சென்று ஞானத்தில் முடிகின்றது ஆகமம்.

வேதமும் சிவாகமும் ஒன்றே எனில் இவ்விரண்டினுள் ஏதாவது ஒன்றே போதுமே, இரண்டும் எதற்கு எனும் கேள்வி எழலாம். சூரியபட்டர் தமது **சைவ சித்தாந்த பரிபாஷை** எனும் நூலில் வேதம் ஆகமம் என்ற இரண்டும் எதற்காக உள்ளன என்பதை விளக்குகின்றார் : "வேதம், ஒன்றோடொன்று மாறுபட்ட பல சமயங்களைச் சார்ந்தவர்களின் ஐயத்துக்கு இடமாக இருப்பதால் வேதங்களின் பொருள்களை விளக்குவதற்காகத் தோன்றியவையே சிவாகமங்கள்." வேதம் சூத்திரம் எனில் ஆகமம் பாடியம் எனக் கூறலாம். பாடியம் என்பதற்கு மூன்று இலக்கணங்கள் உண்டு. முதலாவதாக, அது மூல நூலின் கருத்தை விளக்கவேண்டும்; இரண்டாவதாக, மூல நூலில் இலைமறை காயாகச் சொல்லப்பட்ட கருத்து

---

*ஒரு நூலுக்கு உரை எழுதப்பட்டால் தேவை கருதி அந்த உரைக்கும் மற்றோர் உரை எழுதிக் காலந்தோறும் வளர்ச்சியைக் கொடுப்பது வடமொழி மரபு. பிரம்ம சூத்திரத்திற்கு ஆதிசங்கரர் எழுதிய உரையை விளக்கி வாசஸ்பதி மிசிரர் என்பவர் பாமதி என்னும் உரை எழுதினார்; பாமதியை விளக்கி அமலானந்தர் என்பவர் வேதாந்த கல்பதரு என்னும் உரை எழுதினார்; வேதாந்த கல்பதருவை விளக்கி அப்பைய தீக்ஷிதர் வேதாந்த பரிமளம் எனும் உரையை எழுதினார். 'நல்ல காலமாக' உரைவளர்ச்சி அதனுடன் நின்று விட்டது.

களைத் தெளிவாக்கிக் கூறவேண்டும். மூன்றாவதாக, மூல நூலில் சொல்லப்படாத கருத்துகளை மூல நூலுக்கு முரணாகாதவாறு சேர்த்துக் கூறவேண்டும். இவற்றை முறையே உக்தம், துருக்தம், அனுக்தம் என்பர் வடநூலார். வேதத்திற்குப் பேருரையாக அமைந்த சிவாகமங்கள் வேதத்தில் கூறப்பட்ட ஆன்மா, பிரம்மம், முதலானவற்றை விளக்குகின்றன. வேதத்தில் இலைமறை காய்மறையாகக் கூறப்பட்ட லிங்க வழிபாடு, தீக்ஷை முதலானவற்றை நன்றாக விளக்கித் தெளிவுபடுத்துகின்றன; வேதத்தில் கூறப்படாத ஆலய அமைப்பு, பிரதிமா லக்ஷணம்' சிவாக்கினி முதலானவற்றை வேதநெறிக்கு முரணாகாதவாறு கூறுகின்றன.

சூரியபட்டர் கூறுகின்றவாறு வேதம் அனைவர்க்கும் பொதுவாக மறைபொருளைக் கூறுவதால் பொது என்றும் ஆகமம் தீக்ஷை பெற்றோருக்கு மட்டும் அப் பொருளை விளக்கிக் கூறுவதால் சிறப்பு என்றும் கருதப் பெறும்.

''வேதாந்த ஞானம் இல்லையாயின் சித்தாந்த சாத்திரமாகிய ஆகமத்தைப் பயின்றுணரும் தகுதி உண்டாவதில்லை; எதனாலெனின், சித்தாந்தம் என்பது வேதாந்தத்தின் சாரமாக உள்ளதால்.'' இவ்வாறு சூரியபட்டர் கூறுவதால் வேதம் ஆகமம் எனும் இரண்டின் பயிற்சியே முழுமையைக் கொடுக்கும் என்பது புலனாகின்றது.

## சிவாகமங்களின் மேன்மை :

எளிமையான உபாயங்களால் ஆன்மாக்களுக்கு முத்தியைக் கொடுக்கின்றமையால் சைவ சாத்திரங்களான ஆகமங்களே கைக்கொள்ளத்தக்கவை என்று

சத்தியோஜோதி சிவாசாரியார் தமது மோக்ஷகாரிகை என்னும் நூலில் கூறுகிறார். ''சிவகாமம் பயனற்றதாகவாவது, மற்ற மதங்களோடு சமமான பலனை உடையதாகவாவது அல்லது மற்ற மதங்களோடு விரோதப்படும் பலனை உடையதாகவாவது இருக்கவில்லை; பசு பாசம் முதலியவற்றின் விசேடத்தை அறிவிக்கும் சைவ சாத்திரம், பரபக்கங்களால் (பூர்வ பக்ஷங்களால்) மறுக்கப்பட முடியாதவை. இந்த ஆகம சாத்திரங்களில் ஏனைய மதங்கள் நீக்கப்படவில்லை. ஆனால், பாசரூபங்களான அந்த மதங்களில் உள்ள கருத்துகளை 'இது இவ்வாறன்று' என்று ஞானத்தாலும் அளவை முறையாலும் மறுப்பதற்காகவே இவை தோன்றின. ஏனைய மதங்கள் பொய்யானவை என்று இவை ஒதுக்குவதில்லை''—இவ்வாறு மோக்ஷகாரிகையில் சிவாகமங்களின் உயர்தனிச் சிறப்பு உரைக்கப்படுகிறது.

மற்ற சாத்திரங்கள் நிரூபிக்கத் தவறிவிட்ட தத்துவங்களை ஆகமங்கள் நிரூபிக்கின்றன. வேதவழிப்பட்ட சாத்திரங்கள் பெரும்பாலும் பிருதிவி தத்துவம் முதல் மஹத் எனப்படும் பிரகிருதி தத்துவம் வரை உள்ள இருபத்து நான்கு தத்துவங்களையே கூறும்; சிறுபான்மை நூல்கள் இவற்றிற்கு மேற்பட்ட வித்தியா தத்துவம் ஏழனையும் கூறும். இவற்றுக்கும் மேற்பட்ட சிவதத்துவம் ஐந்தைப் பற்றியும் பிற சாத்திரங்கள் நினைத்துக்கூடப் பார்ப்பதில்லை. சிவாகமங்கள் மட்டுமே பூமி முதல் நாதம் வரை உள்ள முப்பத்தாறு தத்துவங்களைப் பற்றி விரிவாக ஆராய்ந்து கூறுகின்றன. காலாக்கினி புவனம் முதல் அனாசிருத புவனம் வரை உள்ள இருநூற்று இருபத்து நான்கு புவனங்களைப் பற்றியும் சிவாகமங்கள் மட்டுமே கூறுகின்றன. ஆறு விதமான அத்துவாக்களைப் பற்றிய

விளக்கத்தையும் ஆகமங்களில் மட்டுமே காணலாம். மற்ற நூல்களில் இல்லாதனவற்றைச் சிவாகமங்களில் காண்க; சிவாகமங்களில் இல்லாதனவற்றை எந்த நூலிலும் காணமுடியாது'' என்று வித்தியாரணிய மாமுனிவர் தமது சூதசம்மிதை உரையில் கூறுவது சிவாகமங்களின் பல்துறை விளக்கத்தை நன்கு பிரதிபலிக்கின்றது.

''வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கும் நூல் இவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல் அனாதியமலன்தருநூல் இரண்டும்
ஆரணநூல் பொது; சைவம் அருஞ்சிறப்பு நூலாம்
நீதியினால் உலகர்க்கும் சத்திநிபா தர்க்கும்
நிகழ்த்தியது நீண்மறையின் ஒழிபொருள்வே தாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கும் நூல்சைவம் பிறநூல்
திகழ்பூர்வம்; சிவாகமங்கள் சித்தாந்த மாகும்''

சிவஞான சித்தியார் : 267

—o—

# 7. சிவாகமங்களின் ஞானபாதமும் சைவ சித்தாந்தமும்

ஒவ்வொரு சிவாகமமும் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படும் நான்கு பகுதிகளை (பாதங்களை) உடையதாக விளங்கும் என முன்னர்க் கண்டோம். இந்த நான்கு பாதங்களுள் சரியை, கிரியை எனப்படும் இரண்டு பகுதிகளில் சிவாகமங்களுள் கூறப்பட்டுள்ள செய்திகளைப் பற்றியே பொதுவாக இதுவரை தொகுத்துக் கூறப்பட்டது.

சிவாகமங்களில் அமைந்திருக்கும் யோகபாதம் உன்னதமான சிவயோக முறைகளை விளக்கிக் கூறுவது. பதஞ்ஜலி முனிவர் அருளிய யோகசூத்திரம் சிவாகமங்களை அடிப்படையாகக் கொண்டதே. எட்டு அங்கங்களை உடைய யோகநெறி, ஆறு அங்கங்களை உடைய யோகநெறி என இருவகைப்பட்ட யோக நெறிகளும் சிவாகமங்களில் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் அஷ்டாங்க யோக முறையையே பதஞ்ஜலி முனிவர் தமது நூலில் விளக்கிக் கூறுகிறார். நூற்றெட்டு உபநிடதங்களுள் அத்வயதாரகம் முதல் ஹம்ஸம் என்பது வரை உள்ள இருபது யோக உபநிடதங்களும் சிவாகமங்களின் அடிப்படையில் அமைந்தவையே.

மூல ஆகமங்களுள் சுப்பிரபேதம், கிரணம், மகுடம் எனப்படும் மூன்று சிவாகமங்களிலும் யோக பாதங்கள் அமைந்துள்ளன. இவற்றுள் கிரண ஆகமம் ஷடங்க யோக முறையைக் கூறுவது கவனிக்கத் தகுந்தது. இம்முறையைப் பின்பற்றியே யஜுர் வேதத்தைச் சார்ந்த அமிருதநாத உபநிடதம், தியானபிந்து உபநிடதம்,

ஸாம வேதத்தைச் சார்ந்த யோகசூடாமணி உபநிடதம் என்பவை ஆறங்க யோக முறையை விளக்கிக் கூறுகின்றன.

உபாகமங்களுள் மிருகேந்திர ஆகமம் யோகபாதச் சிறப்பை உடையதாகத் திகழ்கிறது.

சிவாகம யோகபாதங்களில் கூறப்பட்டுள்ள யோக முறைகளையும் யோக நுட்பங்களையும் தொகுத்து யாழ்ப்பாணம் ஞானப்பிரகாச சிவாசாரியார் **சிவயோக ரத்தினம், சிவயோகஸாரம்** எனப்படும் இரண்டு நூல்களை அருளியுள்ளார்.

தென்திசை நோக்கிக் குரவர்க்கும் குரவனாய், சிவயோக-சிவஞான குருவாய் எழுந்தருளி விளங்கும் தக்ஷிணா மூர்த்திப் பெருமானைச் சிவயோக நெறிக் குரிய ஹம்ஸ தேவராகத் தியானிக்கும் முறையை **மகுடாகமம்** பின்வருமாறு கூறுகிறது:

> ''நிர்மல ஸ்படிகாகாரம் திவ்யரூபம் அனௌபமம்
> மத்ய தேசே பரம் ஹம்ஸம் ஞானமுத்ரா
> ஸ்வரூபகம்'' 11 : 45.

> ''களங்கமற்ற படிகம் போன்ற வடிவினர்; ஒளி மயமான உருவினர்; உவமித்தற்கரிய நிலையினர்; தேக நடுவன் மேலான ஹம்ஸ தேவராக எழுந்தருளி இருப்பவர்; ஞான முத்திரையே தமது சொரூபமாகத் திகழ்பவர்.''

இத்தகைய ஹம்ஸ தேவரை வழிபடுவதாலேயே சிவாகம ஞானபாத நுட்பங்களை அனுபவ பூர்வமாக அறிய முடியும். இப்பெருமானை வணங்கி இனி ஞானபாதச் சிறப்பைக் காண்போம்.

சிவாகமங்களின் நான்கு பாதங்களுள் ஞான பாதமே மிகமிகச் சிறப்பும் தலைமைத் தன்மையும் வாய்ந்தது. சிவாகமங்களுக்குள்ளே சரியை, கிரியை, யோகம் எனப்படும் பகுதிகள் தம்முள் வேறுபட்டு அமைந்திருக்கலாம். ஆனால் ஞானபாதப் பகுதி வேறு பட்டு அமையாது. அதுவே அடிப்படையானது; முதன் மையானது. அதனால்தான் சிவாகமங்களே 'சிவ ஞானம்' என்னும் தனிச் சொல்லால் குறிக்கப்படும் சிறப்பான முறையைச் சிவாகம நூல்களில் காண் கிறோம்.

> "... பரஞானம் அபரஞானம் இரண்டும் சிவ ஞானம் எனப்படும். அவற்றுள் பரஞானத்தைப் போதிப்பது எல்லா அபர ஞானங்கட்கும் பொது வாதலின், ஈண்டுச் சிவஞானம் என்றது அவ்வபர ஞானமாகிய சிவாகமமேயாம்".

> "சிவஞானம் எனப் பொதுப்படக் கூறினும் தலை மைபற்றி ஞானபாதமே கொள்ளப்படும். ஞான பாதத்திற்குத் தலைமை 'கிரியையென மருவு மலை யாவும் ஞானம்
> கிடைத்தற்கு நிமித்தம் என்பதனானும் அறிக"

என மாதவச் சிவஞான முனிவர் தமது மாபாடியத் தில் கூறியுள்ளமை உணரத்தக்கது.

சரியை முதலியன பலதிறப்பட அமைவது பற்றி யும் ஞானபாதம் பலதிறப்பட்டு அமையாமை பற்றி யும் சிவஞான முனிவரே சீகண்ட முதல்வர் கூற்றாக நமக்கு விளக்கி அருள்கிறார்: "அங்ஙனம் ஆகமங்க ளெல்லாம் கேட்டு அருளிய நந்திபெருமான் சீகண்ட முதல்வரை வணங்கி நின்று, சிவாகமம் தோறும் சரியை

முதலிய நாற்பாதங்களும் சிறுபான்மை வேறு வேறாகக் கூறப்பட்டன. அவற்றுள் உண்மையாவது இது என்று அருளிச் செய்ய வேண்டும் என இரந்து விண்ணப்பம் செய்து வினாயவழிச் சீகண்ட முதல்வர் கருணை கூர்ந்து, ''நன்றே வினாயினாய்! அனந்த தேவர் எமக்கு அருளிச் செய்தவாறே கூறுகின்றோம். கேட்பாயாக'' என்றருளிக், ''கற்பம் தோறும் படைப்பு வேறுபாடும் கேட்போர் கருத்து வேறுபாடும் பற்றி அவற்றிற்கு இயையச் சரியை முதலிய மூன்று பாதங்களும் ஆகமங்களில் வெவ்வேறாகக் கூறப்பட்டன. ஆகலான், அவற்றுள், எவ்வாகமத்தின் வழி யார் தீக்கை பெற்றார், அவ்வாகமத்தின் வழி அவர் ஒழுகற்பாலர் இனி, ஞான பாதமாவது பொருள்தன்மை உணர்த்துவதாகலான் அது பலதிறப்படுதல் பொருந்தாமையின், அவையெல்லாம் தூலாருந்ததி முறைமைபற்றிக் கூறப்பட்டனவன்றி மாறுகோள் அல்ல என்பது...''

எனவே, சரியை முதலான மூன்று பாதக் கருத்துகள் ஒருவாறு மாறுபட்டு அமைந்தாலும் ஞானபாதக் கருத்து சிவாகமங்களில் சீருற ஒருநெறிப்பட்டே அமைந்து விளங்கும் என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும். மேலும் அமைந்துள்ள ஒரு சிறப்பும் இங்கே நோக்கத்தக்கது.

காமிகம் முதல் ஒவ்வொரு சிவாகமமும் சிவபெருமானுக்கு எந்த எந்த அங்கமாக அமைந்துள்ளது என்பதை முன்னரேயே கண்டோம். சிவாகமத் திருமேனி கொண்டுள்ள சிவபெருமானுக்கு நிவேதனப் பொருளாக அமைவது ஒவ்வொரு சிவாகமத்தின் ஞானபாதமே ஆகும்.

''ஸித்தாந்தேன நிவேதிதம்''

என்று கூறுகிறது காமிக ஆகமம் (1 : 101). 'ஞான பாதமாகிய சித்தாந்தமே பெருமானுக்கு நிவேதனப் பொருள்' என்பது இதன் கருத்து.

சிவாகமங்களின் நான்கு பாதங்களுள் ஞான பாதமே மிகமிகச் சிறப்பும் தலைமைத் தன்மையும் வாய்ந்தது. சிவாகமங்களுக்குள்ளே சரியை, கிரியை, யோகம் எனப்படும் பகுதிகள் தம்முள் வேறுபட்டு அமைந்திருக்கலாம். ஆனால் ஞானபாதப் பகுதி வேறு பட்டு அமையாது. அதுவே அடிப்படையானது; முதன் மையானது. அதனால்தான் சிவாகமங்களே 'சிவ ஞானம் என்னும் தனிச் சொல்லால் குறிக்கப்படும் சிறப்பான முறையைச் சிவாகம நூல்களில் காண் கிறோம்.

> ''... பரஞானம் அபரஞானம் இரண்டும் சிவ ஞானம் எனப்படும். அவற்றுள் பரஞானத்தைப் போதிப்பது எல்லா அபர ஞானங்கட்கும் பொது வாதலின், ஈண்டுச் சிவஞானம் என்றது அவ்வபர ஞானமாகிய சிவாகமமேயாம்''.

> ''சிவஞானம் எனப் பொதுப்படக் கூறினும் தலை மைபற்றி ஞானபாதமே கொள்ளப்படும். ஞான பாதத்திற்குத் தலைமை 'கிரியையென மருவு மலை யாவும் ஞானம்
> கிடைத்தற்கு நிமித்தம் என்பதனானும் அறிக''

என மாதவச் சிவஞான முனிவர் தமது மாபாடியத் தில் கூறியுள்ளமை உணரத்தக்கது.

சரியை முதலியன பலதிறப்பட அமைவது பற்றி யும் ஞானபாதம் பலதிறப்பட்டு அமையாமை பற்றி யும் சிவஞான முனிவரே சீகண்ட முதல்வர் கூற்றாக நமக்கு விளக்கி அருள்கிறார்: ''அங்ஙனம் ஆகமங்க ளெல்லாம் கேட்டு அருளிய நந்திபெருமான் சீகண்ட முதல்வரை வணங்கி நின்று, சிவாகமம் தோறும் சரியை

முதலிய நாற்பாதங்களும் சிறுபான்மை வேறு வேறாகக் கூறப்பட்டன. அவற்றுள் உண்மையாவது இது என்று அருளிச் செய்ய வேண்டும் என இரந்து விண்ணப்பம் செய்து வினாயவழிச் சீகண்ட முதல்வர் கருணை கூர்ந்து, ''நன்றே வினாயினாய்! அனந்த தேவர் எமக்கு அருளிச் செய்தவாறே கூறுகின்றோம். கேட்பாயாக'' என்றருளிக், ''கற்பம் தோறும் படைப்பு வேறுபாடும் கேட்போர் கருத்து வேறுபாடும் பற்றி அவற்றிற்கு இயையச் சரியை முதலிய மூன்று பாதங்களும் ஆகமங்களில் வெவ்வேறாகக் கூறப்பட்டன. ஆகலான், அவற்றுள், எவ்வாகமத்தின் வழி யார் தீக்கை பெற்றார், அவ்வாகமத்தின் வழி அவர் ஒழுகற்பாலர் இனி, ஞான பாதமாவது பொருள்தன்மை உணர்த்துவதாகலான் அது பலதிறப்படுதல் பொருந்தாமையின், அவையெல்லாம் துலாருந்ததி முறைமைபற்றிக் கூறப்பட்டனவன்றி மாறுகோள் அல்ல என்பது...''

எனவே, சரியை முதலான மூன்று பாதக் கருத்துகள் ஒருவாறு மாறுபட்டு அமைந்தாலும் ஞானபாதக் கருத்து சிவாகமங்களில் சீருற ஒருநெறிப்பட்டே அமைந்து விளங்கும் என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும். மேலும் அமைந்துள்ள ஒரு சிறப்பும் இங்கே நோக்கத்தக்கது.

காமிகம் முதல் ஒவ்வொரு சிவாகமமும் சிவபெருமானுக்கு எந்த எந்த அங்கமாக அமைந்துள்ளது என்பதை முன்னரேயே கண்டோம். சிவாகமத் திருமேனி கொண்டுள்ள சிவபெருமானுக்கு நிவேதனப் பொருளாக அமைவது ஒவ்வொரு சிவாகமத்தின் ஞான பாதமே ஆகும்.

''ஸித்தாந்தேன நிவேதிதம்''

என்று கூறுகிறது காமிக ஆகமம் (1 : 101). 'ஞான பாதமாகிய சித்தாந்தமே பெருமானுக்கு நிவேதனப் பொருள்' என்பது இதன் கருத்து.

வேதங்களின் முடிவுப் பகுதியாக விளங்கும் உபநிடதங்கள் வேதாந்தம் எனும் பொதுப் பெயரால் வழங்கப்படுதல் போன்றே ஆகமங்களின் நான்காவது பாதமாக விளங்கும் ஞானபாதமும் ஆகமாந்தம் என்னும் பொதுப்பெயரால் குறிக்கப்படும். ஆகமாந்தம் என்பதும் சித்தாந்தம் என்பதும் ஒன்றே. 'வேதத்தின் அந்தமும் மிக்க சித்தாந்தமும்'' என்பது திருமூலர் திருவாக்கு (திருமந்திரம் : 2370). சிவாகமங்களில் அமைந்துள்ள ஞானபாதக் கருத்துக்களின் கருவூலமாகத் திகழ்வனவே ஞானாமிர்தம், திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் முதலான சித்தாந்த சாத்திரங்களாகும்.

சிவாகமங்கள் அனைத்திலும் ஞானபாதத்தில் முக்கியமாக விளக்கப்படுபவை பதி இலக்கணம், பசு இலக்கணம், பாச இலக்கணம் என்னும் மூன்றுமேயாம். பசு, பாசத்தினின்று நீங்கிப் பதியை அடைவதற்குரிய சாதனங்களையும், அச் சாதன முறைகளை மேற்கொள்வதால் அடையப்படும் சித்தாந்த முத்தி நிலையையும் ஞானபாதம் விளக்கிக் கூறும்.

இன்று கிடைக்கப்பெறும் மூல ஆகமங்களுள் **சுப்பிரபேதம்**, **சுவாயம்புவம்**. **ரௌரவம்** **மகுடம்**, **கிரணம்**, முதலானவற்றில் மட்டுமே ஞானபாதங்கள் காணப்படுகின்றன. காமிகம், காரணம், அஜிதம் முதலான மூல ஆகமங்களின் ஞானபாதம் கிடைக்கப் பெறவில்லை. மற்றும் சில ஆகமங்களில் ஞானபாதத்தைச் சார்ந்த சிற்சில படலங்கள் மட்டும் காணப்படுகின்றன.

உபாகமங்களுள் ஞானபாதச் செழுமைக்கும் சிறப்பிற்கும் உரியவையாகத் திகழ்பவை **பௌஷ்கராகமம்**, **மிருகேந்திர ஆகமம்**, **மதங்க பாரமேசுவர ஆகமம்**, **தேவிகாலோத்தரம்** என்பவை ஆகும்.

ஒவ்வோர் ஆகமத்திலும் ஞானபாதம் ஒவ்வொரு வகையில் தனிச் சிறப்புடன் அமைந்துள்ளது.

**கிரண ஆகமத்தில்** பசு இலக்கணம், ஆணவமல-மாயா மல வேறுபாடு, சக்திநிபாத விளக்கம், இறைவன் திருமேனி கொள்வதன் நோக்கம் முதலான கருத்துகள் மிக நுட்பமாகவும் தனிச் சிறப்புடனும் பேசப் படுகின்றன. முக்கியமாக அசுத்த அத்துவாவுக்குரிய கருத்தாவாக விளங்கும் அனந்த தேவரின் இயல்புகள் கிரண ஆகமத்தில் விளக்கப்படுவது போல் வேறு எந்த ஆகமத்திலும் விளக்கப்படவில்லை என உறுதிபடக் கூறலாம். ஞானாமிர்தத்தின் அறுபத்து ஆறாவது பாடல் அனந்த தேவரின் இயல்புகளை விளக்குவது அது கிரணாகமக் கருத்துக்களையே எதிரொலிக்கின்றது.

ஒவ்வொரு தத்துவமும் தோன்றும் முறை, அதன் இயல்பு, அதனால் உயிர் எய்தும் பயன், அதில் உள்ள புவனங்கள், அப் புவனங்களின் அதிபதிகள்—இப்படி முறையாகவும் விரிவாகவும் **மதங்க பாரமேசுவர ஆகமம்** கூறுவது போன்று வேறு எந்த ஆகமமும் கூற விலலை.

மூவகை உயிர்வர்க்கங்களின் இயல்புகள், பிந்து தத்துவ மகிமை, மாயையின் இயல்புகள், கன்மம் செயல்படும் முறை, கன்ம சாம்மியம் இன்னது என்பது, இருவினை ஒப்பு இன்னது என்பது, சித்தாந்த அளவை இயல், வாக்குகளின் இயல்பு—இவை முதலான கருத்து நுட்பங்களைத் தனித் தன்மையோடு விளக்கிக்கூறுவது **பௌஷ்கர ஆகமம்** (இது உபாகமமே; மூலாகமம் அன்று).

இறைவனுக்குத் திருமேனியாக அமைந்துள்ள பஞ்சப் பிரம்ம—ஷடங்க மந்திரங்களைப் பற்றிய விளக்கங்

களை விரிவாக அளிப்பது மிருகேந்திர ஆகமம். இந்த ஆகமத்தின் அத்வாப் பிரகரணம் தனிச்சிறப்பு வாய்ந்தது. இறைவனின் ஐந்தொழிலைப் பற்றியும், சத்திநிபாத வகைகளைப் பற்றியும் இந்த ஆகமம் கூறும் நுட்பமான கருத்துக்களை வேறு ஆகமங்களில் காண முடியாது.

இப்படி ஒவ்வோர் ஆகமத்திலும் ஞானபாதம் தனித்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றதை ஆகமங்களை நன்கு பயின்று தெரிந்து கொள்ளலாம்.

## சர்வ ஞானோத்திர ஆகமத்தின் தனிச்சிறப்பு :

ஞானபாத அடிப்படையில் நோக்கும் பொழுது சிவாகமங்களுள் மிகவும் உயர்ந்த நிலையில் தனிச் சிறப்புடன் திகழ்வது சர்வ ஞானோத்தரம் எனப்படும் ஆகமமே.

இது காமிகம் முதலான மூல ஆகமங்களின் வரிசையிலோ மிருகேந்திரம் முதலான உப ஆகமங்களின் வரிசையிலோ இடம்பெறுவதன்று. இது தனிப்பட்ட மூல ஞான ஆகமமாகத் திகழ்வது. ஸ்ரீகண்ட பரமேசுவரர் சுப்பிரமணியப் பெருமானுக்கு உபதேசித்து அருளும் முறையில் இந்த ஆகமம் அமைந்துள்ளது.

கிரண ஆகமம் (வித்யாபாதம் : 11 : 10) சிவாகமங்களை 'ஞானம்' என்ற தனியொரு சொல்லாலேயே குறிப்பிடுகின்றது. ஆகம மரபில் ஞானம் என்பதும் சிவஞானம் என்பதும் சிவாகமங்களையே குறிக்கும். எனவே சர்வ ஞானம் என்பது 'சர்வ சிவாகமம்' அல்லது 'சிவாகமங்கள் அனைத்தும்' எனப் பொருள்படும். உத்தரம் என்பது மேன்மை என்றும் சித்தாந்தம் என்றும் பொருள்படும். எனவே சிவாகமங்கள் அனைத்தி

னுள்ளும் மேலான சித்தாந்தம் என்பது சர்வ ஞானோத்திரம் என்பதன் பொருளாகும்.

காமிகம் முதலான ஆகமங்களில் சித்தாந்த முத்தி இலக்கணம் பொதுவகையாகக் கூறப்படுகின்றது. சர்வ ஞானோத்தரம் என்னும் ஆகமத்தில் அது சிறப்புவகை யாகக் கூறப்படுகிறது. அவ்வாறு சிறப்பு வகையாகத் திகழ்வதால்தான் இந்த ஆகமத்தை உபதேசிக்கும் ஸ்ரீ கண்ட பரமேசுவரர் ''இந்த ஆகமத்தில் கூறப்படும் முத்தி பரம ரகசியம். இந்த ரகசியத்தை இதுகாறும் யாருக்கும் கூறியதில்லை'' என்று தொடங்கி முடிவில் மூன்றுமுறை சத்தியம் கூறி இந்த ஆகமத்தில் விளக்கப் பட்ட முத்தியே பரம முத்தி என அறுதியிட்டு அருளி னார். முன் ஒருவருக்கும் உபதேசம் செய்யவில்லை என்பதாலேயே இந்த ஆகமத்தில் கூறப்பட்ட மேலான முத்திநிலை மற்றைய ஆகமங்களில் கூறப்படவில்லை என்பது தெளிவாகவே விளங்கும்.

இந்த ஆகமத்தின் தனிச் சிறப்பையும் உன்னத நிலையையும் உணர்ந்த சிவஞான முனிவர் தமது மாபாடியத்தில் தகுந்த இடம் வாய்க்கும் பொழுதெல் லாம் சர்வ ஞானோத்தர ஆகமத்தின் பெருமையையும் பொருட்சிறப்பையும் தெளிவுபட எடுத்துரைக்கிறார். சர்வ ஞானோத்தர ஆகம அடிப்படையிலேயே மற் றைய ஆகமக் கருத்துக்களை ஆராயவேண்டும் என்பது சிவஞான முனிவரின் திடமான நெறிமுறையாகும். ''பௌட்கரம் மிருகேந்திரம் மதங்கம் முதலிய சிவாக மங்கள் பௌத்தத்தில் நின்ற நிலைபற்றி இலக்கணம் கூறுதலின் அவை பொது எனவும் சர்வஞானோத்தரம் முதலிய சிவாகமங்கள் முத்தியில் நின்ற நிலைபற்றி இலக்கணம் கூறுதலின் அவை உண்மை எனவும் கூறப் படும் ஆதலின் பௌட்கரம் முதலியவற்றின் பொரு ளுக்கேற்பச் சர்வ ஞானோத்திரம் முதலியவற்றிற்குப்

பொருள் கொள்ளாது சர்வ ஞானோத்திரம் முதலிய வற்றின் பொருளுக்கேற்பப் பௌட்கரம் முதலிய வற்றிற்குப் பொருள் கொள்வர் திருவருள் கிடைத்த நுண்ணறிவினோர் என்றுணர்க'' எனச் சிறப்புப் பாயிர உரையில் சிவஞான முனிவர் கூறுவதை ஆழ்ந்துணர வேண்டும். மேலும், இருடிகளுக்கு உப தேசிக்கப்பட்ட ஏனைய ஆகமங்கள் போல் அல்லாமல் சர்வ ஞானோத்தரம், பரிபக்குவமே சொரூபமாக விளங்கும் கந்தப்பெருமானுக்கு உபதேசிக்கப்பட்டதா கத் திகழ்வதும் இந்த ஆகமத்தின் சிறப்புத்தன்மையைப் புலப்படுத்தும். உபதேசிக்கப்பட்ட முறையின் உயர்வு கருதியும் இதன் தனித்தன்மையை விளங்கிக் கொண்ட சிவஞான முனிவர் சிறப்புப் பாயிர உரையில் இந்த ஆகமத்தின் உயர்வைப் பேசியதோடு அமையா மல் சிவஞான போதம் ஆறாம் சூத்திரத்து இரண்டாம் அதிகரணப் பேருரையில் சர்வ ஞானோத்தர ஆகமத் திற்கு ஒரு சுருக்கமான உரை கூறுவது போன்று இவ் வாகமத்தின் கருத்துகளையெல்லாம் தொகுத்துக் கூறி அருளி இதன் பெருமையைப் பலவாறு பாராட்டிக் கூறுகின்றார்.

சர்வ ஞானோத்தரம் எனப்படும் ஆகமமே, சிவ புராணத்தைச் சார்ந்த வாயுசம்மிதையில் **சர்வாகமோத் தரம்** எனக் கூறப்பட்டுள்ளது.

இந்த ஆகமம் பதி, பசு, பாச இலக்கணங்களைப் பேசுவதே ஆயினும் முப்பொருள் என வகுத்துக்கொள் ளாது நாற்பொருள் என வரையறை செய்துகொண்டு சித்தாந்த நுட்பங்களை உரைக்கின்ற பெரு நூலாகும்.

1) அதிகாரத்தினின்று (அதாவது தொழிற் பாட்டினின்று) நீங்கித் தன்னியல்பில் விளங் கும் சிவம்.

2) அதிகாரம் (ஐந்தொழில்) செய்து நிற்பதாகிய பதி
3) பசு
4) பாசம்.

— இவையே இந்த ஆகமத்தில் விளக்கப்படும் நாற்பொருள் பல உபநிடதங்களிலும் இடம் பெற்றுள்ள "கடாசாய—மகர் காய" உவமையை சைவ சித்தாந்த மரபுக்கேற்ப விளக்கும் பெருமை இந்த ஆகமத்தையே சாரும்.

வடமொழியில் உள்ள இந்த ஆகமத்தின் ஞானபாதம் தமிழ்ச் செய்யுட்களாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆயினும் அவ்வாறு மொழிபெயர்த்தவர் இன்னார் என்பது புலப்படவில்லை. அவர் யாவரே ஆயினும் மிகவும் போற்றப்படுவதற்கு உரியார் என்பதில் ஐயமில்லை. இத் தமிழ்ச் செய்யுட்களுக்கு மிகச் சிறப்பான முறையில் உரை அளித்தவர் சைவப் பெருஞ்சீலர் பொ. முத்தையாப் பிள்ளை அவர்களாவர்.

பார்வதிப் பிராட்டியார்க்குப் பரமேசுவரன் உபதேசித்து அருளிய ஆகமம் தேவீகாலோத்தரம் என்பது. இதுவும் ஞானபாத நுட்பங்களை விளக்கிக் கூறுவதே.

## ஞானபாதப் பயிற்சியின் அவசியம்

பெரும்பாலான சிவாகமங்களின் ஞானபாதங்கள் கிடைக்கப் பெறாதிருத்தல் சைவ உலகிற்குப் பேரிழப்பேயாம். இந்த ஞானபாதங்கள் ஏன் மறைந்து போயின என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆலய வழிபாட்டு முறைகளிலும் ஆன்மார்த்த வழிபாட்டு முறைகளிலும் கிரியைகளுக்கு மட்டுமே முக்கி

யத்துவம் கொடுக்கப்பட்ட காரணத்தால், காலப் போக்கில் ஞானபாதப் பயிற்சி பெரிதும் குறைந்தது. சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்று நெறிகளும் ஞானபாத உண்மைகளை அனுபவ பூர்வமாக உணர்வதற்கு அமைந்தவையே என்ற நுட்பம் உணரப்படாத காரணத்தால், பிற்காலத்தில் ஞானபாதங்கள் பெரிதும் ஒதுக்கப்பட்டுவிட்டன.

ஆலய வழிபாட்டு முறைகளில் ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம், சிவதத்துவம், என்பவையும்,— வாணம், பதம், மந்திரம், புவனம், தத்துவம், கலை எனப்படும் ஆறு அத்துவாக்களும்—

நிவிர்த்தி, பிரதிட்டை, வித்யை, சாந்தி, சாந்திய தீதை எனப்படும் ஐந்து கலைகளும்—

நாள்தோறும் மந்திரங்களாக ஓதப்பட்டு வருகின்றன. ஆனால் இவ்வாறு கிரியைகளில் ஓதப்படும் மந்திரங்களின் உட்பொருள் என்ன என்பதை வழிபாடு செய்வோர் சிந்தித்துப் பார்ப்பார்கள் ஆயின் இம்மந்திரங்கள் அனைத்தும் சிவாகம ஞானபாத நுட்பங்களை உள்ளடக்கியவையே என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம். ஞானபாத நுட்பம் இடம் பெறாத வழிபாட்டு முறை, ஆகம வழிபாட்டுமுறை அன்று.

ஆலய வழிபாடு செய்வோரும் ஆன்மார்த்த வழிபாடு செய்வோரும் இனியாயினும் ஞானபாத நுட்பங்களை நன்கு பயின்றுணர முற்பட வேண்டும். ஞானபாத நுட்பத்தை உணர்ந்து செய்தால்தான் வழிபாடு பூரணப் பயனைக் கொடுக்கும்.

உண்மையில் ஞான பாதம் என்பது ஆகம அளவிலே கூட அடங்கி விடுவதன்று. அது அனுபவித்து

அனுபவித்து அனுபூதி ஞானமாக அடையப்பட வேண்டிய ஒன்று. சனகர் முதலான நான்கு முனிவர்களும் ஞானபாத அனுபவத்தைப் பெற்றதன் சீர்மையை கந்த புராணம் கூறுகின்றது.

''நந்தினாற் கடையைப் போற்ற ஞானநாயகனாம் அண்ணல்
முந்துறை சனகன் ஆதி முனிவரர் தொழுது கேட்ப
அந்தமில் ஆகமத்தின் அரும்பதம் மூன்றும் கூறப்
புந்திய தொடுங்கும் ஞான போதகம் போதி என்றார்

(பதம் மூன்று—சரியை, கிரியை, யோகம்)

''என்னலும் நகைத்தி யாதும் எதிர்மொழி புரிந்தான் அல்லன்
பன்னுவ தன்றால் மற்றிப் பரிசினால் இருத்தல் கண்டீர்
அந்நெறி யாகும் என்றே அனையவர்க் குணர்த்தும் ஆற்றால்
உன்னரும் பரத்தின் மேலோன் ஒருசெயல் புரிதல் உற்றான்,

''இருவரும் உணரா அண்ணல் ஏனவெள் ளெயிறி யாமை
சிரநிறை அனந்த கோடி திளைத்திடும் உரத்தில் சீர்கோள்
கரதலம் ஒன்று சேர்த்தி மோனமுத் திரையைக் காட்டி
ஒருகணம் செயலொன் றின்றியோகுசெய் வாரின் உற்றான்

''இன்னயதோர் தன்மை காட்டி எம்பிரான் உணர்த்தக் கண்டு
சனகனே முதலா உள்ளோர் தவலரும் ஞான போதம்
பனுவலின் அளவன்று என்னும் பான்மையைத் தெரிந்து முக்கண்
புனிதனது அருளால் தத்தம் புத்தியின் ஒடுக்கம் பெற்றார்''

—மேருப்படலம் : 10-13

சிவஞான போதம் என்பது வெறும் நூல் அளவில் அமையக்கூடிய ஒன்றல்ல என்ற காரணத்தால்தான் சாதன இயலும் பயன் இயலும் சிவஞானபோத நூலில் கூறப்பட்டுள்ளன. தத்துவ நுட்பங்களை உணர்ந்தால் மட்டும் போதாது; அந்நுட்பங்கள் ஒவ்வோர் ஆன்மா வின் நுகர்ச்சியாகவும் திகழவேண்டும். ஆகமங்களின் முடிந்த நிலை ஞானபாதம் எனில் ஞானபாதத்தின் முடிந்த நிலை ஞான அனுபூதியே. ஞான அனுபூதியை அடைவதற்குரிய சாதனை நெறிகளே சரியை, கிரியை, யோகம் என்பன. எனவே ஒருபாதம் மட்டும் பயன் தரும் வகையில் தனித்து அமைவதில்லை. சுருங்கக் கூறின் சிவாகமங்களில் உள்ள நான்கு பாதங்களுமே சிவானந்த நிறைவாகிய வாழ்க்கையை நடத்துவதற்கு இன்றியமையாது வேண்டப்படுபவை.

சிவாகமத் திருமேனி தாங்கும் சிவபெருமானுக்கு நிவேதனப் பொருளாக விளங்குவது எல்லா ஆகமங் களின் ஞானபாதம் என்பதன் உட்கருத்து, நிவேதிக் கப்பட்ட பொருள் அருள் வடிவாகி அன்பரின் நுகர்ச் சிக்கு உரியதாதல் போன்று ஞானபாத நுட்பமும் சாதனை நெறியில் உள்ள அன்பரின் ஆன்ம அனுப வத்திற்கு உரியதாகின்றது என்பதேயாம். ஞான பாதப் பின்னணியில்தான் மற்றைய மூன்றுபாதங்களும் சாதனை நெறிகளாக அமைகின்றன. ஞானபாதப் பின்னணி இல்லையாயின், அவை சாதனை நெறியல்ல; சாரமற்ற நெறி. எனவே அன்பர்கள் அனைவரும் சிவாகம ஞானபாதங்களை ஐயம் திரிபறப் பயின்று தத்துவ நுட்பம் உணர்ந்து சிவானுபவ வாழ்க்கையில் திளைக்க முயல்வார்களாக.

# திருமூலர் அருளிய வேதாகமச் சிறப்பு

## வேதம்

வேதத்தை விட்ட அறம்இல்லை வேதத்தின்
ஓதத் தகும்அறம் எல்லாம் உளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே

## ஆகமம்

அஞ்சன மேனி அரிவையொர் பாகத்தன்
அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே.

அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
எண்ணில் இருபத்தெண் கோடிநூ றாயிரம்
விண்ணவர் ஈசன் விழுப்பம் உரைத்தனர்
எண்ணிநின் றப்பொருள் ஏத்துவன் யானே.

பரனாய்ப் பராபரம் காட்டி உலகில்
தரனாய்ச் சிவதன்மம் தானேசொல் காலத்து
அரனாய் அமரர்கள் அர்ச்சிக்கும் நந்தி
உரனாகி ஆகமம் ஓங்கிநின் றானே.

அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
எண்ணிலி கோடி தொகுத்திடு மாயினும்
அண்ணல் அறைந்த அறவறி யாவிடின்
எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே.

—திருமந்திரம்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 25364

காமிகம் முதல் வாதுளம் ஈறாக உள்ள 28 சிவாகமங்களை ஓதி உணர்ந்தோர் உய்வு பெறு வார்கள்.

இந்தச் சிவாகமங்களை உலகம் அறிந்து உய்யும் பொருட்டு, டாக்டர் S. P. சபாரத்தினம் M.A., Ph D., அவர்கள், கூரியமதியும், சீரிய ஒழுக்கமும் உடைய என் ஆப்த அன்பர், ''சைவ ஆகமங்கள் ஓர் அறிமுகம்'' என்ற நூல் இம் மக்களுக்கு வழங்குகின் றார். இது மக்களுக்கு மிகவும் பயனுடைய நூலா கும். அன்பர் சபாரத்தினம் அவர்கள் சிவாகமங்க ளைத் தெள்ளத் தெளிவாக ஆராய்ந்துள்ளார். இதனை எல்லோரும் படித்து இன்புறுவார்கள். இத்தகைய நூல்கள் உலகத்திற்கு மிகவும் பயன் படும்.

''கற்றறிந்தவரென அடங்கி'' என்று கம்பநாடர் கூறியபடி சபாரத்தினம் அவர்கள் அடக்கமே வடிவானவர். ஆழ்ந்த பக்தியும் நுட்ப திட்பமான அறிவுத் திறனும் உடையவர். இவர் இத்தகைய நூல்களை மேலும் எழுதி வழங்குவாராக. சைவ உலகம் சபாரத்தினம் அவர்களுக்கு கடப்பாடு உடையது.

அன்பன்,
கிருபானந்தவாரி

அப்பர் அச்சகம், சென்னை-108.